கவிஞர் முருகு சுந்தரம்

பாவேந்தர் படைப்பில் அங்கதம்

பாவேந்தர் படைப்பில்
அங்கதம்

சேகர் பதிப்பகம்

BIBLIOGRAPHICAL DATA

Title	:	PAAVENDHAR PADAIPPIL ANGATHAM
Editor	:	MURUGU SUNDARAM
Copy Right	:	**Author**
Subject	:	Articles of Tamilology
Language	:	Tamizh
Edition	:	First
Published	:	December, 2001
Type Point	:	12 Pt.
Paper Used	:	White Printing 13 kg. Demmy
Size of the Book	:	21 x 14 cms
No. of Pages	:	188
No. of Copies	:	1000
Publisher	:	Sekar Pathippagam 66/1, Periyaar Street, M.G.R. Nagar, Chennai - 78.

Price	**Rs. 70.**

பாவேந்தர் படைப்பில் அங்கதம்

கவிஞர் முருகு சுந்தரம்

சேகர் பதிப்பகம்

66/1, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,

சென்னை - 600 078. ✆ 471 43 25

முதல் பதிப்பு : ஆகஸ்ட், 2001

விலை ரூ. 70.



லேசர் வடிவமைப்பு :
கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்
10, புலியூர் 2வது பிரதான சாலை,
டிரஸ்ட்புரம், சென்னை - 24.

அச்சிட்டோர் :
லைனோ ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை - 24.

உள்ளடக்கம்

இந்நூலைப்பற்றி.... 7

பதிப்புரை 11

இலக்கியம்

1. பாட்டும் பறவையும் 13
   மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில்
   19.2.2000 பாரதிதாசன் கருத்தரங்கில்.
2. பாவேந்தர் படைப்பில் அங்கதம் 32
3. காந்தியம் பாடிய கவிக்குயில் - பாரதிதாசன் 59
   1998 காந்தியடிகள் பிறந்த நாள்,
   கோவை வானொலியும் கோவை காந்தி
   அமைதி நிலையமும் நடத்திய சிறப்புக் கருத்தரங்கம்
4. மகாகவி பாரதிதாசன் 69
   தில்லித் தமிழ்ச்சங்கம், பாவேந்தர் நூற்றாண்டு விழா மலர்.
5. கம்பனும் பாரதிதாசனும்-நேருக்கெதிர் நோக்கு 81
   மீண்டும் கவிக்கொண்டல் ஏப்ரல், 2001 இதழ்
6. புதுக்கவிதையில் இருண்மை 87
   ஜூன் 2000, கோடைக்கானல் - ஞாலத் தமிழ்ப்
   பண்பாட்டுப் பேரவை ஆய்வரங்கு
7. ஒதெல்லோ ஒரு மன நோயாளி 107
8. இராதையும் நப்பின்னையும் 117
   1997 ஓம் சக்தி தீபாவளி மலர்
9. இராபர்ட் பிரௌனிங் சிந்தனைகள் 126
   மே, 2000 திருச்சி வானொலி - சிந்தனைத் தொடர்

வரலாறு

10. அதனால்தான் அவர் கவிக்கோ 139

கவிக்கோ அப்துல் ரகுமான் மணிவிழா மலர்க்கட்டுரை

11. கவிஞர் கம்பதாசன் ஓர் எரிநட்சத்திரம் 147

கவிக்கோ கவிதை இதழ்; ஏப்ரல் - ஜூன் 2000

12. கவிஞர் திருலோக சீதாராம் 156

கவிக்கோ கவிதை இதழ் - அக்டோபர் - டிசம்பர் 2000

13. புரட்சித் துறவிகள் 169

தினமணி நடுப்பக்கக் கட்டுரை

அரசியல்

14. காஷ்மீரும் காஷ்மீர் ரோஜாவும் 176

தினமணி நடுப்பக்கக் கட்டுரை

15. சூதாட்டக் கலாச்சாரம் 185

தினமணி நடுப்பக்கக் கட்டுரை







இந்நூலைப் பற்றி...

தூண்டும்போதுதான் விளக்கு சுடர்விட்டு எரிகிறது. இலக்கிய நண்பர்கள் தூண்டும் போதுதான் எழுத்தாளன் சிந்தனையில் விழிப்பும், சுறுசுறுப்பும் ஏற்படுகின்றன. எனக்குத் தூண்டு கோள்கள் வானொலி நிலையங்களும், பாவேந்தர் பேரவைகளும், பல்கலைக் கழகக் கருத்தரங்குகளும் என்று சொன்னால் தவறில்லை.

மதுரை காமராசர் பல்கலைக்கழகமும், ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றமும் பாவேந்தரைப் பற்றியும், தற்காலக் கவிதையைப் பற்றியும் நுட்பமாகச் சிந்திக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கின.

பல்வேறுபட்ட செறிவான சிந்தனைகளும், கிளர்ச்சியூட்டும் நாடகக் காட்சிகளும், ஆழமான உணர்வுகள் குமுழியிட்டுப் பொங்கி வழியும் ஊற்றுப் பேரழகும் கொண்டவை ஆங்கிலக் கவிஞன் இராபர்ட் பிரௌனிங்கின் கவிதைகள். அவனும் கவிஞர் எலிசபெத் பேரட்டும் நடத்திய காதல் வாழ்க்கை, ஆங்கில இலக்கிய வரலாற்றின் பொன்னேடுகள்.

பிரௌனிங்கின் கவிதைக்குள் அவ்வளவு எளிதாக யாரும் நுழைந்து விட முடியாது. திக்குத் தெரியாத காட்டில்

வளைந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப்பாதை என்று அவன் கவிதையைப் பற்றித் திறனாய்வாளர் கூறுவர். அக்காட்டுக்குள் நுழைந்து கனிகளைப் பறித்துவரும் வாய்ப்பை எனக்கு நல்கிய திருச்சி வானொலி நிலையத்தாருக்கு என் நன்றியைக் கூறாமல் இருக்க முடியாது.

நானறிந்த ஒரு பேராசிரியர் வெளியில் செல்லும்போது, தம் மனைவியை வீட்டுக்குள் வைத்துப் பூட்டி விட்டுச் செல்வார். இக்கொடுமையைப் பற்றி இலக்கிய ஆர்வம் மிக்க ஒரு மருத்துவ நண்பரிடம் பேசிக் கொண்டிருந்த போது, அவர் கீழ்க் கண்டவாறு விளக்கம் தந்தார்:

“இது ஒரு வகை மனநோய். மருத்துவ நூலார் இதை மனமயக்கம் (Delution) என்பர். உண்மையல்லாத ஒன்றை உண்மையென நம்பி உள்ளத்தைக் குழப்பிக் கொண்டு, உள்ளம் செலுத்தும் தவறான வழியிலேயே செல்வது இந்நோயின் தன்மை. ஒதெல்லோ இவ்வகை நோயாளிக்குச் சரியான எடுத்துக்காட்டு. கற்புள்ள தன் மனைவியைக் கற்புக் கெட்டவளாக எண்ணித் தாறுமாறாக நடந்து கொள்வது, இந்நோய்க் கூறுகளில் ஒன்று.”

ஒதெல்லோ ஒருமனநோயாளி என்ற கட்டுரைக்கு இதுவே வித்து.

பாரதிதாசனிலிருந்து கடந்த ஐம்பது ஆண்டுகளாக நான் பழகிய கவிஞர்கள் பலர். ஒவ்வொரு கவிஞரும், ஒவ்வொரு வகையில் என்னைப் பாதித்துள்ளனர். அவர்களோடு பழகிய காலத்தில் என் உள்ளத்தில் பதிந்த பசுமையான நினைவுகளைச் சில கட்டுரைகளில் பதிவு செய்திருக்கிறேன்.

‘பெரியார்’ என்று சொன்னால் தமிழகத்தில் ஈ.வெ.ரா.வையே குறிக்கும். அதுபோல் கேரளத்தில் குரு என்று சொன்னால் நாராயண குருவையே குறிக்கும். வடலூர் வள்ளலாரைப் பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம் நாராயண குரு நெஞ்சில் வந்து நிற்பார். இருவருக்கும் நிறைந்த ஒற்றுமை. அதன் விளக்கமே புரட்சித் துறவிகள்.

கிருஷ்ணனும் இராதையும் யமுனைக்கரைப் பிருந்தாவனக் காதலர்கள். கண்ணனும் நப்பின்னையும் தமிழ்நாட்டு முல்லைவனக் காதலர்கள். இராதையும் நப்பின்னையும் என்ற கட்டுரை இவர்களைப் பற்றிய சிறு ஆய்வு.

என்னதான் இலக்கியத்தில் நம் உள்ளம் படிந்திருந்தாலும், நாட்டின் தினசரி நடப்புகள் நம்மையும் அறியாமல் நம் உள்ளத்தை உசுப்பிவிடுகின்றன. அப்போது அரசியலையும் ஊறுகாய் போல் தொட்டுக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அப்படி எழுதப்பட்ட 'தினமணி' நடுப்பக்கக் கட்டுரைகள் சிலவும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன.

4/100, கான்வெண்ட் வீதி,
அழகாபுரம் வடக்கு
சேலம் - 636 016.

முருகு சுந்தரம்

பதிப்புரை

மனித நெஞ்சங்களைப் பண்படுத்தி மாண்புறச் செய்வது இலக்கியம். இலக்கியங்கள் பூஞ்சோலைகள். புறாக்களும் மானும் மயிலும் குயிலும் தேன்சிட்டுகளும் நிறைந்த இயற்கையின் எழிலாட்சி நடத்தும் பூங்காக்கள் இன்பம் தருவன. கண்களுக்கு விருந்தாகும்போதே கருத்திலே சத்தூட்டமாகவும் ஊறிப் பயன் வளர்க்கிறது இயற்கை.

கவிஞர்களின் பார்வையும் எண்ணமும் கவிதைமலர்களாய் மலர்கின்றன. மென்மையும் வண்ணமும் தோற்றமும் மிடைந்து மிளிரும் கவிமலர்களை மலரச் செய்யும் மாபெரும் திறன் கவிஞர்களிடம் அமைந்துவிடுகிறது.

பாரதியாரைப் பாராதோர் பாரதிதாசனாரைப் பார்த்தனர். அவரது அடிச்சுவட்டில் கவிஞர்கள் பலர் அணி வகுத்தனர். தமிழகம் கண்டது புதுமை! பெருமை!

பாட்டுள்ளங்கள் நாட்டுள்ளங்கள்; மக்களை நெறிப்படுத்தும் ஏட்டு உள்ளங்கள்; கவியுள்ளங்கள்!

கவியுள்ளமும் கனிவுள்ளமும் கொண்டவர் முருகு சுந்தரம் அவர்கள். இவர் சேலத்துச் சுவைமாங்கனி! பாட்டுலகின் வேட்டைக்காரர்! பண்புக்கமைந்த பாட்டைக்காரர்; செந்தமிழ்த் தோட்டக்காரர்.

தேர்ந்த சுவைஞரான சேலத்துக் கவிஞர் நாடறிந்தவர். பல நூல் பயின்றவாறே பல நூல்களையும் தந்து வருபவர். ***வெள்ளையானை***யை வளர்த்துவிட்ட வள்ளல் இவர்.

குமுகாயச் சிந்தனையில் கொள்கையுடன் வாழ்ந்து வருபவர். நிகழ்வுகளின் நெருக்கத்தில் நெஞ்சச் சுமைகளை நிரல்பட எடுத்து வைப்பதில் நிகரற்றவர்.

அலையாடும் நெஞ்சில் விளையாடும் முத்துகளே நிலையான மாலைகளாயின. விலைபோகும் என்பதால் வெளிப்படுகின்றன.

உள்நாடும் வெளிநாடும் உள்ளங்களால் உறவாகின்றன. ஒருலகம் ஒரு குடும்பம் எனச் சுருங்குகிறது. மனித நேயமும்

இயற்கை இன்பமும் கவிதையின் சாரமல்லவா? அன்பு என்பதே நெஞ்சின் ஈரமல்லவா?

எங்கெங்கு கவிதை நெஞ்சம் இருந்தாலும் அங்கெல்லாம் உணர்வு ஓங்கி உறவு கொள்கிறது, ஒன்றிப் போகின்றது. இதுவே கவிப்போக்கு.

பல்சுவைப் பகுதிகளுடன் பலாச்சுளைகளாய்ப் படைத்துள்ள கருத்துகள் பலருக்கும் இனிக்கும்; பயன் வளர்க்கும்.

காலம், இடம் கடந்த உணர்வுகள் இங்கே களங்கண்டுள்ளன. ஆரவாரமற்ற அலைகள்; அழகிய வீணையின் அரிய இன்னிசை! மெல்லென எழுந்து நல்லன விளக்கும் சொல்லோவியங்கள்! அங்கதம் எனப்படும் எள்ளல் வகைதான் எத்தனை எத்தனை! எடுத்து விருந்து படைக்கிறார். பாவேந்தரின் படைப்புத் திறனை பலவாறு விளக்குகிறார். படிக்க வேண்டியவை. வடலூர் வள்ளலார் முதல் வாடாத கவிஞர் அப்துல் ரகுமான் வரையும் அவர்களின் வாழ்வியல் நெறிகளை வரைபடமாக்கி வரிசைப்படுத்தியுள்ளார் கவிஞர்.

முத்தமிழ் வேந்தரை ஒற்றுமையாக்கி வைத்தவர் இளங்கோ அடிகள். புரட்சித் துறவிகளைப் படம் போட்டு இவர் எடுத்து விளக்குவது புதிய பார்வை. அண்டை அயல் பக்கம் அறிவைச் செலுத்தாமல், தமக்குத் தாமே சிறைப்பட்டு முடங்கிக் கிடக்கும் எழுத்தாளர்களில் இவர் ஒரு தனிப்பறவையாகிறார்! தாண்டி நடக்கிறார்!

எல்லார்க்கும் இனியராம் ஈரநெஞ்சர் திருலோக சீதாராமும் எரிநட்சத்திரமாய் ஒளிகாட்டி உதிர்ந்த கம்பதாசனாரும் மறக்கப்படாமல் இருக்க, மனம் திறந்து உரைச்சித்திரம் தீட்டியுள்ளார் முருகு சுந்தரனார்.

பல்சுவைப் படையலாய், பயன்படும் பனுவலாய், பரிசுக்குரிய புதையலாய் இந்நூல் வருகிறது. கவிஞரின் அன்புக்கு நன்றி! கண் பருந்துக்குக் கருத்துணவாகும் கட்டுரைப் பெட்டகம் தந்து மகிழ்கிறோம். தமிழ் மனம்/மணம் தழைக்கத் தணியா துழைப்போம்!

அன்புடன்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்.

1

பாட்டும் பறவையும்

பறவைகள் -

அழகின் மேய்ச்சல்!

இயற்கையின் இடப்பெயர்ச்சி!

பறக்கும் கவிதை!

பறவைகளைப் பாடாத புலவரில்லை. சங்கப் புலவர்களும் காப்பியப் புலவர்களும் பாடினர்; பிரபந்தப் புலவர்கள் தமது கற்பனையில் பறவைகளுக்குச் சிறப்பிடம் கொடுத்துப் பாடினர்.

தூதுப் பிரபந்தங்களில் கிள்ளையும் குயிலும் காப்பியத் தலைவர்களுக்கு ஒப்பாகப் பாரட்டப் பெற்றன.

காமவேளின் தசாங்கங்களில் கிள்ளை வாகனமாகவும், குயில் எக்காளமாகவும் இடம் பெற்றுள்ளன.

கிள்ளை பேசும் பறவை. குயிலும் வானம்பாடியும் பாடும் பறவைகள். மயில் ஆடும் பறவை.

வானம்பாடி இரவில் பாடும்; குயில் இளவேனில் பருவத்தில் மாலையிலும் விடியற்காலையிலும் பாடும். மேலை நாடுகளில் கக்கூ, நைட்டிங்கேல், லார்க் என்ற பாட்டுப் பறவைகள், இலக்கியங்களில் பரவலாகப் பேசப்படுகின்றன.

மில்டன் தனது கவிதையில் நைட்டிங்கேலைப் பற்றிக் குறிப்பிடும்போது, ‘உன் வாயிலிருந்து அமுததாரை

வழிந்தால், பகல் தன் கண்களை மூடிக் கொள்கிறது' என்று குறிப்பிடுகின்றான்.

உலகப் பெருங் கவிஞன் ஷேக்ஸ்பியரின் காதற் காவியமான ரோமியோ ஜூலியத்தில் நைட்டிங்கேலும், லார்க் என்ற பறவையும் ஓரிடத்தில் குறிப்பிடப்படுகின்றன.

ரோமியோ ஒருநாள் இரவில் கள்ளத்தனமாகத் தன் காதலியைச் சந்திக்கிறான். இரவு அவர்களுக்கு வேகமாகக் கழிகிறது. கிழக்கு வெளுக்கிறது. பறவைகளின் ஒலியைக் கேட்டு, அவசரமாகத் தன் காதலியிடம் விடைபெறுகிறான் ரோமியோ. அப்போது ஜூலியட்,[1] "அன்பே! தன் குரலால் உங்கள் காதைக்கிழிப்பது, விடியலில் பாடும் லார்க் அன்று; இரவில் பாடும் நைட்டிங்கேல்!" என்று சொல்லி அவனைத் தடுக்கிறாள்.

எனவே நைட்டிங்கேல் இரவிலும், லார்க் விடியலிலும் பாடும் பறவைகள் என்பது தெரிகிறது. கக்கூ மாலை நேரத்தில் பாடும் பறவை.

தமிழ் இலக்கியங்களில் குயிலும், மயிலும், கிள்ளையும் இடம் பெற்ற அளவு வானம்பாடி இடம் பெறவில்லை. வானம்பாடியைப்பற்றிப் பாரதிதாசன் தான் பாடியுள்ளார். சிட்டுக்குருவியைப்பற்றிப் பாரதி, பாரதிதாசன் இருவருமே பாடியிருக்கின்றனர். காதலரைப் பிரிக்கும் வன்னெஞ்சப் பறவையாகக் கோழி சங்கப் பாடலிலும், பிற்காலப் புலவர்கள் பாடலிலும் இடம் பெற்றுள்ளது.

புறாவைப் பற்றி, இறவாத பாடல்களை எழுதிக் குவித்திருக்கிறார் பாரதிதாசன்.

கவிஞனும் இயற்கையும்

இயற்கையை[2] "அழியாத மண்ணின் கவிதை" என்று கீட்சு பாடுகிறான். இதிலிருந்து கவிஞனுக்கும்

இயற்கைக்கும் உள்ள நெருக்கம் புலனாகிறது. கவிஞன் உள்ளம் இயற்கையோடு எளிதில் ஒட்டிக் கொள்கிறது; அதில் கரைந்தும் விடுகிறது. சாதாரண மக்களின் கண்களுக்குப் புலப்படாத விந்தைகள் கவிஞன் கண்ணெதிரே அணிவகுத்து நிற்கின்றன.

கவிஞன் கையில் எழுதுகோலைத் தூக்கியதும், இயற்கைக் கருவூலம் அவன் எதிரில் தானாகத் திறந்து கொள்கிறது. இயற்கைக் காட்சிகள், அவனுடைய கற்பனையில் குளிக்கத், திறந்தமேனியோடு போட்டி போட்டு நிற்கின்றன. கனவு மயக்கத்தில் கவிஞன் இருந்தாலும், அவனைத் தட்டி எழுப்புகின்றன. இதைத்தான் பாரதிதாசன் கீழ்க் கண்டவாறு பாடுகிறார் :

> ஏடெடுத்தேன் கவிஒன்று வரைந்திட
> என்னை எழுதென்று சொன்னது வான்!
> ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
> ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்!
> காடும் கழனியும் கார்முகிலும் வந்து
> கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
>
> சோலைக் குளிர்தரு தென்றல் வரும்; பசுந்
> தோகை மயில்வரும் அன்னம் வரும்;
> மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்
> மாணிக்கப் பரிதி காட்சி தரும்.

காலைச் செங்கதிர் கண் விழித்ததும் உழவன் கலப்பையை எடுத்துக் கொண்டு வயற்காட்டுக்குப் புறப்படுகிறான். பால்காரி கூடையைச் சும்மாட்டில் ஏற்றி, இடையசைத்து நகரத்தை நோக்கி நடக்கிறாள். தளர்ந்த பெரியவர் தாடையில் போட்டுக் கொண்டு கதிரவனைத் தொழக் கை கூப்புகிறார். ஆனால் கவிஞன் மட்டுமே-

> எழுந்தது செங்கதிர் தான்
> கடல்மிசை! அடடா எங்கும்
> விழுந்தது தங்கத் தூற்றல் -

என்று துள்ளிக் குதிக்கிறான். கதிரவனின் சுடுவெயிலுக் கஞ்சி நாம் குளிர்நிழலைத் தாவுகிறோம். ஆனால்,

வெயிலைப் போல் அழகான
பதார்த்தம் இல்லை - என்று

பாரதியால்தான் கூற முடிகிறது. இயற்கை, கவிஞனின் ஐம்புலன்களையும் தன்பால் கவர்ந்து இழுப்பதற்குக் காரணம் இயற்கையோடு பிரிக்க முடியாதபடி ஒன்றியிருக்கும் அழகுதான். அழகை நிலையான பேரின்பமாகக் கவிஞர்கள் கருதுகின்றனர். எங்கு அழகு தன் சிறகை விரிக்கிறதோ, அங்கெல்லாம் கவிஞன் பறந்து செல்கிறான்.

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப்பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்

என்று பாரதிதாசன் பாடுவதற்கு இயற்கை குவித்து வைத்த அழகே காரணம். 'நல்லழகு வசப்பட்டால், துன்பம் இல்லை' என்பது அவர் கருத்து.

பாரதிதாசன் உள்ளம் இயற்கையில் எவ்வாறு கரைகிறது என்பதை அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பு ஒருமுறை எனக்கு ஏற்பட்டது. பாரதிதாசன் சென்னை இராமன் தெருவில் குடியிருந்தபோது, ஒருநாள் முன்னிரவில், அவரோடு முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். திடீரென்று அவர் பேச்சு நின்றது. 'எங்கிருந்து வருகிறது இந்தக் கடிமணம்?' என்று என்னைப் பார்த்துக் கேட்டார். உடனே நான் மணம் வந்த திசைநோக்கிச் சென்றேன். அவர் வீட்டு வேலியில் 'நைட்

குவீன்' என்ற செடி கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தது. ஒரு கொத்தை ஒடித்து வந்து அவர் கையில் கொடுத்துவிட்டு நான் உறங்கச் சென்று விட்டேன். அம்மலர்க் கொத்தை நீண்ட நேரம் மூக்கில் வைத்து முகர்ந்து கொண்டிருந்தார்.

காலையில் எழுந்ததும் நான் கவிஞரின் படுக்கையறைக்குள் சென்றேன். அவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர் படுக்கைக்கு அருகில் ஒரு தாள் கிடந்தது; எடுத்துப் பார்த்தேன். **இரவின் இளவரசி** என்ற தலைப்பில் ஒரு கட்டளைக் கலித்துறை அதில் எழுதப்பட்டிருந்தது.

கரவில் இருந்தொரு மங்கையென்
மூக்கில் கடிமணத்தை
வரவிடு கின்றாள், வரவில்லை
என்னெதிர் வாயிதழைத்
தரவில்லை உண்ணவும், என்றேனென்
தோழனும் தையலவள்
இரவின் இளவரசிப் பெயர்ப்
பூவென் றியம்பினனே.

அழகோவியம்

கவிஞன் ஓர் இயற்கைக் காட்சியைக் காணும்போது, அதன் அழகில் ஈடுபடுகிறான்; பின்னர் அந்த அழகில் தன்னையிழந்து மெய்மறக்கிறான். அந்த அழகுக் காட்சிகள் அவன் உள்ளத்தில் ஓவியங்களாகப் பதிகின்றன. தன் உள்ளத்தில் பதிந்த ஓவியக் காட்சிகளுக்கு உயிர்கொடுத்து நிலைபேறுடைய படிமங்களாக (Image) ஆக்கி உலக மக்களின் நெஞ்சத்தில் நிறுத்துகிறான். கவிதையைப் படிக்கும் போதெல்லாம், இந்த அழகோவியங்கள் திரைப்படங்களாக நம் நெஞ்சத்தில் ஓடுகின்றன.

பாரதிதாசன் தமது கவிதையில் அடுக்கடுக்காக ஓவியம் தீட்டுவதில் வல்லவர் மயிலின் தோகையில் எத்தனை ஓவியங்கள்!

உனது தோகை புனையாச் சித்திரம்
ஒளிசேர் நவமணிக் களஞ்சியம் அதுவாம்!
ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்.

தாமரை இலைத் தண்ணீர்த் துளிகளைக் கண்ணாடியில் தீட்டப்பட்ட ஓவியமாகவே வடித்துக் காட்டுகிறார் பாரதிதாசன்.

கண்ணாடித் தரையின் மீது
கண்கவர் பச்சைத் தட்டில்
எண்ணாத ஒளிமுத் துக்கள்
இறைந்தது போல், குளத்துத்
தண்ணீரிலே படர்ந்த
தாமரை இலையும் மேலே
தெண்ணீரின் துளியும் கண்டேன்;
உவப்போடு வீடு சேர்ந்தேன்.

புறாவுக்கு ஒழுக்கமான ஓர் உணவுப்பழக்கம் உண்டு. முண்டியடித்து முட்டிமோதும் பழக்கம் அவசர வாழ்க்கை வாழும் மனிதருக்குத்தான் உண்டு. பாரதி தாசனைக் கவர்ந்த இவ்வொழுக்கம் அழகான ஓவியமாகிறது.

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரிந் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்...

புறாக் கூண்டை மூடுவது கூட, ஓவியத்தைத் திரையிட்டு மூடுவதாகத்தான் அவருக்குப் படுகிறது.

கூட்டினில் மயலன் வந்து
சாத்தினான், குழைத்து வண்ணம்
தீட்டிய ஓவியத்தைத்
திரையிட்டு மறைத்தல் போலே!

வண்ணங்கள்

கவிஞர்களின் கட்புலனுக்கு வண்ணங்கள் எப்போதும் பெருவிருந்தாக அமைவதுண்டு. இயற்கை தன் உடலில் பூசியிருக்கும் வண்ணக் கலவைகளையும், வண்ண வேறுபாடுகளையும் அவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள்; அவற்றை மெருகு குலையாமல் கவிதையிலும் தீட்டி விடுகிறார்கள்.

ஆங்கிலக் கவிஞர்களுள் கீட்சை வண்ணக் கவிஞன் (Poet of colour) என்று சிறப்பாகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவனுக்கு இரத்தச் சிவப்பு (Crimson) மிகவும் பிடித்தமான வண்ணம். இந்த வண்ணத்தை வைத்துக் கொண்டு கவிதையில் அவன் சித்து விளையாட்டு நிகழ்த்துகிறான்.

கோப்பையில் நுரைத்துத் ததும்பும் மதுவைச் 'சிவந்த மது' என்று அவன் குறிப்பிடவில்லை. 'நாணம் ததும்பும் மது' (The blushful Hippocrene) என்று குறிப்பிடுகிறான். பெண் நாணும்போது அவள் கன்னத்தில் படர்வது இரத்தச் சிவப்பன்றோ?

பாரதிதாசனுக்கும் வண்ணங்களில் அளவற்ற ஈடுபாடு உண்டு. இயற்கையில் படிந்துள்ள வண்ண வேறுபாடுகளை எப்படியெல்லாம் பதிவு செய்ய முடியுமோ அப்படியெல்லாம் பாட்டில் பதிவு செய்கிறார்.

கவிதையில் வண்ண மாயங்களைப் பதிப்பதைப் பாரதிதாசனுக்கு ஒப்பாக வேறு எந்தக் கவிஞரையும் குறிப்பிட முடியாது. கவிதை ஆற்றலோடு ஓவிய நுட்பமும் கைவரப் பெற்றவர் அவர் என்று சொல்லலாம்.

குயிலை, பொதுவாகக் கருங்குயில் என்போம். ஆனால் குயில் கறுப்பில்லை. அதன் கறுத்த மேனியில் இலேசாகத் தங்கமுலாம் பூசியதுபோல் இருக்கும். இந்த மாயம் பாரதிதாசனின் கூர்த்த கட்புலனுக்குத் தான் தட்டுப்பட்டது.

செங்கதிர் சீர்க்கையால்
பொன்னள்ளிப் பூசிய
கங்குல் நிகர்த்த
கருங்குயிலே கூவாயோ

என்று பாடிய பாரதிதாசன், அந்தி வானத்தின் செங்கதிர்ப் பூச்சைக் குயிலின் நிறத்தோடு ஒப்பிட்டு எப்படி மகிழ்ந்திருக்கிறார் என்பது புலனாகும்.

வீட்டில் புறா வளர்க்கும் பழக்கம் கவிஞர் பாரதிதாசனுக்குண்டு. புறாக்கள் முற்றத்தில் கூடி இரையுண்ணும் அழகை அருகில் அமர்ந்து நீண்ட நேரம் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருப்பார். புறாக்களின் வண்ணங்கள் அவருக்கு அத்துபடி. அவ்வண்ணங்களை அடுத்தடுத்த படிமங்களில் அழகாகத் தீட்டுகிறார்.

இருநிலா இணைந்து பாடி
இரையுண்ணும்; செவ்விதழ்கள்
விரியாத தாமரை போல்
ஓரிணை! மெல்லி யர்கள்

கருங்கொண்டை! கட்டி ஈயம்!
காயாம்பூக் கொத்து! மேலும்
ஒருபக்கம் இருவா ழைப்பூ!
உயிருள்ள அழகின் மேய்ச்சல்!

இப்பாடலில் வண்ணத்தையும் வடிவத்தையும் ஒருங்கே பதிவு செய்திருக்கும் நயம் போற்றற்குரியது.

நாடகக் காட்சி

இயற்கையின் படைப்புக்களான பறவைகளை, உயிரோவியங்களாகத் தீட்டிக் காட்டிய பாரதிதாசன், சில நாடகக் காட்சிகளையும் கவிதையில் வடிக்கிறார்.

நாடகம் என்பது உணர்ச்சி மோதல்களின் வெளிப்பாடு. மாந்தரிடத்தில் காணப்படும் காதல், வீரம், அவலம், தாயன்பு, பகைமை, சீற்றம், போர்க்குணம் ஆகிய

இயல்பூக்கங்கள் (instincts) பறவைகளுக்கும் உண்டு. இவ்வுணர்ச்சிகள் பொங்கி வழியும் போது நாடகக் காட்சிகளாக அமைகின்றன. அக்காட்சிகளில் நடிக்கும் பறவைகளின் மெய்ப்பாடுகளையும் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் பாரதிதாசன்.

புறாக்கள் காதலிப்பது போல் மனிதர்கள் கூடக் காதலிக்க முடியுமா என்று ஐயம் ஏற்படும்படி ஒரு காதல் நாடகம் :

தலைதாழ்த்திக் குடுகு டென்று
தனைச்சுற்றும் ஆண் புறாவைக்
கொலைபாய்ச்சும் கண்ணால், பெண்ணோ
குறுக்கிற் சென்றே திரும்பித்
தலைநாட்டித் தரையைக் காட்டி,
இங்குவா என அழைக்கும்;
மலைகாட்டி அழைத்தா லுந்தான்
மறுப்பாரோ மையல் உற்றார்.

தாயர் குழந்தைகளுக்கு உணவூட்டுவதை நாம் நாள்தோறும் காண்கிறோம். அப்போது தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் நடைபெறும் அன்பு நாடகம் உள்ளத்தை நெகிழ்விக்கும் தன்மையது. அது போன்ற ஒரு நாடகக் காட்சியைக் கவிஞர் சிறப்பாக நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார்.

தாய் இரை தின்ற பின்பு
தன்குஞ்சைக் கூட்டிற்கண்டு
வாயினைத் திறக்கும்! குஞ்சு
தாய் வாய்க்குள் வைக்கும் மூக்கைத்;
தாய் அருந்தியதைக் கக்கித்
தன்குஞ்சின் குடல்நிரப்பும்;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!
அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்.

குழந்தைக்குத் தாய் மட்டுமே நம் வீடுகளில் கொஞ்சிக் கொஞ்சி உணவூட்டுவதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால் குஞ்சுகளுக்குத் தாயும் தந்தையும் மாறிமாறி உணவூட்டும் அன்புப் பரிமாற்றத்தைப் பறவைகளிடம் தானே காணமுடிகிறது; காய்ச்சிய பசுப்பாலையோ, சுவைநீரையோ, இளநீரையோ அருந்தும்போது அவற்றின் சுவையில் நாம் ஆழ்ந்து விடுகிறோம். அப்போது முகம் மலர்கிறது; நாக்கு சப்புக் கொட்டுகிறது. குடித்து முடித்தவுடன் முகத்தில் ஒரு நிறைவு ஏற்படுகிறது. கைக்குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டு புத்துணர்ச்சியோடு நடை போடுகிறோம். இவை யாவும் அப்போது நம்மிடத்தில் தோன்றும் மெய்ப்பாடுகள்.

புறா நீர் அருந்தித் தன் வேட்கையைத் தணித்துக் கொள்ளும்போது, அதனிடத்தில் தோன்றும் மெய்ப்பாடுகளைப் பாரதிதாசன் இனிய நாடகமாக்கிக் காட்டுகிறார்.

அகன்றவாய்ச் சட்டி ஒன்றின்
விளிம்பினில் அடிபொ ருந்தப்,
புகும்தலை; நீர்வாய் மொண்டு
நிமிர்ந்திடும்; பொன் இமைகள்
நகும்; மணி விழி நாற் பாங்கும்
நாட்டிடும்; கீழ்இறங்கி
மகிழ்ச்சியாய் உலவி, வைய
மன்னர்க்கு நடைகற் பிக்கும்.

நாடகத்தில் காணப்படும் 'கம்பீரராஜநடை' இங்கும் இடம் பெறுகிறது.

நாடகம் என்றால் அதில் நாட்டியம் இருக்க வேண்டு மன்றோ? ஆடல்மகளான மயில் ஆடுகிறாள். எப்படி? தன் பக்க வாத்தியங்களோடு. அந்நாட்டியத்தை வியப்பார்வத்தோடு பாராட்டுகிறார் பாரதிதாசன்.

அழகிய மயிலே அழகிய மயிலே!
அஞ்சுகம் கொஞ்ச, அமுத கீதம்
கருங்குயி லிருந்து விருந்து செய்யக்

கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்,
தென்றல் உலவச், சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத் தூன்றி அங்கம் புளகித்து
ஆடுகின்றாய் அழகிய மயிலே!

ஆடற்கலைக்குப் பாவமும், அடைவும் முக்கியம். அந்நாட்டியப் பண்புகளை மயிற்புறாவிடம் கண்டு மகிழ்கிறார் பாரதிதாசன்.

மயிற்புறா படம் விரிக்கும்;
மார்பினை முன் உயர்த்தும்;
நயப்புறு கழுத்தை வாங்கி
நன்றாக நிமிர்ந்து, காலைப்
பயிற்றிடும் ஆடல் நூலின்
படி, தூக்கி அடைவு போடும்;
மயிற்புறா வெண்சங்கு ஒக்கும்;
வால் தந்த விசிறி ஒக்கும்!

புனைவியல் (Romanticism)

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய புதிய இலக்கியக் கொள்கை புனைவியல் கோட்பாடு. இக்கோட்பாட்டாளர்கள் சமுதாயம், அரசியல், பொருளியல் ஆகியவற்றுள் குடிகொண்டிருந்த பழைய மரபுகளை எதிர்க்கத் தொடங்கினர்; மாற்றிவிடத் துடித்தனர்.

பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ரூசோவின் புதிய கோட்பாடுகள் மனிதனின் தனித்தன்மையையும், ஆற்றலையும் சிறப்பித்துப் பேசின. சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை என்ற மும்முனைக் கொள்கை ஐரோப்பாவில் வேகமாகப் பரவியது. இவற்றின் அடிப்படையில் தோன்றிப் பலவாகிக் கிளைத்த சிந்தனைகளின் தாக்கமே இலக்கியத்தில் புனைவியலைத் தோற்றுவித்தது.

தமிழகத்தில் புனைவியலை முதன்முதலாகச் சோதித்துப் பார்த்தவன் பாரதி. அதைப் பரப்பியவர் பாரதிதாசன்.

இப்படித்தான் பாட வேண்டுமென்றிருந்த செக்கு மாட்டுத்தனத்தை ஒழித்து, எதையும் பாடலாம், எப்படியும் பாடலாம் என்ற நிலையை இருவரும் தமிழுக்குக் கொண்டு வந்தனர். கவிதையில் இவர்களுடைய தன்னுணர்ச்சிப் பார்வை விரிந்தது. பழைய செய்யுட்களின் கடினத்தைக் குறைத்து இசையோடு கூடிய வழக்கு மொழியில் பாடத் தொடங்கினர். தமிழுக்குப் புதிய வரவுகள் கிடைத்தன.

பறவைகளைப் பற்றிப் பாரதிதாசன் புனைவியல் பாடல்கள் பல பாடியிருக்கிறார். அதில் வானம்பாடி குறிப்பிடத் தக்கது. பாரதிதாசன் பாடிய வானம்பாடிப் பாடலுக்கும், ஆங்கிலக் கவிஞன் வொர்ட்ஸ் வொர்த் பாடிய கக்கூ (Cuckoo) என்ற பாடலுக்கும் ஒரு பொதுத்தன்மை இருக்கக் காணலாம்.

சிறுகுன்றுகள் சூழ்ந்த 'ஸ்காத்லாந்து' ஏரிக்கரையில் படுத்த வண்ணம், இயற்கை அழகை மாலை நேரத்தில் சுவைப்பது வொர்ட்ஸ்வொர்த்தின் விடுமுறைக்காலப் பொழுது போக்கு. அவ்வாறு படுத்திருக்கும்போது உள்ளத்தை உருக்கும் ஒரு தேனிசை வானவெளியில் வட்டமிடுவதைக் கேட்டான். ஆனால் அந்த இசை எங்கிருந்து வருகிறது என்று அவனுக்குத் தெரியவில்லை. அந்த இசையை எழுப்புவது யார் என்றும் அவன் கண்ணுக்குப் புலனாகவில்லை.

அந்த இசை ஒரு குன்றிலிருந்து மற்றொரு குன்றிற்கும், ஓர் இளமரக் காட்டிலிருந்து மற்றோர் இளமரக்காட்டிற்கும் சுற்றிச் சுற்றி வந்தது. அந்த இசைப் பயணத்தைப் பொருத்தமான சொற்றொடர் ஒன்றால் குறிப்பிடுகிறான் வொர்ட்ஸ் வொர்த் [3] 'Wandering voice' என்பதே அச்சொற்றொடர்.

வொர்ட்ஸ் வொர்த்துக்கு ஏற்பட்ட அதே மயக்கம் வானம்பாடியின் இன்னிசையைக் கேட்ட

பாரதிதாசனுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அவரது பாடலைக் கேளுங்கள்!

வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?
தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்றா? நடுங்கும் இடிக்குரலும்
மெல்லிசை பயின்று மிக இனிமை தந்ததுவோ?
வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்
தானூதும் வேய்ங்குழலா? யாழா? தனியொருத்தி
வையத்து மக்கள் மகிழக் குரலெடுத்துப்
பெய்த அமுதா?...

என்று அடுக்கிக் கொண்டே போகிறார். வொர்ட்ஸ்வொர்த் காடுமேடெல்லாம் தேடித் திரிந்தும் கக்கூவைப் பார்க்க முடியவில்லை. ஆனால் வானம்பாடி கண்ணுக் கெட்டாத தூரத்தில் பாரதிதாசனுக்குக் காட்சி வழங்கியது.

உன்றன் மணிச்சிறகும் சின்ன கருவிழியும்
என்றன் விழிகட்கே எட்டா உயரத்தில்
பாடிக் கொண்டே இருப்பாய்

என்று பாடுகிறார் கவிஞர். கீட்சு நைட்டிங்கேலின் இனிய குரலுக்குப் போதை தரும் பொருள்களான மதுவையும், கவிதையையும் ஒப்பிடுகிறான்; கொஞ்சங் கொஞ்சமாக உயிரைக் கொள்ளை கொள்ளும் 'ஹெம்லாக்' என்னும் நஞ்சையும் ஒப்பிடுகிறான்.

ஆனால் பாரதிதாசன் வானம்பாடியின் குரலை 'ஏந்தும் வான் வெள்ளத்தில் கலக்கும் இன்பவெள்ளம்' என்று குறிப்பிடுகிறார்.

விண்ணையும் மண்ணையும் இன்பவெள்ளத்தில் நனைக்கும் வானம்பாடியோடு பேச வேண்டும் என்ற ஆவல் கவிஞருக்கு ஏற்படுகிறது; பேசவும் செய்கிறார். வானம்பாடியிடம் கவிஞர் பேசும் கடைசி இரண்டு வரிகளும் இப்பாடலின் உயிர்நாடியாக அமைகின்றன.

அசையா மகிழ்ச்சி, அடைகநீ, உன்றன்
இசைமழையால் இன்புறுவோம் யாம்

என்று பாடலை முடிக்கிறார்.[4] கீட்சு, நைட்டிங்கேலின் பாடல் அமரத்தன்மை (immortality) வாய்ந்தது என்றும், மக்கள் வாழ்க்கை துன்பமும் சாவும் நிறைந்தது என்றும் பாடுகிறான். இங்கும் பாரதிதாசன் வானம்பாடியின் மகிழ்ச்சியை **அசையா மகிழ்ச்சி** என்று குறிப்பிட்டு அதன் நிலைபேற்றை நம் உள்ளத்தில் நினைவுபடுத்துகிறார். இத்தொடர் மூலம் மனிதனின் மகிழ்ச்சி அசையும் மகிழ்ச்சி என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

வானம்பாடியின் பாடலைக் கேட்ட போது ஏற்படும், இன்பம் கலந்த வியப்பு, குயிலின் பாடலைக் கேட்ட போதும் பாரதிதாசனுக்கு ஏற்படுகிறது.

ஆக்காத நல்லமுதா!
அடடாநான் என்சொல்வேன்
விட்டுவிட் டொளிக்குமொரு
மின்வெட்டுப் போல்நறவின்
சொட்டுச் சொட் டொன்றாகச்
சுவையேற்றி றென்காதில்

என்று பாடுகிறார். இவ்வளவு சுவையான குரலை வெளிப்படுத்தும் அக்குயிலின் அலகையும் வாயையும் பாராட்ட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

கருநெய்தல் காட்டரும்பு
போலும் குவிந்த
இரண்டலகு தம்மில்
பிரிந்து குரல் எடுக்க
வாயிற் செவ்வல்லி
மலர்கண்டு நான் வியந்தேன் -

என்று பாராட்டி மகிழ்கிறார். குயிலின் அலகுக்குச் சாமணத்தையும் உவமை கூறுகிறார்.

வறிஞனாக இருப்பவன் வள்ளலாக இருக்க முடியாது. ஆனால் குயில் அதற்கு விதி விலக்கு என்று கருதுகிறார். சொந்த வீடு கூட இல்லாத ஏழைக் குயிலிடம் குடிகொண்டிருக்கும் இந்த உயர்ந்த பண்பைப் பாராட்டுகிறார் பாரதிதாசன்.

சேய்மையிலோர் சோலைக்குச்
செல்லும் குயிலினிடம்
தூய்மைமிகு பண்பொன்று
கேட்பீர்; சுவையைப்
படியளக்கும் வையத்தார்
உண்ணும் படியே
குடியிருப்பொன் றில்லாக் குயில்.

அழகின் சிரிப்பு என்ற பாவேந்தரின் நூலைக் கண்ணுற்ற செக்நாட்டுத் தமிழறிஞர் காமில் சொலபில் இந்நூலின் தலைப்பே ஒரு கவிதை (The heading itself is a poetry) என்று குறிப்பிட்டார். அழகின் சிரிப்பில் உள்ள புறாக்களைப் பற்றிய பாடல் ஒரு கற்பனைக் களஞ்சியம். ஒற்றுமையுடன் வட்டமாகக் கூடியிருந்து இரையுண்ணும் புறாக்களின் வாழ்வில்,

வெட்டில்லை; குத்து மில்லை
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை

என்று குறிப்பிடும்போது, மக்கள் வாழ்வில் வெட்டுண்டு; குத்துண்டு; சாதி வேறுபாடுண்டு; பொருளாதார ஏற்றத்தாழ்வும், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வருணபேதமும் உண்டு என்பதைக் கவிஞர் வருத்தத்தோடு ஒத்துக் கொள்கிறார்.

புறாக்களிடம் காணப்படும் இல்லற ஒழுங்கைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், மக்களிடம் காணப்படும் குறைகளைக் கண்டிக்கிறார்.

ஒரு பெட்டை தன்ஆண் அன்றி
வேறொன்றுக் குடன்படாதாம்
ஒருபெட்டை மத்தாப் பைப்போல்
ஒளிபுரிந் திடநின் றாலும்
திரும்பியும் பார்ப்ப தில்லை
வேறொரு சேவல்! தம்மில்
ஒருபுறா இறந்திட்டால் தான்
ஒன்றுமற் றொன்றை நாடும்

நம்மிடத்தில் நிலவும் பலதார மணத்தையும், சின்ன வீட்டுப் பழக்கத்தையும் இப்பாடலில் நயமாகக் கண்டிக்கிறார் பாரதிதாசன்.

விட்டு விடுதலையாகி நிற்பாய் - இந்தச்
சிட்டுக் குருவியைப் போலே

என்று பாடினான் பாரதி. சிட்டுக்குருவி பாரதிக்கு விடுதலையின் சின்னம்.

பாரதிதாசன் விடுதலை உணர்ச்சியைச் சுதந்திரம் என்ற பாடலில் பச்சைக்கிளியை வைத்துப் பாருக்குணர்த்துகிறார்.

தித்திக்கும் பழமும் மதுரப் பருப்பும் உண்டு 'பொன்னே மணியே!' என்ற போற்றுதலுக்கு மயங்கித் தச்சன் கூடே சதமாக வாழ்கிறது ஒரு பச்சைக்கிளி. அந்த வசதியான வாழ்க்கை அதற்குப் பழகிப் போய்விட்டது. என்றாலும், வானவீதியில் வந்து திரிந்து, தென்னங்கீற்றுப் பொன்னூசல் ஆடிச், சோலை பயின்று சாலையில் மேய்ந்து விண்ணையும் மண்ணையும் வசமாக்கித் திரியும் மற்ற கிள்ளைகளைப் பார்த்து அவற்றைப் போல் தானும் பறக்க நினைக்கிறது. இந்த ஏக்கத்தை 'அக்கா அக்கா!' என்று விளித்து வெளிப்படுத்துகிறது.

ஆனால், அக்கூண்டுக் கிளியைப் பார்த்து 'விடுதலை என்பது கடைத்தெருவில் விற்கும் சுக்கைப் போல் மிளகைப்போல் அவ்வளவு எளிதில் கிடைக்கக் கூடியதன்று.

அது போராடிப் பெறக்கூடியது' என்பதை விளக்குகிறார் கவிஞர்.

அந்நியர் ஆட்சியில் அவர்கள் வழங்கும் வசதி வாய்ப்புகளை நுகர்ந்து கொண்டு, அடிமை வாழ்வு வாழ்பவர்களையும், அவர்கள் உள்ளத்தின் ஆழத்தில் பதுங்கியிருக்கும் அச்சம் கலந்த விடுதலை வேட்கையையும் பாரதிதாசன் இப்பாடலில் நுட்பமாகச் சித்திரிக்கிறார்.

கலாப மயிலின் நீண்ட கழுத்தைப் பார்த்ததும் பாரதிதாசனுடைய கற்பனை சிறகடித்துப் பறக்கிறது. அம்மயிலை அருகழைத்து,

"நீயும் பெண்களும் நிகர் என்று சொல்கிறார்கள். உண்மை தான். என்றாலும் அவர்களுடைய கழுத்து உன்னுடைய கழுத்துக்கு ஒப்பாகுமா? இயற்கை அன்னை உனக்கு அழகிய நீண்ட கழுத்தையும், பெண்களுக்குக் குட்டைக் கழுத்தையும் ஏன் கொடுத்தாள்?"

என்று கேட்கிறார்.

மயில் பேசாமல் நிற்கிறது. கவிஞரே அதற்கு விடையும் கூறுகிறார் :

> அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
> எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே
> இயற்கை அன்னை, இப்பெண்களுக் கெல்லாம்
> குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ
> கறையொன்றில்லாக் கலாப மயிலே!
> நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்

என்று கூறுகிறார்.

அடுத்தவர் நடப்பில் விரும்பி மூக்கை நீட்டும் பழக்கம், பெண்ணினத்தின் மீது படிந்துள்ள கறையாகக் கவிஞர் நினைத்தார் போலும். என்றாலும் பெண்கள் என்ன கூறுவார்களோ என்ற அச்சம் அவருக்கில்லாமல் இல்லை. மயிலை அருகில் அழைத்து "நான் சொன்னதைப்

பெண்களிடம் சொல்லி விடாதே. அவர்கள் என்னை ஏசுவார்கள்'' என்று மெதுவாக அதன் காதில் ஓதுகிறார்.

நல்ல வேளை! கவிஞர் இதைக் கலாப மயிலான ஆண்மயிலிடம் தான் கூறினார். இதையே பெண்மயிலிடம் கூறியிருந்தால், கட்டாயம் அது கவிஞரைக் கொத்தியிருக்கும்.

கோழிச் சேவல் காதலர்க்கு எதிரி. அது நேரந் தெரியாமல் கூவி, அவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் இயல்பினது. சங்கப் புலவர் முதல் பலர், தமது பாடலில் கோழியைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியிருக்கின்றனர் ஆனால் பாரதிதாசன் சட்டமன்றத்துக்கே சென்றுவிட்டார்.

சட்டமன் றம்கோழி வளர்ப்பதைத் தடைசெய்யுமா
தொட்டார் கைதொட்டுத் தொடருமுன் - பட்டப்
பகலாயிற் றென்று பறையடிக்கும் சற்றும்
அகலார் அகலும் படிக்கு.

பறவையும் தமிழும்

பாரதிதாசனுக்குப் படுக்கையறையிலும் தமிழ் நினைப்புத்தான்.

சரக்கொன்றை தொங்கலிட்ட பந்தலின் கீழ், தனிச்சிங்கக் கால்நான்கு தாங்கும் கட்டிலின் மீது அருகில் படுத்திருக்கும் குடும்ப விளக்கிடம்,

இழந்தபழம் புகழ்மீள வேண்டும்; நாட்டில்
எல்லாரும் தமிழர்களாய் வாழ வேண்டும்;
வழிந் தொழுகும் சுவைத் தமிழே பெருக வேண்டும்
மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்

என்று தமிழ்க்காதலைப் பற்றித்தானே பேசிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் பறவைகளைப் பற்றிப் பாடும்போது தமிழை மறந்து விடுவாரா? பறவைபிடிக்கும் வேடன் பேசும் தமிழ்ச்சொற்கள் கவிஞரை

இன்பத்தில் சாய்க்கின்றன. அவனை உளம் மகிழ்ந்து வாழ்த்துகிறார்;

முகத்திலே கொடுவாள் மீசை
வேடன் என் எதிரில் வந்தான்
அகப்பட்ட பறவை காட்ட,
அவற்றின்பேர் கேட்டேன்! வேடன்
வகைப்பட்ட பரத்து வாசன்
என்பதை வலியன் என்றான்;
சகோரத்தைச் செம்போத் தென்றான்!
தமிழாநீ வாழ்க என்றேன்.

அடிக்குறிப்புகள்

1. Jul : wilt thou be gone?
it is not yet day;
It was the nightingale
and not the lark,
That pierc'd the fearful
hollow of thine ear.
- Romeo And Juliet Act III scene V

2. The poetry of earth is never dead
- sleep and poetry. John keats

3. G! cuckoo, shall I call thee bird
or but a wandering voice?
- To the cuckoo, wordsworth

4. Thou was not born for death immortal bird,
- John Keats

2

பாவேந்தர் படைப்பில் அங்கதம்

1

அங்கதம் என்பது ஒருவகைச் செய்யுள் உத்தி. அங்கதப்பாக்கள் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே தமிழில் இருந்திருக்கின்றன. அதனாற்றான் தொல்காப்பியர் தம் செய்யுளியலில் அங்கதப்பாவிற்கு இலக்கணம் கூறியிருக்கிறார்.

அங்கதம் தானே அரில்தபத் தெரியின்
செம்பொருள் கரந்தது என இருவகைத்தே - என்றும்
செம்பொருளாயின் வசை எனப்படுமே - என்றும்
மொழிகரந்து சொலின் அதுபழி கரப்பாகும் - என்றும்

இலக்கணம் கூறுகிறார். மற்றுமோர் நூற்பாவில்,

வசையொடும் நசையொடும் புணர்ந்தன்றாயின்
அங்கதச் செய்யுள் என்மனார் புலவர்

என்று மேலும் விளக்குகிறார். அதன் அடியளவு பற்றிக் குறிப்பிடும்போது எவ்வகைப்பாவில் அது எழுதப்படுகிறதோ அப் பாவின் அடியளவு பெற்றுவரும் என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் காரிகையாசிரியர் அங்கதப் பாவினை அடியின்றி நடப்பன என்ற வகையுள் அடக்குவார்.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்

என்பது வசையொடு கூடிய செம்பொருள் அங்கதம்.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்

என்பது **மொழிகரந்துரைக்கும் பழிகரப் பங்கதம்.** தொண்டை மானிடத்தில் தூது சென்ற அவ்வை பாடிய 'இவ்வே பீலியணிந்து' என்று தொடங்கும் புறநானூற்றுப்பாடலும் பழிகரப்பங்கதத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

அங்கதத்தை நாம் தனிப்பாடல் அளவிலேயே நிறுத்திக் கொண்டோம். ஆனால், மேலைநாட்டு இலக்கிய வல்லுநர்கள் அதை ஓர் இலக்கியத் துறையாக வளர்த்திருக்கின்றனர். அங்கதத்தை அவர்கள் Satire என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். இந்த ஆங்கிலச் சொல் Satura என்ற இலத்தீன் சொல்லை வேர்ச் சொல்லாகக் கொண்டது. இந்த இலத்தீன் சொல்லுக்கு **நிறைவானது** என்றும், 'பல்வேறுபட்ட **சுவைக்கலவை**' என்றும் பொருள்.

எனவே, அங்கதப்பாடல் வசை, பரிகாசம், சமத்காரம், நுட்பம் என்னும் பல்வகைப் பண்புகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

"அங்கதம் என்பது நகைச்சுவையும், புலமை நுட்பமும், திறனாய்வு நோக்கும் கொண்ட ஓர் இலக்கிய உத்தி. இது மக்கட் சமுதாய மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டது" என்று ஆங்கில இலக்கியக் கையேடு ஒன்று வரையறுத்துக் கூறுகிறது.

"தீமைகளையும் குற்றங்களையும் கண்டனம் செய்யும் பாடல் அங்கதம்" என்று ஜான்சனின் ஆங்கில அகராதி பொருள் கூறுகிறது.

"தீய செயல்களைத் திருத்துவதே அங்கதப் பாடலின் அடிப்படை நோக்கம்" என்று ஆங்கிலக் கவிஞர் டிரைடன் கூறுகிறார்.

"அங்கதம் என்பது ஒவ்வொருவருடைய உண்மையான முகங்களைக் கண்டறியும் கண்ணாடி" என்று ஆங்கில எழுத்தாளர் ஸ்விஃப்ட் கூறுகிறார்.

கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ரோம் நாட்டு இலக்கிய வாதிகளான ஹொரேஸ், பெர்சியஸ், ஜூவெனில் ஆகிய மூவரையும் அங்கதக் கலையின் முன்னோடிகள் என்று கூறலாம். அவர்களுள் ஹொரேஸ், "மாந்தரிடம் படிந்திருக்கும் குற்றங்களைத் தோலுரித்துக் காட்டுவது எனது நோக்கமன்று; அவர்களைத் திருத்துவதே என் நோக்கம்" என்று குறிப்பிடுகிறார். இவர் ஓர் நம்பிக்கை வாதி (Optimist)

ஆனால் ஜூவெனில் என்பவர் தவறு செய்யும் மக்களினத்தையே வெறுப்பவர். "**மக்களிடத்தில் இயல்பாகப் படிந்திருக்கும் குற்றங்கள் திருத்த முடியாதவை. அவர்கள் வெறுப்பிற்கும் கண்டனத்துக்கும் உரியவர்கள்**" என்பது இவர் கருத்து. இவர் ஒரு சோர்வாளர் (Pessimist).

ஹொரேஸ் நோயைக் குணப்படுத்தும் மருத்துவர் போன்றவர். ஆனால் ஜூவெனில் தண்டனை நிறைவேற்றும் அதிகாரி போன்றவர்.

ஆங்கிலக் கவிஞர்களுள் ஜான்டன், டிரைடன், அலெக்சாண்டர் போப், ஸ்விஃப்ட், பைரன் ஆகியோர் புகழ்பெற்ற அங்கதப் படைப்பாளிகள்.

ஜான்டன் இங்கிலாந்து நாட்டில் நிலவிய அரசியல், சமயக் குறைபாடுகளை நயம்பட, புலமை நுட்பத்தோடு தன் அங்கதப்பாடல்களில் சுட்டிக் காட்டுகிறான். அவன் பாடல்கள் அப்போது ஆட்சி புரிந்த மன்னரின் கொள்கைகளுக்குக் கேடயமாக விளங்கின.

அலெக்சாண்டர் போப் தன் இலக்கிய எதிரிகளை ஆற்றல் மிக்க அங்கதக் கணைகளால் முறியடித்தான்.

ஜோனாதன் ஸ்விஃப்ட் மக்கள் இனத்தையே வெறுத்தவன். அவனது **கலிவர் யாத்திரைகள்** (Gullivers Travels) மக்களினத்தின் குற்றங்களைக் கடுமையாகப் பழிக்கும் அங்கத நூல்.

குறையுடைய மனிதனை டிரைடன் **அரசியல் விலங்கு** (Palitical creature) என்றும், அலெக்சாண்டர் போப் **சமுதாய விலங்கு** (Social animal) என்றும், ஸ்விஃப்ட் **விலங்கு மனிதன்** (animal called man) என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

கவிஞர் பைரன் சமுதாயத்துக்கு எதிரான சக்திகளின் குறியீடாக 'டான் ஜுவான்' என்ற காப்பியத்தை எழுதியிருக்கிறான்.

பிரெஞ்சு எழுத்தாளர் வால்டையரும், ஸ்பானிய எழுத்தாளர் செர்வாண்டிசும் அங்கதத் துறையில் சாதனையாளர்கள்.

செர்வாண்டிசின் 'டான் க்விக்சாட்' உலகப்புகழ் பெற்ற அங்கதப் புதினம்.

இந்த நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞர்களுள் பெர்னாட்ஷா சிறந்த அங்கத எழுத்தாளர். அவர் எழுதியுள்ள இன்னாத நாடகங்கள் (Plays unpleasant) முன்னுரையில் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவை, தாங்கிக் கொள்ள முடியாதவை என்று சிலவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

அவையாவன : அன்றைய மக்களின் ஒழுக்கக்கேடு, அன்றைய சமயம், போரினாலும் தீவிரவாதத்தாலும் நேரும் கொடுமைகள், விளையாட்டுத்துறை, கொல்களம் (butcher's yard), நவநாகரிகச் செல்வர் கூட்டம்.

அவர் எழுதிய நாடகங்களும் அவற்றின் முன்னுரைகளும் மக்கள் முன்னேற்றத்துக்காக ஆழ்ந்து சிந்தித்து எழுதப்பட்ட கருத்துக் களஞ்சியங்கள்.

2

பாவேந்தர் பாரதிதாசனுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆங்கில இலக்கியப் பயிற்சியும் இல்லை. புதுவைப் பொதுமக்கள் பேச்சு வாக்கில் கையாளும் பிரெஞ்சுச் சொற்கள்தாம் அவருக்குத் தெரியும். உடன் பணி செய்த பிரெஞ்சு ஆசிரியர்களிடம் பிரெஞ்சு இலக்கியங்களைப் பற்றியும், இலக்கிய வாதிகளைப் பற்றியும், வாய்மொழியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாமே தவிர, பிரெஞ்சு இலக்கியங்களை நேரடியாகப் படிக்கும் வாய்ப்பும் அவருக்கில்லை.

இவர் ஒரு தனித்தமிழ்ப்புலவர். என்றாலும் மேலைநாட்டு அங்கத உத்தி இவருக்கு எப்படியோ கைவந்திருப்பது வியப்பிற்குரிய செய்தி :

பெர்னாட்ஷாவைப்போல் இவரால் சமரசம் செய்து கொள்ள முடியாதவை தமிழ்நாட்டில் பல. தீண்டாமை, வறுமை, கைம்மை, மூடநம்பிக்கை, கடவுள் நம்பிக்கை, சாதி, அரசியல் அடிமைத்தனம், தாய்மொழிப் புறக்கணிப்பு, இந்தித் திணிப்பு என்பன அவை.

இக்கொடுமைகளை எதிர்த்துச் செம்பொருள் அங்கதமாக அவர் எழுதியுள்ள வசைப்பாடல் அளவற்றவை.

அண்டை வீட்டின் அறையி லிருந்து
பழுத்துக் காய்ந்த பனை ஓலைமேல்
கூடல்வாய்த் தண்ணீர் கொட்டும் ஓசை
வந்தது; சென்று பார்த்தேன்
இந்திப்பாடம் நடத்தினார் ஈச்வரே!

இஃது இந்தி எதிர்ப்புப் பாடல்.

சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்
தம்தோள் உழைப்பினிலே நம்பிக்கை தானுமின்றி
ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாரற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கி யேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப்படும் அங்கே!

இது கடவுள் எதிர்ப்புப் பாடல்.

இந்த நாட்டில் இருக்கின்ற மதங்கள்
கந்தக வீட்டில் கனலின் கொள்ளிகள்!

இது மத எதிர்ப்புப் பாடல்.

ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப் போல், மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்.
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

இது கைம்மை எதிர்ப்புப் பாடல்.

மலம்பட்ட இடம் தீட்டாம்
மக்கள் சிலரைத் தொட்டால்
தலைவரைக்கும் தீட்டாம் - சகியே
தலைவரைக்கும் தீட்டாம்!

இது தீண்டாமை எதிர்ப்புப் பாடல்.

பிறப்பி லுயர்வுதாழ்வு
பேசும் சமுகம் மண்ணில்
சிறக்குமோ சொல்வாயடி - சகியே
சிறக்குமோ சொல்வாயடி!

இது சாதி எதிர்ப்புப் பாடல்.

பொற்புடை முல்லைக் கொத்தில்
புளியம்பூ பூத்ததென்றல்
சொற்படி யார்நம்புவார் - சகியே
சொற்படி யார் நம்புவார்?

இது வருண எதிர்ப்புப் பாடல்.

வாடப் பலபுரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப் பழக்கத்தைத் தீதென்றால் முட்டவரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட்டவந்த
ஈடற்ற தோழா, இளந்தோளா கண்ணுறங்கு!

இது மடமை எதிர்ப்புப் பாடல்.

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ

இது வறுமை எதிர்ப்புப் பாடல்

செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில், வையம் நடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே.

பாவோடு நேர் தமிழும் பைந்தமிழும் மக்களும்
ஆவோடு வேர் என் றறிந்திருந்தும் ஆளவந்தார்
மேலோடு பேசி விடுவரேல் அவ்வாட்சி
சாவோடு நீரென்று சாற்றாய் கருங்குயிலே.

இஃது அரசியல் எதிர்ப்புப் பாடல்.

3

பழிகரப் பங்கதம் வஞ்சப்புகழ்ச்சி அணியாகத் தமிழில் கையாளப்படுவதுண்டு. பழிப்பது போல் புகழ்வதும், புகழ்வதுபோல் பழிப்பதும் இந்த அணியின் பண்புகள்.

இடைக்காலப் புலவர்களான காளமேகம், இரட்டைப் புலவர் ஆகியோரும், பிரபந்தக் காலப் புலவர்களான மாம்பழக் கவிச்சிங்கமும், அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் ஆகியோரும் பழிகரப்பங்கதத்தில் வல்லவர்கள்.

செம்பொருள் அங்கதம் பாட உணர்ச்சியும் எழுச்சியும் இருந்தால் போதும். பழிகரப்பங்கதம் பாட ஆழ்ந்த புலமையும், நுட்பமும், கற்பனையும் வேண்டும்.

பாவேந்தர் பாரதிதாசன், கோயில், தொழுகை, வரதட்சணைக் கொடுமை ஆகியவற்றைப்பற்றிப் பாடிய பாடல்கள் பழிகரப்பங்கதத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

ஓரிளம் பாதிரியார் ஓர் ஊரில் மாதாகோயில் பொறுப்பேற்க வந்தார். ஆர்வமும், துடிப்பும் மிக்க அவர், கோயிற்பணிகளில் அளவு கடந்த அக்கறையும் ஈடுபாடும் காட்டினார். முறையாகத் தொழுகைகள் நடத்திப் பாவிகளை இரட்சித்து, மோட்ச சாம்ராஜ்ஜியத்துக்கு அவர்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்குவதில் முழுமூச்சாக ஈடுபட்டார்.

ஒரு நாள் தொழுகையின் போது, சுவிசேஷத்தின் முக்கிய பகுதியை உணர்ச்சி பூர்வமாக மெய்மறந்து விளக்கிக் கொண்டிருந்தார்.

தொழுகைக் கூடப் பெண்கள் பகுதியில் சலசலப்பு. ஆடவர் பகுதியில் கிசுகிசுப்பு. கூர்ந்து நோக்கினார் பாதிரியார். பெண்கள் தாங்கள் உடுத்தியிருந்த புடவைகள் பற்றியும் அணிந்திருந்த அணிமணிகள் பற்றியும் விமர்சனம் செய்து கொண்டிருந்தனர்.

ஆடவர்கள் அரசியலையும் அன்றைய புதுத் திரைப்படத்தையும் அலசிக் கொண்டிருந்தனர்.

பாதிரியார் மனவருத்தத்தோடு தொழுகையை முடித்தார். அடுத்த நாள் காலையில் கோயிலின் அறிவிப்புப் பலகையில் கீழ்க்கண்டவாறு எழுதிவைத்தார்:

தலைகாது மூக்கு கழுத்துகை மார்புவிரல்
தாள்என்ற எட்டுறுப்பும்
தங்கநகை வெள்ளிநகை ரத்தினமிழைத்த நகை
தையலர்கள் அணியாமலும்
விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வர
வேண்டும்... ...

அடுத்த ஞாயிற்றுக் கிழமை காலை தொழுகையைத் தொடங்கக் கோயிலின் கூடத்தில் நுழைந்தபோது, பாதிரி திடுக்கிட்டார். கோயில் வெறிச்சோடிப் போயிருந்தது. பக்தர்கள் யாரையும் காணோம். மனமுடைந்த பாதிரியார் அறிவிப்புப் பலகையை அணுகினார். முன்பு தாம் எழுதியிருந்த வாசகத்தை அழித்துவிட்டுப் புதிய திருவாசகம் ஒன்றை எழுதிவைத்தார்.

எட்டுறுப் பேயன்றி
நீளிமைகள் உதடுநாக்கு
நிறையநகை போடலாம்
கோயிலில் முகம்பார்க்க
நிலைக்கண்ணாடியும் உண்டு -

என்பதே அவ்வாசகம். அடுத்த வாரம் கோயிலின் தொழுகைக் கூடம் நிரம்பி வழிந்தது. கடைசியில் கவிஞர் தம்முடைய கருத்தாக,

இலைபோட் டழைத்ததும் நகைபோட்ட பக்தர்கள்
எல்லாரும் வந்து சேர்ந்தார்!
ஏசு நாதர் மட்டும் அங்குவர வில்லையே
இனியபா ரததேச மே.

என்று கூறிப் பாடலை முடிக்கிறார். இப்பாடலில் பழிகரப்பங்கதத்துக்குரிய எள்ளல் துள்ளிக் குதிக்கிறது.

பெண்கள் நகை அணிந்து கொள்ளும் எட்டுறுப்புக்களையும் ஒரே அடியில் கவிஞர் வரிசைப்படுத்தும் அழகு அவரது கவிதையாற்றலைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பாதிரியார் எழுதிய இரண்டாவது அறிக்கை பெண்டிரின் நகையணியும் அளவற்ற விருப்பத்தையும், அடிக்கடி கண்ணாடியில் முகம்பார்த்து ஆனந்திக்கும் விருப்பத்தையும் குத்திக் காட்டுகிறது.

பக்திப் பரவசத்தில் ஈடுபட்டுப் பக்தர்கள் கோயிலுக்குத் தாமாக வரவேண்டும். இங்குப் பக்தர்கள் வருந்தி அழைக்கப்படும் நிலையைக் கவிஞர் 'இலைபோட் டழைத்ததும்' என்ற சொற்றொடரால் குறிப்பிடுகிறார். 'நகைபோட்ட பக்தர்கள்' என்ற தொடர் பக்தர்களின் போலித் தன்மையைப் புலப்படுத்துகிறது.

'ஏசுநாதர் மட்டும் அங்கு வரவில்லையே' என்ற அடியால் தொழுகை பயனற்றதாகிறது என்பதும் குறிப்பிடப்படுகிறது. 'ஏசுநாதர் ஏன்வரவில்லை?' என்பது இவ்வங்கதப் பாடலின் தலைப்பு.

வரதட்சணைக் கொடுமை தமிழர் சமுதாயத்தைப் பிடித்த ஒரு கொடிய நோய். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பார்ப்பனர் சமுதாயத்தைப் பற்றி உலுக்கிய இந்த நோய், பின்னர் பார்ப்பனர் அல்லாதாரையும் தொற்றிக் கொண்டது.

செல்வர்களுக்கு, வரதட்சணை அவர்கள் தகுதியை வெளிப்படுத்தும் ஓர் அளவுகோலாக இருக்கலாம். ஆனால் பெண்களைப் பெற்ற ஏழைகளுக்கு அது கசையடி.

படித்துப் பட்டம் பெற்று, அரசாங்கப் பதவியில் இருக்கும் தம் பிள்ளைகளின் தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்வதில் பெற்றோர்கள் குறியாய் இருந்தனர்.

பெண் படித்தவளா, அறிவுள்ளவளா, அழகானவளா குடும்பத்துக்கேற்றவளா என்பதைவிட அவள் சுமந்துவரும் நகைகளின் எடை, அவள் கொண்டு வரும் வரதட்சணை, பேழைப் பணம் ஆகியவற்றின் அளவு, ஆகியவற்றிலேயே அவர்கள் கவனம் இருந்தது. பெற்றோரின் இந்தப் பேராசையையும் அறிவீனத்தையும் **பெண் சூரங்குத் திருமணம்** என்ற பாடலில் எள்ளி நகையாடுகிறார் பாவேந்தர்.

ஏழை அண்ணாசாமி தன் மகனுக்குப் பணக்காரர் வீட்டில் பெண் தேடுகிறான். ஏழையின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட அப்பணக்காரன் உன் மகனுக்குப் பெண் கொடுப்பதில் தடையேதுமில்லை ஆனால்... என்று இழுக்கிறான்.

'ஆனால் என்ன?' என்று கேட்கிறான் ஏழை. அதற்குப் பணக்காரன்,

> **பெற்ற பெண்ணைக் கொடேன்**
> **வளர்க்கின்ற பெண்ணுண்டு**
> **பேச்செலாம் கீச்**

என்றனன்.

அதற்கு அண்ணாசாமி, "பெண்ணுக்குக் கீச்சுக்குரல். அவ்வளவு தானே? பரவாயில்லை. அதற்காக வரதட்சணையை வளர்ப்புப் பெண்ணுக்குக் குறைவாகவா கொடுக்கப் போகிறீர்கள்?" என்று சாதுரியமாகப் பேசினான்.

என் பெண்
இரட்டை வால் அல்ல

என்றான் செல்வன்.

உங்கள் பெண் அடக்கமானவள் என்பதை இவ்வாறு குறிப்பிடுகிறீர்கள். மகிழ்ச்சிதான் என்றான் ஏழை அண்ணாசாமி.

என்றன் பெண் -
கால்வரைக்கும் கருங்கூந்தல்

என்றான் பணக்காரன். "ஒட்டு மயிர் வைத்து அலங்கரித்துக் கொள்ளும் இக்காலத்தில் கால்வரையிலும் நீண்ட கருங்கூந்தல் சிறப்புத்தானே?" என்று மகிழ்ந்து கூறிய அண்ணாசாமி திருமணத்துக்கு நாள் குறித்தான். அண்ணா சாமியின் அறியாமையையும், அளவற்ற பேராசையையும் கவிஞர் கீழ்க்கண்ட வரிகளால் அளந்து காட்டுகிறார்.

கண்ணுள்ள மகனுக்குத்
தந்தைநிய மித்த பெண்
கழுதையா? அல்ல அதுதான்
பெரும் பணக்காரன்
வளர்த்திட்ட ஒற்றைவால்
பெட்டைக் கருங்குரங்கு
பீடு சுய மரியாதை
கண்டு நல முண்டிடும்
பெரிய என் அன்னைநாடே!

பணக்காரன் தகுதி தெரியாமல் தன்னிடம் பெண் கேட்க வந்த ஏழை அண்ணாசாமியைக் கேவலப்படுத்த நினைக்கிறான். தன் எண்ணத்தைப் 'பேச்செலாம் கீச்', 'இரட்டைவால் அல்ல', கால்வரைக்கும் கருங்கூந்தல் என்ற சொற்றொடர்களால் குறிப்பாக வெளிப்படுத்துகிறான்.

ஏழையின் பேராசை அவன் அறிவைக் குருடாக்கிவிட்டது. இப்பாடலில் அமைந்துள்ள கற்பனை

மிகச் சிறப்பானது. பணக்காரனின் பேச்சுச் சாதுரியம், கவிஞரின் அறிவு நுட்பத்துக்கு அளவு கோல்.

மேலே குறிப்பிட்ட இரண்டு பாடல்களும் எள்ளல், நகைச்சுவை, சமத்காரம் என்ற எல்லாப் பண்புகளும் நிறைந்து சிறப்பான அங்கத உத்தியுடன் விளங்குவதைக் காணலாம்.

4

ஆங்கிலக் கவிஞன் அலெக்சாண்டர் போப் எழுதியுள்ள 'கூந்தலின் கற்பழிப்பு' (Rape of the Lock) என்ற அங்கதக் காப்பியம் கற்பனையழகும், அணியழகும், புலமை நுணுக்கமும் நிறைந்தது.

அவர் வாழ்ந்த காலத்தில் இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த செல்வச் சீமாட்டிகள் இல்லறத்தில் நாட்டம் கொள்ளாமல், இன்ப வேட்கையிலேயே காலம் கழித்தனர்; செருக்கோடு திரிந்தனர்; ஆடம்பரத்தில் திளைத்தனர். கற்பை இழப்பதைத் தம் பட்டுத்துணியில் கறைபடிவதைப் போலவும், ஒரு சீனக்குவளை கைதவறிக் கீழே விழுந்து உடைவது போலவும் எளிதாக எடுத்துக் கொண்டனர். அதிகாரத்திலும், செல்வாக்கிலும் சிறப்புற்றிருந்த காளையரைத் தம் காதலுக்குப் பணிய வைப்பதை வெற்றியாகக் கருதினர். ஐம்பது வயதானாலும் கன்னியாகக் காலம் கழிப்பதைப் பெருமையாக நினைத்தனர்.

இந்த மானமற்ற போக்கை, போப் தன் சொல்லம்புகளால் துளைத்து எடுத்துவிட்டார்.

ஓர் இளைய சீமாட்டியின் கூந்தல் கற்றையை அவளுக்குத் தெரியாமல் வெட்டியெடுத்த ஓர் இளைஞனின் விளையாட்டுத்தனமும், அதனால் ஏற்பட்ட பின் விளைவுகளும் காப்பியப் பண்புகளோடு இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. இதுவோர் எள்ளல் காப்பியம் (Mock epic). பெருங்காப்பியப் பண்புகளான தேவதைகளின் பங்கேற்பு, போர், அதீத கற்பனை (Supernatural elements)

பலிபீட ஆராதனை, அறை கூவல் யாவும் இதில் இடம் பெற்றுள்ளன.

தமிழில் அங்கதத்தைச் சிறுகாப்பிய வடிவில் முதன் முதலாகக் கையாண்டு வெற்றிகண்டவர் பாரதிதாசன். இவர் எழுதியுள்ள ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’ 1930 ஆம் ஆண்டில் இவருடைய நண்பரான நோயல் என்பவரால் வெளியிடப்பட்டது.

தேசிக விநாயகம் பிள்ளை எழுதியுள்ள ‘மருமக்கள் வழி மான்மியம்’ என்னும் நூலும் ஓர் அங்கதக் காப்பியம். இது 1942ஆம் ஆண்டு வெளிவந்தது.

மேலைநாட்டு அங்கதக் காப்பியப் பண்புகளான அதீத கற்பனை, எள்ளல், குற்றங்கடிதல், சமுதாய சீர்திருத்தம் யாவும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலும் இடம் பெறுகின்றன. நம்பத் தகாத மடமையை நம்பத்தகாத கற்பனை மூலமே இவர் சாடுகிறார்.

இந்நூலில் உள்ள குறிப்பிடத்தக்க சிறப்பு என்னவென்றால், அஞ்சாமையும் துணிச்சலும் மிக்க பெரியாரின் தர்க்கரீதியான கம்பீரப் பேச்சுநடை (Oratorial poetry) கவிதை வடிவில் இக்காப்பியத்தில் ஆட்சி செய்கிறது.

சஞ்சீவிபர்வதத்தின் சாரலில் குப்பன் என்ற வேடக்குமரன், தன் காதலி வஞ்சியை எதிர் நோக்கிக் காத்திருக்கிறான். அவள் வந்ததும் அவளை அணைக்கத் தாவுகிறான். அவளோ, அவனைத் தடுத்து ஒதுங்குகிறாள். குப்பன் காரணம் கேட்கிறான்.

“இக்குன்றத்தின் மீது இரண்டு மூலிகைகள் இருக்கின்றன. ஒன்றைத் தின்றால் உலக மக்கள் பேசும் பேச்சுக்களைக் கேட்கலாம். மற்றொன்றைத் தின்றால் மண்ணுலகக் காட்சியெல்லாம் இங்கிருந்தபடி கண்ணெதிரில் காணலாம். அவ்விரண்டையும் பறித்துக் கொடு. முத்தம் பிறகு!” என்று கண்டிப்பாகக் கூறுகிறாள்.

குப்பன் அவள் விருப்பப்படி அம்மூலிகைகளைப் பறித்துக் கொடுக்கிறான். முதலில் ஒரு மூலிகையைச் சாப்பிட்டவுடன், இத்தாலியர், ஆங்கிலேயர், அமெரிக்கர், பிரெஞ்சியர் பேசும் பேச்சுக்கள் இவர்கள் காதில் விழுகின்றன. பிறகு அநுமன் சஞ்சீவி பர்வதத்தை வேரோடு பறித்தெடுத்து விண்ணில் எழும்பும் செய்தியும், கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்தரையில் வைப்பது போல், வைக்கும் செய்தியும், அவர்கள் காதில் விழுகின்றன.

மற்றொரு மூலிகையைச் சாப்பிட்டதும், ஒரு பட்டை நாமக்காரப் பாகவதன் இராமாயணப் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் காட்சி அவர்கள் கண்ணில் படுகின்றது. இதைக் கண்டதும் குப்பன் தன் அறியாமைக்கு வருந்துகிறான். இதுதான் காப்பியக்கதை.

இராமாயணத்தில் வரும் சஞ்சீவி பர்வதத்தை நிகழிடமாகக் கவிஞர் தேர்ந்தெடுத்த நுட்பம்தான், இக்காப்பியக் கருப்பொருளின் (theme) வெற்றி.

இந்திய மக்களின் மடமையும், சாதி மதங்களால் மக்களிடையே ஏற்பட்ட ஒற்றுமைச் சிதைவும், பிறநாட்டு மக்கள் இந்நாட்டு மக்கள் மீது கொண்டிருந்த தாழ்வான எண்ணங்களும், பௌராணிகர்களின் சுரண்டல்களும், சமுதாயச் சீர்திருத்த மில்லாமல் பெறும் விடுதலையின் கேடுகளும் இக்காப்பியத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன. இவர் வெளிப்படுத்தும் அங்கதக் கருத்துக்கள் கூரம்புகளாகப் பாய்கின்றன.

நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன் ஆங்கிலேயர்கள் நம்மைப்பற்றி என்ன நினைத்தார்கள் என்பதை ஓர் ஆங்கிலேயன் பேச்சு மூலமாகவே சுட்டிக் காட்டுகிறார்.

ஓஎன் சகோதரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்!
நாவலந் தீவு நமைவிட்டுப் போகாது!

வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்;

ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்!
ஏகமன தாகிஅவர் நம்மை எதிர்ப்பதெங்கே?

பேதம் வளர்க்கப் பெரும்பெரும் புராணங்கள்!
சாதிச்சண் டைவளர்க்கத் தக்கஇதி காசங்கள்!

கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி அளக்கும் குருக்கள் கணக்கற்றார்

தேன் சுரக்கப் பேசி இந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்!

இந்த உளைச் சேற்றை, ஏறாத ஆழத்தை
எந்தவிதம் நீங்கிநம்மை எதிர்ப்பார்? -

என்று கூறும் ஆங்கிலேயன், இந்திய சமுதாயத்தைப் பிளவுபடுத்தும் தீய சக்திகள் யாவை என்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறான்.

இந்திய மக்கள் கடைப்பிடித்தொழுகிய தவறான கடவுட் கொள்கையால், அவர்கள் எவ்வெவ்வாறு பாதிக்கப் படுகின்றனர் என்பதை,

சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்
தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி,
ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாரற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கி யேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப் படும்அங்கே!

என்று அந்த ஆங்கிலேயன் குறிப்பிடுகிறான்.

தத்துவநூல்கள் மக்களை அறிவுடையவர்களாக ஆக்கி, வாழ்க்கையில் நம்பிக்கையும் ஈடுபாடும் கொள்ளச் செய்ய வேண்டும். ஆனால் இந்நாட்டின் வேதாந்த நூல்கள்,

தேகம் அழிந்துவிடும்; சுற்றத்தார் செத்திடுவார்;
போகங்கள் வேண்டாம்; பொருள்வேண்டாம்;
மற்றுமிந்தப்
பாழுலகம் பொய்யே பரமபதம் போ.

என்று சாக்குருவி போல் கத்திக் கொண்டிருக்கின்றன. மக்கள் வாழ்க்கையில் நம்பிக்கையைக் குலைத்து அவர்களைச் சோர்வாளர்களாக (Pessimist) ஆக்குகின்றன என்பதையும் அவன் சுட்டிக் காட்டுகிறான்.

சாதிப்பிரிவு சமயப் பிரிவுகளும்
நீதிப் பிழைகள் நியமப் பிழைகளும்,
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சி செய்தே
ஓடச் செய்தால் நன்மையும் ஓடச் செய்வார்

என்று இந்திய மக்களின் இயலாமையைச் சுட்டிக் காட்டி அவனே திருப்திப்பட்டுக் கொள்கிறான்.

நம் நாடு முன்னேறுவதற்கும், விடுதலை பெறுவதற்கும் உள்ள தடைக்கற்கள் யாவை என்பதைப் பாவேந்தர் போல் துணிச்சலாக எந்தத் தமிழ்க் கவிஞனும் சுட்டிக் காட்டவில்லை.

இராமன் அருள் பெற்ற அநுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கிப் போய்க் கடலில் வீசப்போகிறான் என்று அஞ்சி நடுங்கிய குப்பனின் அறியாமையை வஞ்சி,

ராமனெங்கே! ராமன் அருளெங்கே! சஞ்சீவி
மாமலையைத் தூக்குமொரு வல்லமைஎங்கே!

இவற்றில்

கொஞ்சமும் உண்மை இருந்தால்நாம் கொத்தவரைப்
பிஞ்சுகள்போல் வாடிப் பிழைப்ப தரிதாகி
அடிமையாய் வாழோமே! ஆண்மைதான் இன்றி
மிடிமையில் ஆழ்ந்து விழியோமே!

என்று கூறி நகையாடுகிறாள்.

ஐயா இதைவிழுங்கி
அவ்விடத்தில் பாருங்கள்

என்று வஞ்சி மூலிகையைக் கொடுத்தாள். அதைத் தின்று விட்டுக் குப்பனும் பார்த்தான்.

மாளிகையின் உள்ளே மனிதர் கூட்டத்தையும்
ஆளிவாய்ப் பாகவதன் அங்கு நடுவினிலே
உட்கார்ந் திருப்பதையும், ஊர்மக்கள் செல்வதையும்,
பட்டை நாமக்காரப் பாகவதன் ரூபாயைத்
தட்டிப் பார்ப்பதையும், சந்தோஷம் கொள்வதையும்
கண்டார்கள்.

தான் ஏளனத்துக் காளானதைக் கண்டு குப்பன் சிரித்தான்.

சேக்ஸ்பியர் தம் நாடகங்களில் ஆடவர்களைவிடப் பெண்களை அறிவுக் கூர்மையும் சாதுரியமும் மிக்கவர்களாகப் படைத்துக் காட்டியுள்ளார். அவரைப் போலவே பாவேந்தரும் தம் பெண்பாத்திரங்களான அமுதவல்லி, பூங்கோதை, சுப்பம்மாள், தங்கம், விஜயராணி ஆகியோரையும் அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாகப் படைத்துள்ளார்.

வேட்டுவப் பெண்ணான வஞ்சியையும் தம் கணவனுக்கு அறிவு கொளுத்தும் ஆரணங்காகச் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் வடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

வானளவும் அங்கங்கள், வானரங்கள், ராமர்கள்
ஆனது செய்யும் அனுமார்கள், சாம்பவந்தர்,
ஒன்றல்ல; ஆயிரம் நூல்கள் உரைக்கட்டும்!
விஸ்வரூபப் பெருமை, மேலேறும் வன்மைகள்,
உஸ்ஸென்ற சத்தங்கள், அஸ்ஸென்ற சத்தங்கள்
எவ்வளவோ நூலில் எழுதிக் கிடக்கட்டும்
செவ்வைக் கிருபை செழுங்கருணை அஞ்சலிக்கை
முத்தி முழுச்சுவர்க்கம் முற்றும் உரைக்கட்டும்.
இத்தனையும் சேரட்டும் என்ன பயனுண்டாம்?
உள்ள பகுத்தறிவுக் கொவ்வாத ஏடுகளால்
என்னை அசைக்க இயலாது -

என்று கூறும்போதும்,

மீளாத மூடப் பழக்கங்கள் மீண்டும்உமை
நாடா திருப்பதற்கு நானுங் களையின்று
சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்குக் கூப்பிட்டேன்

என்று உள்ளக் கருத்தை உடைத்துச் சொன்ன போதும் நாம் வேட்டுவப் பெண்ணின் உருவில், ஒரு புரட்சிக் காரியைப் பார்க்கின்றோம்.

இறுதியில் பாவேந்தரின் ஏக்கம் குப்பன் வாய்மொழியாக வெளிவருகிறது.

நல்ல இமயம், நலங்கொழிக்கும் கங்கைநதி
வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை
செந்நெல் வயல்கள்,
செழுங்கரும்புத் தோட்டங்கள்,
தின்னக் கனிகள் தெவிட்டாத பயன்மரங்கள்
இன்பம் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப் பழக்கம், முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல், அங்கதப் போக்கில் தனித்தன்மை வாய்ந்தது. மேலை நாட்டு அங்கதக் காப்பியங்களுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்ததன்று. இதில் பாவேந்தர் கையாண்டிருக்கும் உத்திகள் எந்தத் தமிழ்க் கவிஞராலும் இன்றுவரை கையாளப்படவில்லை. இஃது அவருக்கு வெற்றிக்காப்பியம்.

5

தமிழ் இலக்கிய வரலாற்றில் பாவேந்தரின் குடும்ப விளக்குக்குத் தனியிடம் உண்டு. குடும்ப வாழ்வைச் சிறப்பித்துப் பாடும் கற்பியல் தனிப்பாடல்கள் சங்க இலக்கியத்தில் நிறைய உண்டு.

வள்ளுவர் குடும்ப வாழ்க்கையை இல்லறவியல் என்று ஓர் இயலாகப் பாடினார்.

ஆனால் குடும்ப வாழ்க்கையை ஒரு காப்பியமாகத் தமிழில் பாடிய முதற்பெருமை பாவேந்தரையே சாரும்.

இந்நூற்றாண்டில் வாழும் பெண்ணியவாதிகள் குடும்ப விளக்கைப்பற்றிச் சில மாறுபட்ட கருத்துக்களைக் கூறாமல் இல்லை.

குடும்ப விளக்கில் பெண்ணுக்குத் தலைமையிடம் கொடுத்துப் பாடியிருந்தாலும், பெண்ணை ஓயாமல் பணி புரியும் ஓர் இயந்திரம்போலப் படைத்திருக்கிறார் என்று சிலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும் குடும்ப விளக்கின் தலைவி இருபதாம் நூற்றாண்டுப் பெண்களைப் பிரதிபலிக்கவில்லை என்பதும், அவள் கணவன் என்னும் கதிரவனைச் சுற்றிச் சுற்றி வரும் ஒரு கோளாகவே காட்சியளிக்கிறாள் என்பதும் அவர்கள் குற்றச்சாட்டு.

சங்க காலந் தொட்டுப் பெண்கள் எப்படியிருக்க வேண்டும் என்று இலக்கியங்களும் நீதிநூல்களும் வற்புறுத்துகின்றனவோ அதையே நாகரிகமாகப் பாவேந்தர் வற்புறுத்துகிறார். அவர் சீர்திருத்தவாதி என்பதால், தம் கற்பனைத் தலைவி நற்பண்புகளோடு கல்வியும் கற்று அறிவு நலம் மிக்கவளாகத் திகழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இதுவே குடும்ப விளக்கின் மையக் கருத்து.

குடும்ப விளக்கில் வரும் **முதியோர் காதல்** வேறு யாரும் தொடாத புதிய கருப்பொருள்.

குடும்ப விளக்கை ஒரு குடும்பக் காப்பியம் (Family epic) என்று சொன்னால் அவர் படைத்துள்ள **இருண்ட வீட்டை** ஓர் எள்ளல் குடும்பக் காப்பியம் (Family mock epic) என்று சொல்லலாம். இதுவும் அங்கதப் பாணியில் எழுதப்பட்டுள்ளது.

குடும்ப விளக்கு ஒரு வெற்றிக் காப்பியமாக அமைந்து மக்களின் வரவேற்பைப் பெற்றவுடன், அதற்கு மாறான ஒரு காப்பியச் சிந்தனை அவர் மூளையில் பளிச்சிட்டிருக்கிறது. இதைக் குடும்பவிளக்குக்கு ஒப்பாகச்

சொல்ல முடியாது. என்றாலும் இதில் அவர் கையாண்டிருக்கும் அங்கத உத்திகளும், உவமைகளும் சிறப்பாக உள்ளன.

"குடும்ப முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம். முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படியிருக்கும் என்பது பற்றிய என் எண்ணந்தான் இந்தச் சிறிய நூல்! நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்" என்று குடும்பவிளக்கை முன்னுரையில் அறிமுகப்படுத்துகிறார்.

குடும்ப விளக்கின் தலைவியை முதன்முதலில் அறிமுகப்படுத்தும்போது,

தூக்கத் தோடு தூங்கி யிருந்த
ஊக்கமும் சுறுசுறுப் புள்ளமும் மங்கை
எழுந்ததும் எழுந்தன இருகை வீசி!
தெளிவிலாக் கருக்கலில் ஒளிபடும் அவள்விழி
குளத்து நீரில் குதிக்கும் கெண்டைமீன்

என்று சுறுசுறுப்போடு அறிமுகப் படுத்துகிறார் பாவேந்தர். ஆனால் இருண்ட வீட்டுத் தலைவியின் திருப்பள்ளி யெழுச்சியை,

நாயின் அலறல் நற்பசுக் கதறல்
பானையின் படபடா பையனின் ஐயோ
இத்தனை முழக்கில் ஏந்திழை புரண்டு
பொத்தல் மரத்தின் புழுப்போல் நெளிந்தே
எழுந்தாள் அவளோ, பிழிந்து போட்ட
கருப்பஞ் சக்கையின் கற்றைபோல் இருந்தாள்

என்று அலங்கோலத்தோடு அறிமுகப்படுத்துகிறார்.

'குளத்து நீரில் குதிக்கும் கெண்டைமீன்' என்று குடும்பவிளக்குத் தலைவியின் கண்களைப் பாராட்டிய பாவேந்தர் இருண்ட வீட்டின் தலைவியின் கண்களை,

பாதி திறந்த கோதையின் விழியோ
பலகறை நடுவில் பதிந்த கோடுபோல்

இருந்தது என்று இகழ்ந்து கூறுகிறார். சாறு படிந்து பிசுபிசுத்த கண்கள்தாம் பலகறை போலத் தோற்றமளிக்கும்.

குடும்ப விளக்குத் தலைவியின் அதிகாலைப் பணியை -

பறந்தனள் பச்சைப் பசுங்கிளி; மாடு
கறந்தனள்; வீட்டை நிறம் புரிந்தனள்;
செம்பு தவலை செழும்பொன் ஆக்கினாள்;
பைம்புனல் தேக்கினாள்; பற்ற வைத்த
அடுப்பினில் விளைத்த அப்பம் அடுக்கிக்
குடிக்க இனிய கொத்து மல்லிநீர்
இறக்கிப் பாலொடு சருக்கரை இட்டு,
நிறக்க அன்பு நிறையப் பிசைந்த
முத்தான வாயால் முழுநிலா முகத்தாள்
அத்தான் என்றனள்; அழகியோன் வந்தான்

என்று பட்டியலிட்டுக் காட்டும் பாவேந்தர் இருண்ட வீட்டுத் தலைவியின் காலைப் பணிகளை

மங்கை தூக்கம் நீங்காது
ஊன்றும் அடிகள் ஓய்ந்து தள்ளாடினாள்;
உடைந்த பெட்டிமேல் கிடந்த பிட்டைத்
தொடர்ந்துநாய் தின்பதும் தோன்ற வில்லை;
நடந்து சென்றவள் நற்பசுவுக் கெதிர்
கிடந்த சாணியைக் கிளறி எடுத்து
மீந்தபாற் செம்பில் விழுந்து கரைத்துச்
சாய்ந்து விடாமல் தாழைத் திறந்து
தெருவின் குறட்டில் தெளித்தாள்; அவள்குழல்
முள்ளம் பன்றி முழுதுடல் சிலிர்த்தல்போல்
மேலெழுந்து நின்று விரிந்து கிடந்தது!
வாலிழந்து போன மந்தி முகத்தாள்
கோல மிடவும் குனிந்தாள்; தாமரை
போல எழுதப் போட்ட திட்டம்
சிறிது தவறவே தேய்ந்த துடைப்பம்
அவிழ்ந்து சிதறுமே, அப்படி முடிந்தது.
பொன்னிறக் கதிரொடு போந்த பகலவன்

இந்நில மக்கள்பால் தன்விழி செலுத்தினான்!
கோலம் போட்டவள் கொஞ்சம் நிமிர்ந்தாள்
காலைப் பரிதியின் கண்கள் நடுங்கின!

தூக்கம் கலையாத நிலையில் அவள் மெய்ப்பாடுகளும், அவள் செயல்களும் அவள் தோற்றமும் நகைச்சுவை பொருந்தக் கவிஞரால் வருணிக்கப்படுகிறது. தேய்ந்த துடைப்பம் நல்ல உவமை.

அரிசிமாக் கோலம் அமைத்த குடும்பவிளக்கின் தலைவிக்குப் பகலவன் பொன்னொளியைப் பரிசிலாக நீட்டினான். ஆனால் இருண்டவீட்டுத் தலைவியின் நிமிர்ந்த முகத்தைப் பார்த்த பகலவன் கண்கள் நடுங்கினவாம். சுவையான முரண்.

குடும்ப விளக்கின் தலைவி விருந்தோம்பலை ஒரு கலையாகப் பயின்றவள்.

நற்றமிழர் சேர்த்தபுகழ்
ஞாலத்தில் என்னவெனில்
உற்ற விருந்தை
உயிரென்று பெற்றுவத்தல் - என்பதும்

இட்டுப்பார் உண்டவர்கள்
இன்புற் றிருக்கையிலே
தொட்டுப்பார் உன்நெஞ்சைத்
தோன்று மின்பம் - என்பதும்

குடும்ப விளக்கின் கொள்கை. தங்கம் விருந்தினரை வரவேற்பதும், மகிழ்ச்சியோடு ஓம்புவதும் விருந்தோம்பல் பகுதியில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சோற்றை அள்ளுங்கால்
துவள்வாழைத் தண்டில் உறும்
சாற்றைப்போ லேவடியத்
தக்கவண்ணம் ஊற்று நெய்யை;

எக்கறியில் நாட்டம்
இவர்க்கென்று நீயுணர்ந்தே
அக்கறியை மேன்மேலும்
அள்ளி வை...

என்பது குடும்ப விளக்கின் தலைவிக்கு மாமி கூறும் அறிவுரை. ஆனால் இருண்ட வீட்டில், வந்த விருந்தாளி கேவலப்படுத்தப்படுகிறார். விருந்தாளி தான் பசியோடிருப்பதை,

விடிய நாலுக்கு வீட்டை விட்டுக்
கிளம்பி னேனா? கிளிய னூரில்
சிற்றுண வுக்குச் சுற்றிப் பார்த்தேன்
அகப்பட வில்லை; அதற்குள் வண்டியும்
புறப்பட் டதனால் பொசுக்கும் பசியுடன்
ஏறினேன், இங்கே இழிந்தேன் என்றான்.
இந்தக் கதையை இயம்பித் தனது
பொறுக் கொணாப் பசியைப் புகன்றான்.

வந்த விருந்தாளி வெட்கத்தை விட்டு இப்படி விளம்புகிறான்.

'இழிந்தேன்' என்ற சொல் 'இறங்கினேன்' என்றும் கேவலப்பட்டேன் என்றும் பொருள்படக் கவிஞரால் கையாளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பசிக்கு உணவு கிடைக்காது என்பதை அறிந்து அருகிலிருந்த உணவு விடுதிக்குச் சென்று உண்டு வந்தான் விருந்தாளி.

வேலைக்காரி பாலைக் காய்ச்சி நாலைந்து செம்பு நன்றாய்க் குடித்தபின், தலைவிக்கும் கொடுத்தாள். பின்னர் விருந்தாளியைப் பார்த்து, "காப்பி கீப்பி சாப்பிடுகின்றீரா? ஏற்பாடு செய்யவா?" என்று கேட்டாள். இருண்ட வீட்டுத் தலைவியின் விருந்தோம்பல் மகத்துவம் இது.

வந்த விருந்தாளியோ தலைவியின் சொந்த உடன்பிறப்பு. எப்போதுமே பெண்கள் தம் பிறந்த வீட்டார்

வந்தால் பெருமதிப்புக் காட்டுவர். ஆனால் இருண்ட வீட்டுத் தலைவியோ அதற்கும் புறநடை.

குடும்ப விளக்கின் தலைவி காலையில் எழுந்ததும் 'வீட்டை நிறம் புரிந்தனள்' என்று கூறி, இல்லத் தூய்மையைச் சுட்டிக் காட்டுகிறார் பாவேந்தர். ஆனால் இருண்ட வீடு எப்படி இருந்தது?

வீட்டினில் காற்று வீசுந் தோறும்
மோட்டு வளையில் மொய்த்த ஒட்டடை
பூமழை யாகப் பொழியும் தரையில்
ஊமைக் குப்பைகள் உம்மென்று மேலெழும்.

குழந்தை கிடந்த கூட மெல்லாம்
உழுந்து கிடந்த ஒருகளம் போலவும்
வேம்பின் பழம்பூ விரிதரை போலவும்
ஈயின் காடும் எறும்பின் காடும்
ஆயிற்று......

'உழுந்தின் களம்' ஈ மொய்க்கும் தரைக்கும் 'வேம்பின் பழம்பூ விரிதரை' எறும்பு மொய்த்த வீட்டுத் தளத்துக்கும் பொருத்தமான உவமைகள்.

குடும்ப விளக்கில் மணவழகர் குடும்பம் தமிழோசையும், யாழிசையும், விருந்தோம்பலும் பண்பாடும் பகுத்தறிவும் நிறைந்த இடமாகக் காட்சி அளிக்கிறது. ஆனால் இருண்ட வீட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது,

அறிவெனும் வெளிச்சம் அங்கே இல்லை
மடமை மட்டும் மகிழ்ந்து கிடந்தது

என்று கூறுகிறார் கவிஞர்.

வயிற்றின் உப்பலால் வாயிலாக் குழந்தை
உயிரை இழக்க ஒப்பாது கிடந்தது

இந்த வீட்டில் இருளன் புகுந்ததால்
நொந்தது குழந்தை நோயால்

வாலன் என்னும் மந்திரக் காரனை
அழைக்கின் றேன்என்று அறைந்தாள் சங்கிலி.

இருண்ட வீட்டை மடமை எவ்வாறு ஆட்கொண்டிருக்கிறது என்பதை மேலே சுட்டிய வரிகள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இருண்ட வீட்டின் தலைவி தூங்குமூஞ்சி என்பதை,

நவாப்புக் குதிரை நாடு முழுவதும்
சவாரி வந்து தரையில் புரளல்போல்
படுத்துப் புரண்டு பிடித்தாள் தூக்கம்

என்று நயம்படச் சித்திரிக்கிறார் பாவேந்தர். கணவன் மனைவி குடும்பச் சண்டையையும் சுவைபட எடுத்து வைக்கிறார்.

எங்கிருந் தாயடி என்குடிக் கிப்படி
மங்கிப் போக வைத்தாய் காலடி
பொங்க லாண்டி யாகப் போம்படி
புரிவ தெல்லாம் மிகவும் அழும்படி

இது தலைவனின் பல்லவி.

ஊருக் கழித்தாய் உருப்படவா நீ
நாட்டுக் கழித்தாய் நலம்பட வாநீ
இனியும் ஊரில் எடுபட வாநீ

இது தலைவியின் அனுபல்லவி.

மலைக் குரங்கா மனிதரா அவர்தாம்?
கோணங்கி ஆடிக் கொக்க ரித்தார்
ஆணாய்ப் பிறந்தால் அமர்க்கை வேண்டும்
இவர்போல் மனிதரை யான்பார்த்த தில்லை
சுவரா கல்லா சொல்வதைப் பொறுக்க?
மூச்சு விட்டாலும் ஆச்சா என்கிறார்
சீச்சி இவரொரு சின்னப் பிறவி!

இது தலைவியின் கோடி அருச்சனை.

குழப்பமும் குளறுபடியுமாக இருந்த இருண்டவீடு இறுதியில் கொலை கொள்ளையில் முடிவடைகிறது.

சுருக்கமான இக்காப்பியம் நறுக்குத் தெரித்தாற்போல் சில காட்சிகளைக் கண்முன் நிறுத்தி நிறைவு பெறுகிறது.

பாரதிதாசனுக்குப் பிறகு உவமைக் கவிஞர் சுரதா சில அங்கதப் பாடல்களை எழுதியிருக்கிறார்.

இன்றைய புதுக் கவிஞர்கள் அங்கதக் கூறுகள் அடங்கிய தனிப்பாடல்கள் நிறைய எழுதுகின்றனர். அங்கதக் காப்பியம் எழுதும் முயற்சியில் யாரும் ஈடுபடவில்லை.



3

காந்தியம் பாடிய கவிக்குயில் பாரதிதாசன்

திராவிட இயக்கத்தில் காலெடுத்து வைப்பதற்கு முன்பு, புதுவைக் கனக சுப்புரத்தனம் பேராயக் கட்சியின் உண்மை ஊழியராகவும், சிறந்த காந்தியவாதியாகவும், முருக பக்தராகவும் விளங்கினார். இது தமிழ்மக்கள் பலருக்குத் தெரியாது.

இந்திய தேசியம் பாடிப் பல ஆண்டுகள் பயிற்சி பெற்ற பிறகுதான் அவர் தமிழ்த்தேசியம் பாடினார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வங்கத் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த அரவிந்த கோஷ், தமிழ்நாட்டைச் சேர்ந்த பாரதி, வ.வே.சு. அய்யர், வாஞ்சி நாதன், மாடசாமி ஆகியோர், ஆங்கில அரசின் தொல்லைக்கு அஞ்சிப் பிரெஞ்சுப் புதுவையைப் புகலிடமாகக் கொண்டு வாழ்ந்தனர்.

இந்தத் தீவிரவாதக் கும்பலோடு கட்டிளங் காளையான கனக சுப்புரத்தனமும் சேர்ந்துகொண்டார். ஆங்கில அரசின் ஒற்றர்களின் பிடியில் சிக்காமல் இவர்களைப் பாதுகாத்தார்; தீவிரவாதிகளுக்குத் துப்பாக்கி வாங்கிக் கொடுத்தார்; தீவிரவாத நடவடிக்கைகளில் பங்கு கொண்டு இவரும் தீவிரவாதியாகவே வாழ்ந்தார்.

இச்செய்திகள் யாவும் இவர் எழுதியுள்ள நூல்கள் மூலமாகவும், இவரைப் பற்றிப் பிறர் எழுதியுள்ள நூல்கள்

மூலமாகவும், புதுவையிலிருந்து வெளியான **தேசசேவகன், ஸ்ரீசுப்ரமணிய பாரதி கவிதா மண்டலம், சுதந்திரன்** போன்ற ஏடுகள் மூலமாகவும் அறியக் கிடக்கின்றன. முனைவர் இளவரசு எழுதியுள்ள **இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன்** என்னும் நூல் இவற்றை விரிவாக ஆய்வு செய்கிறது.

தீவிரவாதியாக இருந்த கவிஞர் பாரதிதாசன் காந்தியவாதியாக மாறி 1920 ஆம் ஆண்டு சத்தியாக்கிரக இயக்கத்திலும் பங்கெடுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்கத்தா காங்கிரசில் உருவான ஒத்துழையாமை இயக்கத்தைப் பாராட்டி **வ.ரா.** வின் 'சுதந்திரன்' இதழில் பாரதிதாசன் எழுச்சி மிக்க கவிதைகள் எழுதினார்.

அடிமை உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த பாரதத்தைத் தட்டி எழுப்புவதற்கும், முழு விடுதலை அடைவதற்கும் பதினெட்டுக் கூறுகள் கொண்ட நிர்மாணத் திட்டம் ஒன்றை காந்தியடிகள் மக்கள் முன் வைத்தார். அதன் கொள்கைகளை அப்படியே ஏற்று அவற்றுக்கு இலக்கிய வடிவம் தந்தார் பாரதிதாசன்.

காந்திய இயக்கத்தைப் பரப்பும் நோக்கில் பாரதிதாசன் இயற்றி, அச்சான நூல்கள் மூன்று, அவை

'சிறுவர் சிறுமியர் தேசியகீதம்'

'தொண்டர் படைப்பாட்டு'

'கதர், இராட்டினப் பாட்டு' என்பன.

கதர் இராட்டினப் பாட்டை வெளியிடக் காசில்லாமல், தம் மனைவி பழனியம்மாளின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை விற்று அதை வெளியிட்ட செயல், கவிஞரின் கொள்கை வெறிக்குச் சான்று.

சிறுவர், சிறுமியர் தேசியகீதம் பாரதியின் அரையுருவப் படமும், கருத்து விளக்கப் படங்களும் கொண்டு, நாலணா விலையில் வெளியிடப்பட்டது. நல்ல வர்ண மெட்டுக்களில் தேசிய கீதங்கள், தேசிய விடுகவிகள், தேசியத் தாலாட்டுகள், தேசிய விளையாட்டுப் பாடல்கள், சிட்டுக்குருவிப் பாட்டு, நிலாப்பாட்டு, நாய்ப்பாட்டு, தேசியக்கப்பல், தேசியக் கல்யாணப்பாடல்கள் என்பவை அத்தொகுப்பில் அடங்கும்.

ஆத்திகராக அன்று விளங்கிய இளைய பாரதிதாசனுக்குக் காந்தியடிகளின் பிறப்பு ஓர் அதிசய நிகழ்ச்சியாகப்பட்டது. இறைவன் அனுப்பிய பரிசுத்த ஆவி இயேசுவாக அவதரித்தது போல், இறைவனின் அருட் பேரொளியே காந்தியாக அவதரித்தது என்பதைக்

குறுகிய செயலில் வையம்
குதித்தது; கரைக்கு மீள
இறையவன் அருளின் காந்தி
எழுந்தது புவியில் நெஞ்சே!

என்று பாடுகிறார்.

அன்னியர் நூலைத் தொடோம் என்றசேதி
அறைந்திடடா புவி முற்றும் - எங்கள்
அறுபது கோடி தடக்கைகள் ராட்டினம்
சுற்றும் சுற்றும் சுற்றும்!

இன்னல் செய்தார்க்கும் இடர்செய்திடாமல்
இராட்டினம் சுற்றென்று சொல்லும் - எங்கள்
ஏதமில் காந்தி யடிகள் அறச் செயல்
வெல்லும் வெல்லும் வெல்லும்!

கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகிறேன் அதைக் கேளே - நீவிர்
கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே தூளே தூளே!

என்று கதர்ப்பாட்டைப் பாடியதோடு அமையாமல், பாரதிதாசன் கதர்மூட்டையைத் தோளிலும் சுமந்து விற்றார்.

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களுள் குறிப்பிடத்தக்கது தேசியக் கல்வித்திட்டம்.

"ஆங்கிலக் கல்வியால் படித்த மக்களுக்கும் பாமர மக்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி ஏற்பட்டுவிடும். பாமரமக்களின் உள்ளம் வளர வழியின்றிச் சிறைப்பட்டே இருக்கும். அதனால் சுயராஜ்ஜியத்தை நிர்ணயம் செய்வதில் பாமரமக்கள் எந்தப் பங்கும் வகிக்க முடியாது" என்று மிகுமக்கள் நலனுக்கு எதிரான ஆங்கில மோகத்தைச் சுட்டுகிறார் காந்தியடிகள். இக்கருத்தை வலியுறுத்த வந்த பாரதிதாசன்,

செந்தமிழாற் கம்பன்
சிறந்தானா நேற்றிங்கு
வந்தவரின் ஆங்கிலத்தால்
இன்பம் வளர்த்தானா?

அருச்சுனன்போல் கண்ணன் போல்
ஆக நினைத்தால்
மருளூட்டும் ஆங்கிலத்தை
மாய்ப்பீர் உம் சிந்தையிலே...

வந்தவர்பால் நீங்களெல்லாம்
வாங்கியுண்ணக் கற்றீர்கள்
நொந்த உமதுகுலம்
ஈடேற நோக்கீரோ

என்று பாடுகிறார்.

உடை உணவு, மருத்துவம், வழிபாடு ஆகியவற்றிலும் வெள்ளையரைப் பின்பற்றி வந்த இழிநிலையை, ஒத்துழையாமை இயக்கம் வன்மையாகக் கண்டித்தது. பாரதிதாசனும் இப்பண்பாட்டுச் சீரழிவை **'நீசநாகரிகம்'** **'ஸ்வதர்மம்'** முதலிய பாடல்களில்,

வெள்ளைத்துரை உடைபோ லுடுப்பீர்மயிர்
வெட்டிக்கொள்வோம் தமிழ் துப்பிச் செல்வோம் - எனத்
துள்ளுது மற்றொரு நாகரீகம் இதிற்
சொக்குதல் பற்பலர் பாரதமே

செந்தமி ழிற்பெயரிட் டறியாக் கொடு
தேயிலை காப்பியை முப்பொழுதும் - உண்டு
வந்தனை செய்யென நாகரீகமொன்று
வல்லமை காட்டுது பாரதமே.

வெள்ளை வயித்தியம் தெய்விகமாம் - அதை
வேண்டி அழைப்பது செய்தவமாம்
உள்ள மகிழ்ந்து குதிக்குதிங்கே - புலை
ஊனர் விரும்பிய நாகரீகம்

என்று கடுமையாகச் சாடுகிறார்.

"பணம் படைத்தவர்கள் பசுபாலனத்தில் சேவை யுணர்ச்சியோடு ஈடுபட வேண்டும். சுயலாபமும் சுரண்டலும் இதில் கூடாது. பசுபாலனம் எளிதன்று. அந்நிய ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றுவதைவிட இது கடினமானது" என்று பசுபாலனம் பற்றிக் கூறியுள்ளார் காந்தியடிகள். அக்கொள்கையை அப்படியே ஏற்றுக் கொண்ட பாரதிதாசன், தமிழ் இலக்கண இலக்கியங்களிலிருந்து 'ஆநிரை' பற்றிக் கூறிய கருத்துக்களை மேற்கோளாக எடுத்து ஒரு கட்டுரையில் விளக்கியுள்ளார்.

மடியினில் பால்சுமந்தே
மாந்தருக்களித்திட வருகின்ற தாய். என்றும்

மோரொடு சுளைத்தயிரும் - மணம்
மொகு மொகு மொகுவென நெய்ப்பயனும்
தருகின்ற தாய் என்றும்

குவலயம் தனக்கொரு செவிலி என்றும்

பசுவைப் பலபடப் பாராட்டுகிறார் பாவேந்தர்

எங்கணும் பசுச்சாலை - பசு
எழுந்ததும் எழும்பசிக் குணவிடுக - இனி
எங்கணும் புல்வெளிகள் - தன்
னிச்சையில் மேய்ந்திட ஆள்விடுக - மனம்
பொங்கிடும் இசைப்பாட்டில் - பசு
பூரிக்க இடையிடை புரிந்திடுவீர் - உல
கெங்கணும் பசுக்குளங்கள் - அதன்
இன்னுடல் அழுக்கறத் தேய்த்திடுவீர்,

எனப் பசுப்பாதுகாப்பைத் தம் பாடலில் வலியுறுத்திப் பாடுகிறார்.

காந்தியத்தின் பன்முகப்பட்ட பணிகளுள் மதுவிலக்குக் கொள்கை சிறப்பிடம் பெற்றது. இதைப் பற்றிக் குறிப்பிட்ட காந்தியடிகள், "சமூகத் துறையிலும், நல்லொழுக்கத்துறையிலும் இதுவொரு ஜீவாதாரமான சீர்திருத்தம். எனினும் காங்கிரசார் இதில் நியாயமாக எவ்வளவு ஆர்வம் காட்ட வேண்டுமோ, அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. மதுவிலக்கில் ஈரோடு மட்டுமே அஞ்சாது பணியாற்றி வருகிறது. அதனால் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கருக்கு ஒரு மாதச் சிறைத் தண்டனை பரிசாகக் கிடைத்திருக்கிறது" என்று தமது 'யங் இந்தியா' இதழில் பாராட்டி எழுதியுள்ளார்.

மேல்நாட்டு மதுவுக்குப் புகழ்பெற்ற புதுச்சேரியில் வாழ்ந்த பாரதிதாசன், மதுவிலக்குப் பணியிலும் தம்மை இணைத்துக் கொண்டு பாடிய மூன்று பாடல்கள் இப்போது கிடைத்துள்ளன. குடியர்கள் குடிப் பழக்கத்திலிருந்து மீண்டு தெளிவு பெற்றுப் பாரததேவியிடம் கூறுவதாக ஒரு பாடல் :

அம்மா இனிக்குடிக்க மாட்டோம் அதன்தீமை
கைமேற் கனிபோலக் கண்டுவிட்டோம் ஏழைகள்
பொய்ம்மானைப் பின்பற்றி ராமன் புரிந்ததுபோல்
இம்மதுவின் மாயங்கண் டிடறித் தலைகவிழ்ந்தோம்

நஞ்சிருந்த பாண்டத்தை நக்கி வசமிழந்து
நெஞ்சிலுர மிழந்து நீதியிழந்தோ மெந்தாயே!
பஞ்சத்தைத் தேசத்தைப் பாபத்தைப் பெண்டாட்டி
நெஞ்சத்தை எண்ணி விஷப்புனலை நீக்கிவிட்டோம்...

என்று பாடி மதுவின் தீமைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். பிள்ளைப்பாட்டாக மதுவிலக்கு விடுகவி ஒன்றும் பாடுகிறார் கவிஞர்.

ஈக்கள் எறும்புகள் எலிகள் பூனைகள்
எருதுகள் குதிரைகள்
பூக்கள் மரங்கள் செடிகள் கொடிகள்
புளிகள் மிளகாய்கள்.

ஊக்கங் கெடவைத் துங்கள் பணத்தை
ஒழித்துப் பாரதத்தை
ஏக்கங் கொள்ள அறிவை மயக்குவ
திவற்றில் எது சொல்வாய்.

இப்பாடலில் பன்மை விகுதியாகிய 'கள்' அடிதோறும் மீண்டும் மீண்டும் வருவதைக் காணலாம். இதில் குறிப்பிட்டவற்றுள் 'புளிகள்' என்பது விடை. புளித்த கள்ளைச் சாப்பிட்டால் மயக்கம் கொள்வது போல் மயங்கிப் பின் தெளிவடைந்து விடையைக் கண்டுபிடிக்கிறோம்.

"நாட்டின் செல்வத்தில் பெரும்பகுதி சிலரிடத்தில் மட்டுமே குவிந்திருக்கிறது. ஆனால் கோடிக்கணக்கான மக்கள் உண்ணவும் உடுக்கவும் வகையில்லாது அவதிப்படுகின்றனர். நாட்டில் பொருளாதார சமத்துவம் தேவை. மக்களிடையில் பொருளாதார ஏற்றுத் தாழ்வு இருக்கின்ற வரையில் அகிம்சை முறையில் ஆட்சி நடத்துவது சாத்தியமில்லை" என்றார் காந்தியடிகள்.

பொருளியற் சமன்மையையும், பாட்டாளி மக்களையும்பற்றிப் பாரதிதாசன் நிரம்பப் பாடியிருக்கிறார். ருசிய நாட்டையும் இலெனினையும்கூடப் பாராட்டிப் பாடி

இருக்கிறார். இருப்பினும் அவர் காந்திய வாதியாக இருந்த காலத்தில்,

போய்த்தொடு வோம் அந்த விண்ணை அமுதத்தைப்
பூமிக்கெலாம் தருவோம்
தாய்கொடுத் தாளிந்தச் சத்திய வேலென்று
தாரணி ஆண்டிடுவோம்
ஏழைகள் கையிருப் புள்ளவர் என்னும்
இரட்டையைக் கொன்றிடுவோம்
சூழ்க்கொருத்தன் அழும்படி ஆண்டிடும்
கோலை முறித்திடுவோம்

என்று பாடிய பாடல் குறிப்பிடத்தக்கது.

"இந்நாட்டுச் சேரிகளில் அரிஜனங்கள் தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கொடுமைக் கொப்பான கொடுமை உலகில் வேறெங்கிலும் இல்லை. தீண்டாமை இந்து மதத்துக்கு ஏற்பட்ட மாசு! சாபம்!" என்று காந்தியடிகள் கூறியுள்ளார்.

இளமை தொட்டே பாரதிதாசனுக்கும் அரிஜன மக்களுக்கும், நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. "புதுவை மாநிலத்து அரிஜன மக்களின் குரலாகவே பாவேந்தர் விளங்கினார். பெரும்பாலான கிராம அரிஜனத் தலைவர்கள் அவரது சீடர்கள்" என்று குறிப்பிடுகிறார் பழம்பெரும் தேசிய வாதியும், சர்வோதயத் தலைவருமான எஸ். ஆர். சுப்பிரமணியம்.

இதந்தரும் சமநோக்கம் இல்லா நிலத்தில் நல்ல
சுதந்தரம் உண்டாகுமோ?

என்பது தான் பாரதிதாசனின் முதல் கேள்வி. 'பஞ்சமர் பார்ப்பனர் என்பதெல்லாம் பாரதநாட்டுப் பழிச்சின்னத்தின் பேர்' என்பது அவர் கருத்து.

தீண்டாமை என்னுமொரு பேய் - இந்தத்
தேசத்தில் மாத்திரமே திரியக் கண்டோம் - எனில்

ஈண்டுப்பிற நாட்டிலிருப்போர் - செவிக்கு
ஏறியதும் இச்செயலைக் காறி யுமிழ்வார்

என்று தீண்டாமையின் இழிவைச் சுட்டிக் காட்டுகிறார்.

'ஆலய உரிமை' என்னும் பாடலில் தாழ்த்தப் பட்டோருக்கு நுழைவுரிமை மறுக்கப்படுவதை வன்மையாகக் கண்டித்து,

உயர்ந்தவர் கையில் வரத்தினைச் சாமி
ஒளிமறைவில் தரத்தான் - மிகப்
பயந்திழிந்தோர்களைக் கோயில் வராவண்ணம்
பண்ணினதோ அறியேன்.

தாழ்த்தப் பட்டார்க்குத் தனிக்கோயில் நன்றெனச்
சாற்றிடும் தேசமக்கள் - அவர்
வாழ்த்தி அழைக்கும் 'சுதந்தரம்' தன்னை
மறித்திடும் நாச மக்கள்.

முப்பது கோடியர் பாரதத்தார் இவர்
முற்றும் ஓரேசமுகம் - என
ஒப்புந் தலைவர்கள் கோவிலில் மட்டும்
ஒப்பாவிடில் என்ன சுகம்?

என்று பாடுகிறார் பாவேந்தர்.

பெண்ணுரிமை பற்றிப் பாரதிதாசன் பாடிய அளவு வேறு எந்தக் கவிஞரும் பாடவில்லை. கைம்மை மணத்தை ஆதரித்துத் தமிழில் முதன்முதலாகக் கவிதை படைக்கும் துணிச்சல் பாரதிதாசனுக்கு மட்டுமே இருந்தது.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கியிவ் வையம் தழைக்கும்' என்றும், 'எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண்ணிங் கிளைப்பில்லைகாண்' என்றும் விடுதலைக் கும்மி பாடினார் பாரதி. பாரதிதாசனும் 1923 ஆம் ஆண்டில் 'வெற்றி நெருக்கம்' என்ற தலைப்பில் **தேச சேவகன்** என்ற இதழில் ஒரு கும்மிப்பாடல் பாடினார்.

வேட்கை இருக்குதடி இந்த நேரத்தில்
　　வெற்றி இருக்குதுபார் எதிரே
நாட்டில் விடுதலை என்பதோர் நற்பதம்
　　நம்மை நெருங்குது மாதர்களே!

மேட்டு நரிகட்கும் மேய்ந்திடும் கூகைக்கும்
　　மேனி நடுங்கிடப் போவதில்லை
பூட்டிய வண்டி யவிழ்ப்பதில்லை உயிர்
　　போகுமட்டும் விடப் போவதில்லை

என்று பெண்டிர் எழுச்சிக்குக் கட்டியம் கூறுகிறார்.

பாவேந்தர் படைப்புக்களில் ஒரு சிறப்பான உண்மை நமக்குப் புலனாகும். அவர் ஆத்திகராக இருந்த நேரத்திலும், நாத்திகராக இருந்த நேரத்திலும், தேசியவாதியாக இருந்த போதும், திராவிட இயக்கவாதியாக இருந்தபோதும் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கையில் முழு ஈடுபாட்டுடன் விளங்கினார். தம்மை அக்கொள்கைக்கு முழுமையாக ஒப்படை செய்து தம் படைப்புக்களைச் செய்தார். அவர் இளமையில் நூற்றுக்கு நூறு காந்தியவாதி.



4

மகாகவி பாரதிதாசன்

உலக மக்கள் உள்ளத்தில் காலத்தால் அழிக்க முடியாத கல்வெட்டுகளாக இடம் பெறுபவர்களே மகாகவிகள். தமிழகத்தில் மகாகவிகள் வரிசையில் இடம் பெறும் தகுதி பெற்றவர்கள் ஐவர். திருவள்ளுவர், இளங்கோ, கம்பன், பாரதி, பாரதிதாசன் ஆகியோரே அவர்கள்.

ஒருவன் மகாகவி என்று அறியப்படுவதற்கு அவன் படைப்புகளே உரைகல்.

இருபதாம் நூற்றாண்டில் கவியரசுகள், கவிமணிகள், வெண்பாப் புலிகள், ஆசு கவிகள், அருட் கவிகள் என்று நூற்றுக்கணக்கானவர் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சாதித்தவை மிகக் குறைவு.

பாரதிதாசன் படைப்புகள் தமிழையும், தமிழினத்தையும் உயர்த்தியிருக்கின்றன; தமிழுக்குப் புதிய பாதைகளை வகுத்துக் கொடுத்திருக்கின்றன. அவர் படைப்புகளின் தாக்கம் தமிழ்மக்களின் உள்ளத்தை மாற்றியிருப்பதோடு, தமிழக அரசியலையும் மாற்றும் ஆற்றல் பெற்றிருந்தது.

புதிய பாதைகள்

கடந்த சில நூற்றாண்டுகளாக, தமிழ்க் கவிதைத் துறையில் பெரிய தேக்கம் ஏற்பட்டிருந்தது. சிறு பிரபந்தம் என்ற பார்த்தீனியப் புதர் தமிழ்நாடெங்கும் செழித்து வளர்ந்தது. குறுநிலமன்னர், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் காதல் லீலைகளையும், பாலியல் வக்கிரங்களையும், உலா,

தூது, கோவை, மடல், விலாசம் என்று பல கவிஞர்கள் மலைமலையாக எழுதிக் குவித்தனர். பலர் தல புராணம், பிள்ளைத்தமிழ், அந்தாதி என்று பக்திப் பிரபந்தங்களைப் பாடித் தள்ளினர்.

இப்பிரபந்தங்களில் தலைவன் மாறுவானே தவிர, கருத்துக்கள் மாறுவதில்லை. இந்தச் செக்குமாட்டுப் பிரபந்தங்களின் நிலைபற்றிப் பாரதிதாசன் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

கலம்பகம் பார்த்தொரு கலம்ப கத்தையும்
அந்தாதி பார்த்தொரு அந்தாதி தன்னையும்
மாலை பார்த்தொரு மாலை தன்னையும்
காவியம் பார்த்தொரு காவியந் தன்னையும்
வரைந்து சாற்றுக் கவிதிரிந்து பெற்று
விரைந்துதன் பேரை மேலே எழுதி
இருநூறு சுவடி அருமையாய் அச்சிட்(டு)
ஒருநூற்றாண்டில் ஒன்றிரண்டு பரப்பி
வருவதே புலமை வழக்காறு....

இப்பிரபந்தங்களில் குறுநில மன்னர்களும், நிலப்பிரபுக்களுமே சமுதாயமாகச் சித்திரிக்கப்பட்டனர். அடித்தள மக்களைப் பற்றிப் பேச்சே இல்லை. உளுத்துப்போன இப்பணக்காரக் கோட்டையை முதலில் வெடி வைத்துத் தகர்த்தவன் பாரதி. இங்கிலாந்துநாட்டு இளவரசரையும், எட்டயபுரத்துப் பட்டத்தரசரையும் பாடிய வாயால், கரும்புத் தோட்டத்தில் கண்ணீர் வடித்த கூலிக்காரப் பெண்களையும் பாடினான்.

இலக்கியத்தில் படைக்கப்படும் தலைவர்கள் உயர்குடிப் பிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் வற்புறுத்துகின்றன. பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடியினரைச் சேர்ந்த ஏவலர்கள் தலைவர்களாகக் கவிதையில் இடம் பெறுவதில்லை. இந்த மரபைப் பாரதிதாசன் சுக்குநூறாக உடைத்தார்.

வண்டிக்காரன், மாடு மேய்ப்பவன், ஆலைத் தொழிலாளி, காடைக்காரக் குறவன், கூடைக்காரக் குறத்தி, செப்படி வித்தைக்காரன், பூக்காரி, பாவோடும் பெண் - இப்படிப் பாரதிதாசனின் பாட்டுடைத் தலைவர் தலைவியர் பட்டியல் நீள்கிறது.

உள்ளே இருப்பவர் முதலாளிச்செட்டி
ஏறுகால் மேல்தானென் சர்க்கரைக் கட்டி
தெரியவில்லையோடி தலையில் துப்பட்டி?
சேரனே அவர் என்றால் அதில் என்ன அட்டி?
.... அதோ பாரடி!

என்று இசை முழக்கோடு எக்காளமிடுகிறது அவரது வண்டிக்காரன் பாட்டு.

மேலை நாடுகளில் வோர்ட்ஸ் வொர்த், ஷெல்லி, கீட்ஸ் போன்ற கவிஞர்கள் இயற்கையைப் பற்றித் தனிக் கவிதைகள் நிறையப் பாடி 'இயற்கைக் கவிதை' என்ற தனித்துறையைத் தோற்றுவித்தனர்.

இயற்கையைத் தமிழில் தனித் துறையாகப் பாடியவர் எவருமில்லை. சங்க இலக்கியங்களிலும் பிற இலக்கியங்களிலும் இயற்கை வருணனை அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம் பெற்றிருந்ததே தவிர, தனித் துறையாக அமையவில்லை.

பாரதிதாசன் தான் முதன்முதலாக 'அழகின் சிரிப்பு' என்று இயற்கையின் சிறப்பைத் தனிநூலாகப் பாடினார்.

செக் நாட்டுத் தமிழறிஞராகிய காமில் செலபில் என்பவர் இந்நூலைப் பார்த்துவிட்டு, "இந்நூலின் தலைப்பே ஒரு கவிதை" என்று பாராட்டினார்.

தமிழ்க் கவிஞர் சிலர் தமிழின் சிறப்பையும் இனிமையையும் சில தொடர்களிலும் சில தனிப்பாடல்களிலும் ஆங்காங்கே குறிப்பிட்டுச் சென்றனர். ஆனால் தமிழைப் பற்றியும், அதன் சிறப்பைப் பற்றியும்,

அதன் மறுமலர்ச்சியைப் பற்றியும் எந்தத் தமிழ்க் கவிஞனும் தனிநூல் எழுதவில்லை. அத்தகைய நூலைத் 'தமிழியக்கம்' என்ற பெயரில் பாரதிதாசனே முதன் முதலாக எழுதினார்.

வள்ளுவர் இல்லறவியலில் குடும்ப வாழ்க்கை பற்றிச் சில அதிகாரங்கள் எழுதியுள்ளார். சங்க இலக்கியங்களில் இல்லற வாழ்க்கையின் பண்புகள் சில பாடல்களில் சித்திரிக்கப் பெறுகின்றன. காப்பியங்களும், சில கீழ்க்கணக்கு நூல்களும் குடும்ப வாழ்க்கையின் சிறப்பைப் பற்றிச் சில பாடல்களில் பேசுகின்றன.

ஆனால் தமிழரின் குடும்ப வாழ்க்கையைத் தமிழ்ப் பண்போடு ஆராய்ந்து 'குடும்ப விளக்கு' என்ற பெயரில் தனி இலக்கியமாக எழுதிய ஒரே கவிஞர் பாரதிதாசன் அவர்களே.

'அங்கதம்' என்ற கவிதைத்துறை தொல்காப்பியத்தில் பேசப்படுகிறது. செம்பொருள் அங்கதம், பழிகரப்பங்கதம் என்று அது இரு வகைப்படும். இவ் விருவகை அங்கதங்களுக்கும் எடுத்துக்காட்டுக்களாக எத்தனையோ பாடல்கள் உள்ளன. ஆனால் அங்கதத் துறைக்குத் தனிநூல்கள் ஏதுமில்லை. மேலைநாட்டுக் கவிஞர்கள் அங்கதத் துறையைக் - குறிப்பாகப் பழிகரப்பங்கதத்தை Satire என்ற பெயரில் தனித்துறையாக வளர்த்திருக்கின்றனர்.

ஹொரேஸ், ஜூவனல் என்ற இலத்தீன் ஆசிரியர்களும், ரெபலே, வால்டையர் என்ற பிரெஞ்சு அறிஞர்களும், டிரைடன், போப், டன் என்ற ஆங்கிலக் கவிஞர்களும் பழிகரப்பங்கதத்தை ஒரு தனிக்கலையாகவே வளர்த்திருக்கின்றனர். போப்பின் 'கூந்தலின் கற்பழிப்பு' (Rape of the Lock) என்ற அங்கதக் காப்பியம் உலகப்புகழ் பெற்றது.

மேலைநாட்டுக் கவிஞர்களின் அங்கதக் காப்பிய வடிவில் தமிழில், வெளிவந்த முதற்காப்பியம் பாரதிதாசன் எழுதிய 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்'. பாரதிதாசனுக்கு

ஆங்கில இலக்கியப் பயிற்சி கிடையாது. அவர் தனித்தமிழ்ப் புலவர். சஞ்சீவி பர்வதத்தின் சாரல், அவர் சிந்தையில் தனித்துவத்தோடு தோன்றிய ஒப்பற்ற கற்பனை. இந்நூல் 1930 இல் அவருடைய நண்பராகிய நோயல் என்பவரால் வெளியிடப்பட்டது.

செம்பொருள் அங்கதம் தனிப்பட்ட ஒரு மனிதனிடத்திலோ, சமுதாயத்திலோ உள்ள குறைகளை நேரடியாகச் சாடுவது, பழிகரப்பங்கதம் நகைச்சுவை பொருந்தக் கேலி செய்வது. பாரதிதாசன் இரண்டிலும் வல்லவர்.

தமிழ்ச் சமுதாயத்தில் உள்ள மூடநம்பிக்கையைச் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் நயம்படக் கேலி செய்கிறார்.

மேலை நாட்டு ஆசிரியர்கள் தம் அங்கதக் காப்பியங்களில் கையாண்டிருக்கும் இயல்நிலை கடந்த உத்தியை (Super natural element) இவரும் இக்காப்பியத்தில் சிறப்பாகக் கையாண்டு வெற்றியும் பெற்றிருக்கிறார்.

'பெண் குரங்குத் திருமணம்', 'ஏசுநாதர் ஏன் வரவில்லை?', 'நம் மாதர் நிலை', 'எமனை எலி விழுங்கிற்று' என்ற தனிப் பாடல்களும் பழிகரப்பங்கதத்திற்கு அருமையான எடுத்துக்காட்டுகள்.

ஓர் ஒழுங்கற்ற குடும்பத்தின் நடவடிக்கைகளை 'இருண்ட வீடு' என்ற நூலில் அவர் கேலி செய்திருக்கும் நயம் மீண்டும் மீண்டும் படித்து மகிழத் தூண்டுவது.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கைம்பெண் மணத்தை ஆதரித்து எழுத எழுத்தாளர்கள் அஞ்சினர்; பழமை வாதிகளின் எதிர்ப்புக்கு நடுங்கினர். காந்தியடிகள் கூட 'பருவம் அடைவதற்கு முன் கணவனை இழந்த இளம் கைம்பெண்கள் வேண்டுமானால் மறுமணம் செய்து கொள்ளலாம்' என்று 'யங் இந்தியா' ஏட்டில் எழுதினார்.

ஆனால், பாரதியார், தாம் நடத்திய 'இந்தியா' ஏட்டில் இக்கருத்தை எதிர்த்து எழுதினார் :

கைம்பெண் மணத்துக்கு வயது வரம்பு விதிக்கக் கூடாது என்பது பாரதியின் கருத்து. ஏட்டில் பாரதி இதை எதிர்த்தாலும் பாட்டில் எழுதத் துணியவில்லை. ஆனால் பாரதிதாசன் கைம்பெண் மணத்தை ஆதரித்துப் பல கவிதைகள் எழுதியிருக்கிறார்.

கைம்பெண் மணத்தை ஆதரித்துத் துணிச்சலாகக் கவிதை பாடிய முதல் தமிழ்க்கவிஞர், பாரதிதாசன் அவர்களே.

ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்
அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?
பேடகன்ற அன்றிலைப்போல், மனைவி செத்தால்
பெருங்கிழவன் காதல்செயப் பெண்கேட் கின்றான்!
வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ!
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

இதைவிடச் சிறப்பாகக் கைம்பெண் மணத்தை ஆதரித்து எந்தக் கவிஞரும் எழுத முடியாது.

பழந்தமிழ்ப் பாவலர்கள் உதடு ஒட்டாத கடுந்தமிழில் காப்பியம் செய்வதைப் பெருமையாக நினைத்தனர்.

ஆனால் பாரதி, "எளிய இனிய பாடல்களில் எல்லாருக்கும் எளிதாகப் புரியும் தமிழில் எவன் காப்பியம் செய்கிறானோ அவன் தமிழுக்குப் பெரும் தொண்டு செய்தவன் ஆகிறான்" என்று பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார். அக்கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்ட பாரதிதாசன், 'புரட்சிக்கவி', 'எதிர்பாராத முத்தம்', 'பாண்டியன் பரிசு', 'தமிழச்சியின் கத்தி' போன்ற இனிய காப்பியங்களை எளிய நடையில் எழுதித் தமிழுக்குத் தொண்டு செய்திருக்கிறார்.

எதிர்ப்பிலே வளர்ந்தவர்!

'பாரதிதாசன் கவிஞனே இல்லை. பாரதிக்குப் பிறகு கவிஞன் எவனும் தோன்றவில்லை' என்று கட்டுப்பாடாக மேடையிலும், செய்தி ஏடுகளிலும் பிரசாரம் செய்ய ஒரு கூட்டம் தமிழ்நாட்டில் கச்சை கட்டிக் கொண்டிருந்தது.

தமிழ்நாட்டில் வெளியாகிக் கொண்டிருக்கும் சில பணக்கார ஏடுகளில் எழுதினால்தான் படைப்பாளன் என்ற அங்கீகாரம் கிடைக்கும் என்ற நிலை இன்றும் உண்டு. அதை உடைத்தெறிந்தவர் பாரதிதாசன்.

மிக எளிமையான திராவிட இயக்க ஏடுகளான குடியரசு, திராவிட நாடு, முரசொலி, பொன்னி போன்றவற்றில் எழுதித்தான் பாரதிதாசன் பாவேந்தராக உருப்பெற்றார்.

அவர் பாவேந்தராக உருப்பெற்ற பிறகு, அதே பணக்கார ஏடுகள் அவருடைய எழுத்துக்களை வேண்டிப் பெற்றுத் தம் ஏடுகளை நிரப்பிக்கொண்டன. அரசாங்க விளம்பரங்கள்கூட அவருடைய மேற்கோள்களையே நம்பி யிருக்கின்றன. பாரதிதாசன் இன்று எல்லாருக்கும் இன்றியமையாதவ ராகிவிட்டார்.

தொடக்க காலத்தில் கட்சிப் பகைமை காரணமாகப் பொதுவுடைமைக் கட்சியினரும் பாரதிதாசனை ஒதுக்கினர். கட்சி மேடைகளில் பாரதிதாசனைப் பற்றிப் பேசக் கூடாது என்று பொதுவுடைமைக் கட்சி தனது தோழர்களுக்கு ஆணையிட்டிருந்தது.

பொதுவுடைமைக் கட்சி தமிழகத்தில் கால் ஊன்றுவதற்கு முன்பே உருசிய நாடு சென்று திரும்பிய பெரியார், பொதுவுடைமைக் கொள்கைப் பிரச்சாரம் மேற்கொண்டார். பாரதிதாசனும் அதே காலத்தில் லெனினைப் புகழ்ந்தும், பொதுவுடைமைக் கொள்கையை ஆதரித்தும் கவிதைகள் எழுதினார்.

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ-

என்று தமிழ்நாட்டு நிலப்பிரபுக்களுக்கும் செல்வர்களுக்கும் எச்சரிக்கை விடுத்தார். பொதுவுடைமைக் கருத்துக்களைத் தமிழ் இலக்கிய வாகனத்தில் முதன்முதலில் ஏற்றிய பெருமை பாரதிதாசனையே சாரும்.

நக்கீரனுக்கு அடுத்தாற்போல் தமிழ்க் கவிதை வரலாற்றில் அஞ்சாமை மிக்க கவிஞர் பாரதிதாசன்தான்.

எவர்பேரால் ஆனாலும் உயர்ந்த தென்னும்
எதன்பேரால் ஆனாலும், ஏய்த்து வாழ்தல்
தவறேதான் அவ்வாறு வாழ்ப வர்க்குத்
தடியடிதான் தமிழடிதான்

என்று பாடியதோடு, செயலிலும் காட்டும் துணிச்சல் அவருக்கு இருந்தது.

இந்நாட்டின் மூடத்தனத்தையும், அறியாமையையும் 'ஊதையினில் துரும்புபோல்' அலைக்கழித்தார். மாத்தமிழ் வல்ல மகாமகோபாத்தியாயர்களும், பண்டித மணிகளும், தமிழகத்திலும் புதுவையிலும் வாழ்ந்த அதிரடி அரசியல் தலைவர்களும் இவர் கவிதைச் சாட்டை வீச்சிலிருந்து தப்ப முடியவில்லை. கருத்து வேறுபாடுகள் வந்தபோது தம்மை வளர்த்துவிட்ட பெரியாரையும், அண்ணாவையும்கூட அவர் தாக்கத் தவறவில்லை.

ஆனால் எதையும் தாங்கும் இதயம் பெற்ற அண்ணா, அவற்றைப் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு, பாரதிதாசனுக்குப் பொற்கிழி வழங்கியும், கடற்கரைச் சாலையில் சிலை வைத்தும் பாராட்டினார்.

தூற்றற்குரியவர்களைத் தூசியெனத் தூற்றிய பாரதிதாசன், போற்றற்குரியவர்களை உளமாரப் போற்றினார்.

நிறைவான வாழ்க்கை

பாரதிதாசன் இந்த நூற்றாண்டில் சிறப்பு மிக்க நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர். புதுவையில் நல்ல வருவாயோடு சிறப்பாக நீண்ட ஆசிரியப் பணி புரிந்து ஓய்வு பெற்றார். திரைப்படத் துறையிலும், எழுத்துத் துறையிலும் இவர் சம்பாதித்தது அந்தக் காலத்தில் அதிகம் என்றே சொல்லலாம். சேமிக்கத் தெரியாதவர்; விருந்து இல்லாத சோறு இவருக்கு மருந்து.

தமிழ்நாட்டில் எந்தக் கவிஞனும் தான் வாழ்ந்த நாட்களில் இவ்வளவு புகழோடும் செல்வாக்கோடும் வாழ்ந்ததில்லை.

"பேரறிஞர் அண்ணாகூட, பாரதிதாசன் எதிரில் நின்று கொண்டுதான் பேசுவார். அண்ணாத்துரை! ஏ நிக்கற? உட்கார்? என்று இவர் கூறினால்கூட அண்ணா நின்றுகொண்டுதான் பேசுவார். அவ்வளவு மரியாதை பாவேந்தரிடம்" என்று கவிஞர் சுரதா என்னிடம் ஒரு முறை கூறினார்.

தமிழரிடையே இவரைப்போல், ஒரு பெரிய கவிஞர் பரம்பரையை விட்டுச் சென்ற வேறு கவிஞர் யாருமில்லை.

நெருங்கி வந்த ஞானபீடப் பரிசு

இந்தியாவிலேயே மதிப்பிற்குரிய மிக உயர்ந்த இலக்கியப் பரிசு ஞானபீடப் பரிசு. தமிழ்நாட்டில் முதன்முதலாக இவருக்குத் தான் அப்பரிசு பரிந்து வைக்கப்பட்டது. பரிந்துரைத்தவர்கள் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், காரைக்குடி கம்பன் அடிப்பொடி சா. கணேசன், பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம் ஆகியோர். ஆனால் அப்பரிசு முடிவு வெளியாவதற்கு முன்பே பாரதிதாசன் இறந்துவிட்டார். அப்பரிசு வாழும் கவிஞர்களுக்கு வழங்கும் பரிசு. பின்னர் அது மலையாளக் கவிஞர் சங்கர் குருப்புக்கு அவ்வாண்டு வழங்கப்பட்டது.

பாரதிதாசனுக்கு நன்றிக் கடன்

பாரதிதாசனுக்குப் பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாகத் திராவிட இயக்கத்தவரும் நன்றிக்கடன் பட்டவர்கள்.

பாரதிதாசன் திராவிட இயக்கத்தின் காப்பிய வடிவம்; போர் முரசு.

பிரெஞ்சுப் புரட்சிக்கு விக்தர் யூகோவும், ருசியப் புரட்சிக்கு மாயகோவ்ஸ்கியும் எப்படி ஈட்டி முனையாக விளங்கினார்களோ அதுபோல் பாரதிதாசன் திராவிட இயக்கப் புரட்சிக்கு ஈட்டி முனையாக விளங்கினார்.

இந்தி எதிர்ப்புப் போரில்,

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்! இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்?
அற்பமென்போம் அந்த இந்தியினை - அதன்
ஆதிக்கந் தன்னை எதிர்த்திடுவோம்!

என்று எக்காளமிட்டபடி இயக்க இளைஞர்கள் அணிவகுத்துச் சென்றனர்.

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனச் செயல்செயப் புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி, எழு!
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திற, விழி!

என்று திராவிட இயக்கப் பேச்சாளர்கள் இவருடைய பாடலைப் பாடித்தான், இளைஞர் பட்டாளத்தைத் தம்பால் ஈர்த்தனர்.

திராவிட இயக்கக் கொள்கைகளான சாதி ஒழிப்பு மூடநம்பிக்கை ஒழிப்பு, கடவுள் மறுப்பு, கைம்மை மணம்,

சமூக சீர்திருத்தம், தன்னாட்சி ஆகியவற்றுக்கு இவருடைய பாட்டு வரிகளே பதாகைகளாகிப் பட்டொளி வீசிப் பறந்தன.

பாரதிதாசன் திராவிட இயக்கத்துக்கு ஆற்றிய அருந்தொண்டுக்கு நன்றிக் கடனாகத் தமிழக அரசும், புதுவை அரசும் அவருக்குச் சிலையெடுத்துள்ளன; அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவகம் ஆக்கியுள்ளன; அவர் படைப்புக்களை அரசுடைமை ஆக்கியுள்ளன; அவர் பேரால் அறக்கட்டளைகள் நிறுவி நினைவுப் பரிசுகள் வழங்குகின்றன. ஆண்டுதோறும் விழா எடுத்துச் சிறப்பிக்கின்றன. ஆனால் இவர்கள் நன்றிக்கடன் இப்பணிகளோடு முற்றுப் பெறவில்லை.

[1]நடுவண் அரசின் அஞ்சல் துறை பாரதிக்கும், நாமக்கல் கவிஞருக்கும் அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது. மிகவும் காலங் கடந்து பாரதிதாசனுக்கு (2001 அக்டோபரில்) அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

பாரதிதாசன் எழுதி வெளிவராத அவரது படைப்புகள் அவர் மகன் மன்னர் மன்னனிடம் இன்னும் உள்ளன. அவற்றை அச்சு வாகனத்தில் ஏற்ற, தமிழக, புதுவை அரசுகள் உதவ வேண்டும்.

பாரதிதாசனுக்குச் சிலையெடுப்பது, ஓரிலக்கம் நினைவுப்பரிசு வழங்குவது ஆகியவற்றைவிட, அவர் படைப்புகளை உலக மொழிகளில் பெயர்த்து உலகெங்கும் பரப்புவது மிகத் தேவையான பணி. இப்பணி தனிப்பட்ட ஒருவரால் செய்யக் கூடியதன்று. ஆங்கிலமும், பிரெஞ்சும், தமிழும் வல்ல தேர்ந்த மொழி பெயர்ப்பாளர் குழுவொன்றை அமர்த்தி இவ்விரு அரசுகளும் தான் இப்பணியைச் செய்ய வேண்டும்.

---

9. 10. 2001இல் பாரதிதாசன் அஞ்சல் தலை புதுவையிலும் சென்னையிலும், சேலம் தமிழ்ச் சங்கத்திலும் வெளியிடப்பட்டது.

பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின்போது அவர் படைப்புகளிலிருந்து எண்பத்து நான்கு பாடல்களை மட்டும் தேர்ந்தெடுத்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. அது போதாது.

பாரதிதாசன் படைப்புக்கள் முழுவதும் உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில் பாரதிதாசன் படைப்புக்களைப் பற்றிய திறனாய்வு நூல்கள் நிறைய வெளிவர வேண்டும்.



5

கம்பனும் பாரதிதாசனும்

'நோக்கெதிர் நோக்கு'

பெண்களின் விழிகளையும், அவற்றின் நோக்கையும் பாடாதவன் கவிஞன் அல்லன்.

உலகப் பெருங்கவிஞன் சேக்ஸ்பியர், பாவையின் கண்களைப் 'பல்கலைக் கழகம்' என்றும், அவற்றின் நோக்கை 'மௌன மொழிகள்' என்றும் பாராட்டுகிறான்.

ஆங்கில மெய்விளக்கக் கவிஞரான (Metaphysical Poet) ஜான்டன் தன் காதலியைப் பாராட்டும்போது, 'உன் பார்வை நம் கண்களைத் தைத்துப் பிணைக்கும் நூல்' என்று பாடுகிறான்.

தமிழில் கண்களைப் பற்றிப் பலரும் பாடியிருந்தாலும், அவற்றின் நோக்கைப் பற்றி வள்ளுவரைப் போல யாரும் விரிவாகவும், நுணுக்கமாகவும் பாடவில்லை.

வள்ளுவர் காதலியின் நோக்குப்பற்றிக் 'குறிப்பறிதல்' என்ற தலைப்பில் ஒரு தனி அதிகாரமே எழுதியிருக்கிறார்; காமத்துப்பாலில் வேறு அதிகாரங்களிலும் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்லுகிறார்.

காதலியை முதன் முதலில் சந்திக்கும்போது அவள் நோக்கு எப்படியிருக்கும் என்பதில் தொடங்கிப் படிப்படியாக விளக்கிக் கொண்டும் செல்லுகிறார்.

வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் களவியலில் காதலரின் நோக்குக்கும் இலக்கணம்

கூறியிருக்கிறார். காதலர் நோக்கின் குறிக்கோளைப் பற்றிக் குறிப்பிட்ட அவர்,

> நாட்டம் இரண்டும்
> அறிவுடம் படுத்தற்குக்
> கூட்டியுரைக்கும் குறிப்புரை - என்பார்.

'அறிவுடம்படுதல்' என்பது, இங்குத் தலைவனும், தலைவியும் தங்கள் ஒருமித்த காதலை ஐயமின்றிப் பார்வையால் புரிந்து கொள்ளுதல் என்பதாகும்.

காதலின் தொடக்கத்தில் ஒரு தலைவி பரிமாறும் நோக்கைக் 'கள்ளகளவு கொள்ளும் சிறு நோக்கம்' என்றும், 'செற்றார் போல் நோக்கு' என்றும், 'ஏதிலார் போலப் பொதுநோக்கு' என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

இருவருக்கும் காதல் உடன்பாடு ஏற்பட்ட பின்பும் தலைவன் நோக்கும்போது அவனைப் பார்த்து மெதுவாகப் புன்னகைப்பதுதான் தலைவியின் இயல்பு (குறள் 1094.)

காதலில் ஈடுபடும் தலைவியின் பன்முக நோக்கைச் சுவையாகக் குறிப்பிடும் வள்ளுவர், அவளுக்கு ஒரு கட்டுப்பாட்டை மட்டும் விதிக்கிறார் என்ன அக்கட்டுப்பாடு?

குறிக்கொண்டு நோக்காமை! அதாவது உற்றுப் பார்க்காமை!

ஓர் ஆடவன் முதன் முதலாக ஒரு பெண்ணைப் பார்க்கும் போது, அதை எதிர்கொள்ளும் பெண், ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குவாள்; அல்லது சட்டெனப் பார்வையை விலக்கிக் கொள்வாள். இதுதான் இயல்பாக நடக்கும். அப்படியின்றி ஆடவன் பார்வையை எதிர்கொண்டு, அவளும் உற்றுப் பார்த்தால் அப்பெண்ணைப் பற்றி ஆடவன் தவறாக எண்ணக் கூடுமன்றோ?

ஆடவரை உற்றுப் பார்க்காத பெண்டிரின் உயர் பண்பை வள்ளுவர் 'குறிக்கொண்டு நோக்காமை' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார். அதற்குப் பொருள் கூறவந்த உரையாசிரியர் காலிங்கர், 'நம்மோடு பயின்றிலாமையின் குறிக்கொண்டு எதிர்முகம் நோக்காமை' என்பார்.

உருது மகாகவி மிர்சா காலிப் தமது கஜல் கண்ணி ஒன்றில், காதலியின் கடைக்கண் பார்வையின் சிறப்பை விதந்து கூறும்போது,

உன் கடைக்கண் பார்வை
கொடுக்கும் பேரின்பத்தை
என்னால் எப்படி
விளக்க முடியும்?

நாணமின்றி என்னை நீ
உற்றுப் பார்த்திருந்தால்
நம் காதலின் மீது
எனக்கு -
நம்பிக்கையே
இல்லாமல் போயிருக்கும்

என்று பாடுகிறார்.

பொதுவாகக் காதலுக்குக் கடைக்கண் பார்வையே திறவுகோல் என்பது புலனாகிறது.

கம்பராமாயண ஆராய்ச்சியாளர்கள் ஒருமுகமாக ஒரு கருத்தை வற்புறுத்துவதுண்டு. ''வால்மீகி இராமாயணம் ஆரியப் பண்பாட்டின் அடிப்படையில் வடமொழியில் எழுதப்பட்ட காப்பியம்.

கம்பன் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்பப் பல இடங்களில் மாற்றம் செய்து தனது இராமாயணத்தை எழுதியிருக்கிறான்.

தமிழ்ப் பண்பாட்டின்படி களவியலுக்குப் பின்தான் கற்பியல் வாழ்க்கை அமைய வேண்டும். எனவேதான்

திருமணத்துக்கு முன்பாகவே, மிதிலையில் இராமனையும் சீதையையும் சந்திக்க வைத்துக் களவியலுக்கு வழிகோலியிருக்கிறான் கம்பன்'' என்று கூறுவர். கம்பனுடைய தமிழ்ப் பண்பாட்டுப் பற்றைப் பாராட்டுகிறோம்.

இராமனுக்கும் சீதைக்கும் கம்பன் அமைத்த களவியல் காட்சி சரிதான். ஆனால் களவியல் காட்சியில் அவர்கள் பார்த்த பார்வைதான் சரியில்லை.

சீதை தன் தோழியரோடு கன்னி மாடத்தின் உப்பரிகை மீது நின்று, அன்னம் தன் பேடையோடு ஆடும் அழகினைக் கண்டு களித்துக் கொண்டிருக்கிறாள். அப்போது இராமன் மிதிலை நகர் வீதியில் தன் தம்பியோடும், விசுவாமித்திர முனிவரோடும் வந்து கொண்டிருக்கிறான். அப்போது இருவர் விழிகளும் சந்திக்கின்றன. இச்சந்திப்பைக் கம்பன் கீழ்க்காணும் பாடலில் விளக்குகிறான்.

எண்ணரு நலத்தினாள்
இனையள் நின்றுழி
கண்ணொடு கண்இணை
கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது
உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்;
அவளும் நோக்கினாள்.

முதல் சந்திப்பில் முன்பின் அறியாத ஓர் ஆடவனின் நோக்கு தன்மீது விழும்போது, இயல்பாக ஏற்படும் நாணம் கலந்த மெய்ப்பாடு சீதையிடம் தோன்றவில்லை. 'கண்ணொடு கண்கள் கவ்வின. உணர்வு ஒன்றி ஒன்றை யொன்று உண்ணவும் தொடங்கின' என்பது இயற்கைக்கு மாறாகவும், தமிழ்க் களவியல் இலக்கணத்துக்கு மாறாகவும் அமைந்துள்ளது.

அடுத்த பாடலில் 'சீதையின் நோக்கு இராமனின் தோளிலும், இராமனின் நோக்கு தாக்கணங்கு அனையவள் தனத்திலும் தைத்தவே' என்று கம்பன் பாடுவது, இராமன் போன்ற அவதார புருடன் பண்புக்கு ஏற்றதாகத் தெரியவில்லை.

இனி, இதே சூழ்நிலையில் அமைந்த பாரதிதாசன் பாடல் ஒன்றைப் பார்ப்போம். 'காதற் குற்றவாளிகள்' என்பது பாட்டின் தலைப்பு. பாட்டுடைத் தலைவன் சுந்தரம்; தலைவி சொர்ணம். வீட்டுப் பெரியவர்கள் வெளியில் சென்றிருக்கிறார்கள். அப்போது பக்கத்து வீட்டுச் சொர்ணம் உள்ளே வருகிறாள். எதிர்பாராத சந்திப்பு!

பாடம் படிப்பதில் மூழ்கியிருந்தான் சுந்தரம். அவன் அழகைக் கண்களால் பருகியபடி சொர்ணம் ஒரு கணம் நின்றிருக்கிறாள். அப்போது சுந்தரம் நிமிர்ந்து பார்க்கிறான். அவர்கள் பார்வை மோதிக்கொள்கின்றன. இந்தக் காட்சியை விளக்க வந்த பாரதிதாசன்.

> **பாடம்படித்து நிமிர்ந்த விழி - தனிற்**
> **பட்டுத் தெரித்தது மானின் விழி**
> **ஆடை திருத்திநின் றாள் அவள்தான் - இவன்**
> **ஆயிரம் ஏடு திருப்புகிறான்**

என்று பாடுகிறார்.

ஓர் ஆடவன் பார்வையை முதன் முதலாக எதிர்கொள்ளும்போது, சொர்ணத்தின் பார்வை பட்டுத் தெரிக்கிறது. அவளை நாணம் சூழ்ந்து கொள்கிறது. இது போன்ற சூழ்நிலையில் ஒரு பெண்ணின் மெய்ப்பாடு எப்படியிருக்கும் என்பதைத் தொல்காப்பியர், 'அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்' என்று குறிப்பிடுகிறார். இது இயல்புதானே? எந்த இடத்தில் ஆடை எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கிறதா என்பதைப் பார்த்துச் சரி செய்து கொள்வதுதானே பெண்மைக்கழகு!

இது போன்ற நேரங்களில் ஆடவன் மெய்ப்பாடு என்ன? குழப்பம், சொர்ணத்தின் பார்வையால் தாக்குண்ட சுந்தரம் கல்வியில் படிந்த கவனம் சிதறுண்டு, 'ஆயிரம் ஏடு திருப்புகிறான்!'

சில ஆடவர்கள் படிக்கும் புத்தகத்தைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டிருப்பதும் உண்டு.

6

புதுக்கவிதையில் இருண்மை

முன்னுரை

இருண்மை என்பது தெளிவற்ற தன்மை. பிரபந்தக் காலத்தில் ஆட்சி செய்த சிலேடை, யமகம், திரிபு, சித்திர கவிதை ஆகியவற்றிலேயே இருண்மை தொடங்கிவிட்டது. என்றாலும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்க் கவிதையில் ஏற்பட்ட இருண்மைக்கு ஐரோப்பியக் கவிதைகளின் தாக்கமே காரணம்.

19 ஆம் நூற்றாண்டில் அறிவியல், பொருளியல், அரசியல், புவியியல், உளவியல், தத்துவவியல் ஆகியவற்றில் ஏற்பட்ட வளர்ச்சியும், பொருள் முதல் வாதமும், மார்க்சியச் சிந்தனையும் புரட்சிகரமான மாறுதல்களைத் தோற்றுவித்தன. ஒவ்வொரு கலையிலும் சிறப்புத்துறைகள் (Specialization) தோன்றிக் கிளைத்தன.

ஓர் இயற்பியல் வாதியின் மொழி, மற்றோர் இயற்பியல் வாதியாலும், ஒரு துறையைச் சார்ந்த சிற்பி ஓவியர் அல்லது இசைமேதைகளின் நுட்பம், அவ்வத்துறையைச் சார்ந்த மற்ற கலைஞர்களாலும் மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டன. இப்பாதிப்பு கவிதையிலும் தனித்தன்மை வாய்ந்த சிறப்புப் பிரிவுகளைத் தோற்றுவித்தது. அப்பிரிவுகளில் குறிப்பிடத்தக்கவை குறியீட்டியல் (Symbolism), மீமெய்ம்மையியல் (Surrealisum), புதிரியல் (mysticism), படிமவியல் (Imagism) என்பன.

ஐரோப்பியக் கவிதைகளில் இருண்மை படர்வதற்கு இவை அடிப்படையாக விளங்கின. பிரெஞ்சுப் புரட்சிக் காலத்திலும், ஜெர்மனியில் நாஜிசமும், இத்தாலியில்

ஃபாசிசமும் தலை விரித்தாடிய காலத்திலும் கவிஞர்கள் தங்களை மறைத்துக் கொண்டு, தங்கள் கருத்துக்களை வெளியிட இந்த உத்திகள் பெரிதும் கைகொடுத்தன.

கவிதையின் இயல்பு

> "கவிதை மொழியால் ஆனது; மொழி எப்போதும் துல்லியம் அற்றது; தர்க்கம் அற்றது. கவிதை ஆக்கத்தில், இக்கூறுகள் இன்னும் கூடுதலாகிக், கவிதைக்குள் கணக்கில்லா மௌனங்கள், இடைவெளிகள், புதிர்கள், தொனிகள், யூகங்கள் குடியிருக்க நேர்கிறது"

என்றும்

> "கவிதை எப்போதுமே வார்த்தைக்கான அகராதிப் பொருளில் இல்லை. வார்த்தைகளுக்கு இடையிலான உறவிலும், அந்த உறவு வாசகனுக்குள் எழுப்பும் அலைகளிலும் இருப்புக் கொண்டிருக்கிறது"

என்றும் கூறும் முனைவர் பஞ்சாங்கத்தின் கூற்று அப்படியே ஏற்றுக் கொள்ளத்தக்கது.

ஆர்தர் ரேம்போ என்பவன் பிரெஞ்சுநாட்டு ஞானசம்பந்தன். அவன் தன் பத்தாவது வயதிலேயே இலத்தீனில் கவிதை எழுதிப் பரிசு பெற்றவன். பதினாறாம் வயதில் தீவிரமாக எழுதத் தொடங்கிப் பத்தொன்பதாம் வயதில் கவிதை எழுதுவதை அடியோடு நிறுத்திவிட்டவன் அந்த மூன்றாண்டுகளில் வெளிவந்த அவன் படைப்பு அளவில் சிறிதே ஆயினும் ஐரோப்பியக் கவிதைகளின் தலைவிதியையே மாற்றிவிட்டது.

ரேம்போ கவிதை இலக்கணத்தையும், வடிவத்தையும் ஒதுக்கித் தள்ளினான். கவிதைச் சொற்களின் இயல்பான பொருளையே மாற்றி, சொற்களின் தன்னியக்கம், சொல்மயக்கம், சொல்விளையாட்டு, ஓசைவேறுபாடு இவற்றின் மூலம் மொழியின் தொடக்க நிலைப்

பண்புகளைக் கிளப்பிப் படிப்பவர் உள்ளத்தில் பல்வேறு உணர்ச்சி வேறுபாடுகளைத் தோற்றுவிக்க முயன்றான்.

தான் வெளிப்படுத்தும் ஒவ்வோர் உணர்ச்சிக்கும் ஒரு புதிய கவிதை மொழியை உருவாக்க முடியும் என்று கனவு கண்டான்; அதற்கான முயற்சியும் மேற் கொண்டான்.

'புரிதல்' என்பது நிலையற்றது; அதுவோர் தோற்றமே. புரியாமைதான் நிலையானது. புரியாமை, இருண்மை என்ற பண்புகள்தாம் ஆதிநாள் தொட்டு ஆர்வத்தைத் தூண்டிக் கிளர்ச்சியூட்டி இயற்கையின் மேல் அழியாக் கவர்ச்சி ஏற்பட ஆதாரமாக இருந்து வந்திருக்கின்றன. கவிதைக்குரிய சிறப்பே இருண்மைதான் என்பது மேலை நாட்டில் கவிஞர் சிலரின் கொள்கை.

அறிவுச் செறிவு

எஸ்ரா பவுண்டின் கவிதைப் பூட்டைத் திறக்கத் திறவுகோலின் (Keybook) துணையின்றி முடியாது. அவர் கவிதைகளைப் புரிந்து கொள்ளப் பலமொழி யறிவும், பன்முகப்பட்ட இலக்கிய வரலாற்றுப் புலமையும், கிரேக்க இதிகாசத் தெளிவும் பெற்றிருக்க வேண்டும்.

சீன, ஜப்பானியக் கவிதைப் போக்கும், கன்பூசியத் தத்துவமும்... ஃபாசிசமும் தெரிந்திருக்க வேண்டும். பேரகராதி, மற்றும் பன்மொழிச் சிற்றகராதிகளின் துணையும் வேண்டும்.

பவுண்டின் சமகால நண்பர்கள், அவர்களிடம் அவர் கொண்டிருந்த நட்பு, அந்தரங்கம் யாவும் தெரிந்திருக்க வேண்டும். இவ்வளவும் போதாது; இசையறிவும், சிற்ப ஓவியக் கலையறிவும் வேண்டும்.

காதலையும், வீரத்தையும், இயற்கையையும் பாடிக் கொண்டிருந்த எளிதான போக்கை மாற்றித் தீவிரமான ஒரு கவிதைப் போக்கை உருவாக்கக் கவிஞர் டி.எஸ். எலியட் நினைத்தார். கவிதை சிக்கனமும் சுருக்கமும், நுணுக்கமும்,

சிக்கலும் உடையதாக இருக்கவேண்டுமென்று கருதினார் ஒருசிலரே புரிந்துகொண்டாலும், கவிதை தரமாக இருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. எனவே கவிதையின் வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் சில மாற்றங்கள் ஏற்படுத்தினார்.

தம் கருத்து வெளிப்பாட்டிற்கு ஆங்கிலம் போதவில்லையென்றால் வேறு மொழிகளையும் இடையிடையே கையாளுவார். தாம் எழுதியுள்ள **பாழ்நிலத்**தில் (waste land) மட்டும் ஆறு வேறு மொழிகளைக் கையாண்டிருக்கிறார்.

ஹோமர் முதல் தற்காலப் படைப்பாளர் நூல்களிலிருந்தும், இந்து பௌத்தம் முதலிய கீழைநாட்டு மதங்களிலிருந்தும் தொன்மங்களிலிருந்தும், விவிலியத்திலிருந்தும் விளம்பரமில்லாத கட்டுக் கதைகளிலிருந்தும், பலதுறைத் தத்துவங்களிலிருந்தும் மேற்கோள்களையும், மரபுத் தொடர்களையும் அள்ளித் தெளித்துக் கொண்டு போவார். படிப்பவர் அவற்றில் முட்டி மோதி மூச்சுத் திணறுவர்.

எலியட்டின் செறிவான இக்கவிதைப் பாணியை ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் என்ற திறனாய்வாளர் கவிதைச் சுருக்கெழுத்து (Poetic shorthand) என்று குறிப்பிடுகிறார்.

கவிதையைப் படைப்பவனும், கவிதையைப் படிப்பவனும் கடுமையான மூளையுழைப்பை வெளிப்படுத்த வேண்டும் என்பது எலியட்டின் கருத்து.

இவரது படைப்பில் உள்ள இருண்மையின் காரணமாக அருவக் கவிஞர் (Invisible poet) என்று இலக்கிய வாதிகளால் இவர் அழைக்கப்படுகிறார்.

டி. எஸ். எலியட், எஸ்ரா பவுண்ட் இருவரின் பாதிப்பு இந்நூற்றாண்டுப் பிற்பகுதித் தமிழ்க் கவிதையில் அதிகம். இப்புதுக்கவிதைப் புலிகளைப் பார்த்துத் தம் உடம்பில் சூடு

போட்டுக் கொண்ட தமிழ்க் கவிஞர்கள் ஏராளம். எலியட்டின் பாழ்நிலத்தைப் படியெடுத்துத் தம் கற்பனைப் படைப்பாக்கிக் கொண்ட நகல் கவிஞர்களும் இங்கு உண்டு.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒருவன் சிறந்த தமிழ்க்கவிஞனாக விளங்க வேண்டுமென்றால், அவன் பன்மொழியறிவும், பல்துறையறிவும் பெற்றவனாக இருப்பதோடு, தமிழ் இலக்கண இலக்கியப் புலமை மிக்கவனாகவும் இருக்க வேண்டும். இத்தகுதிகள் பெற்ற தமிழ்க் கவிஞர்களை ஒருகை விரல்களால் எண்ணிவிடலாம். அவர்களுள் அப்துல்ரகுமான் முதல்வர். இவருக்குச் செறிவான தமிழ்ப் புலமையும், உருதுப் புலமையும், பாரசீக ஆங்கிலப் பயிற்சியும் உண்டு.

அப்துல் ரகுமானின் 'பால்வீதி' வெளியான போது, அந்நூலைப் பாராட்டியும் கேலி செய்தும் ஏகப்பட்ட விமர்சனங்கள் வெளிவந்தன. அந்நூலின் வாசலில் காலெடுத்து வைக்கும்போதே தலையில் இடிப்பது போல் முதற்பாடல் அமைந்துள்ளது.

என் ஆறாவது விரல் வழியே
சிலுவையிலிருந்து
வடிகிறது ரத்தம்
ஆம் -
என் மாம்சம்
வார்த்தை ஆகிறது

இதைப் படித்தவுடன் எல்லாருக்கும் குழப்பம்.

'ஆறாவது விரல்' என்பது அவர் எழுதுகோலின் உருவகம். அதைத் தொடர்ந்து வரும் வரிகளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் பைபிள் படித்திருக்க வேண்டும். அவருடைய உடலையும், உள்ளத்தையும் உருக்கி வெளிப்படுத்தும் கவிதை உணர்வே மாம்சம்.

பால்வீதியில் 'செவியின் சுவாசம்' என்பது ஒரு பாடலின் தலைப்பு. இஃது இசையைப் பற்றிய கவிதை.

சுவாசம் காற்றலை. இசை ஒலி அலை. ஒலியலையைக் குறிப்பிடக் காற்றலையை எப்படிப் பயன்படுத்தலாம்?

சங்க இலக்கியத்தில் வேறு யாரும் கையாளாத ஓர் உவமையை ஒரு கவிஞன் கையாளுகிறான்.

தன் காதலியின் அழகுக்கு உவமை கூறப் புகுந்த அவன் 'தொண்டி யன்ன நின்னலம்' என்று குறிப்பிடுகிறான்.

ஒரு பெண்ணின் அழகுக்கு மயிலை, பூங்கொடியை உவமையாகக் கேட்டுப் பழக்கப்பட்ட நமக்கு, ஓர் ஊரை உவமை கூறியது புதிராகத் தோன்றலாம்.

பாரதிதாசன் தம் குடும்பவிளக்கில், தலைவியின் இசையைப் பற்றிக் குறிப்பிடும்போது,

'தெளிதமிழ்ப் பவனி வந்தாள்;
செவிக்கெலாம் காட்சி தந்தாள்'

என்று பாடுகிறாரே! எப்படி? செவிக்குக் காட்சி ஏது?

வடநாட்டின் இசைக்குயில் லதா மங்கேஸ்கருக்கு 'இல்லஸ்ட்ரேடெட் வீக்லி' என்ற ஆங்கில ஏடு ஒருமலர் வெளியிட்டது. அம்மலரின் முகப்பில் அவள் படத்தைப் போட்டு, அதன் அடியில் Moonlight in her throat என்ற நயமான வரி அச்சிடப்பட்டிருந்தது.

ஒரு பாடகியின் குரலுக்கு நிலவொளியை உருவகப்படுத்தலாமா? இவை யாவும் புதுமையின் காரணமாக இலக்கியக் கலைஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பரந்த இலக்கிய அனுபவம் இல்லாதார் இவற்றைப் புரிந்து கொள்ள முடியாது.

குறியீட்டியம்

ஒப்புறவாலும் ஒட்டுறவாலும் மற்றொன்றைக் குறிப்பாக உணர்த்தும் பொருள் குறியீடு எனப்படுகிறது.

இறைச்சி, உள்ளுறை உவமம் என்று தமிழ் இலக்கணங்களில் பேசப்படுபவையும் குறியீட்டு உத்திகளே.

சங்க இலக்கியங்களிலும் சித்தர் பாடல்களிலும் குறியீட்டு உத்தி பரவலாகக் கையாளப்பட்டிருந்தாலும், அதுவோர் தனிக் கவிதைத் துறையைத் தமிழில் தோற்றுவிக்கவில்லை.

பிரெஞ்சு நாட்டில் குறியீட்டியக்கம் (Symbolic movement) என்று தனி இயக்கமே இருந்தது. இக்குறியீட்டியக்கத்தின் 'பிதாமகன்' என்று கருதப்படுபவன் பிரெஞ்சுக் கவிஞனான போதலேர் (Baudelaire). அவன் எழுதியுள்ள 'கடற்பறவை' (Albatross) சிறந்த குறியீட்டுப் பாடலாக எல்லாராலும் போற்றப்படுகிறது.

வட்டமிடும் பேரழகாக
வானத்தின் உச்சியில் மிதந்த
அந்தப் பறவை
இப் போது -
கேலிக்குரிய பொருளாகி விட்டது.

குழல் போன்ற அதன்
நீண்ட மூக்கையும்
நடக்க முடியாத அதன்
கால்களையும் பற்றியிழுத்து
மாலுமிகள் விளையாடுகின்றனர்.

வேட்டைக்காரர்களின்
அம்புகளுக்கு எட்டாமல்
சூறாவளியைச்
சுவைத்துப் பறந்த
மேகமண்டலத் திளவரசன்
இப்போது மண்ணில்?

துடுப்புப் போல் நீண்ட
அதன் -

மாபெரும் சிறகுச் சுமையே
பூமியில்
அதனை முடமாக்கிவிட்டது.

'வான மண்டலத்து இளவரசன்' என்று பாராட்டப்படும் இந்தக் கடற்பறவை நீண்ட சிறகுகள் உடையது. வானத்தை அனாயாசமாக அளக்க உதவும் அப்பெரிய சிறகுகளே, பூமியை அடைந்ததும் அதற்குப் பெரிய சுமையாக மாறி விடுகின்றன. அவற்றைத் தூக்கிக் கொண்டு அப்பறவையால் அடியெடுத்து வைக்க முடியவில்லை.

போதலேர் தனது ஆற்றல் மிக்க கற்பனைச் சிறகுகளின் உதவியோடு சொர்க்க மண்டலத்தில் பறந்தாலும், இவ்வுலகப் பற்றும், சிற்றின்ப இச்சையும் தம்மைப் பிணித்து முடக்கிவிடுவதாக வருந்துகிறான். அந்த வருத்தத்தின் குறியீடே இப்பாடல்.

தமிழ்ப் புதுக் கவிஞர்களுள் இருண்மை மிக்க கவிதைகள் படைக்கும் 'அருவக் கவிஞர்' அபிபுல்லா. அவர் எழுதிய 'ராப்பிச்சைக்காரன்' குறியீட்டுக் கவிதைக்குச் சிறப்பான எடுத்துக்காட்டு. இக்கவிதையில் இடம் பெற்றுள்ள ராப்பிச்சைக்காரன் காமத்துக்குக் குறியீடு. படிக்கப் படிக்கத்தான் அக்குறியீடு என்ன என்று நமக்குப் புரியும். ஒவ்வொரு படிமமும் படிக்கப் படிக்க நம்மை மெய்மறக்கச் செய்கின்றன.

போபோ போய்விடு
போய்விடு போய்விடு
ராத்திரிப் பிச்சைக்காரனே

மணந்து கருவுற்ற தென்றல்
உன் விஷ வேர்வை உறிஞ்சித்
தனக்குள் தான் புதையவும்...
என்ன புழுக்கம்

என் பார்வையின்
மெல்லிய பாதங்கள்
உன்மேல் படர்கையில்
கிழிந்து போயின

உன் அருவருப்பு
உருவம் கண்டு
என் மோன பிம்பங்கள் ஆயிரமும்

காலங்களும் இடங்களும்
கனவுகளும்
வீட்டுள் நீளும் நெடுஞ்சாலை முனைகளும்
தம்மில் நிறுத்தி வைக்க:
வாழ்க்கைக் கண்ணாடியில்
வடிவு காட்டும் என் -
மோன பிம்பங்கள் ஆயிரமும்
அலறுகின்றன

உன் கறைப் பற்களின்
இருண்ட சிரிப்பில்
அழுக்காகிறேன்

எவ்வளவிடினும் நிரம்பாத
உன் ஓட்டைப் பாத்திர நாற்றத்தில்
என் சுவாசங்கள்
கூசுகின்றன

உன் கைத்தடித்தாளம்
ஏன் ரத்த நாடிகளில்
எதிரொலிக்கிறது.

உன் விழிக் கொள்ளிகள்
ஏன் நரம்புகளில்
நெருப் பிடுகின்றன

உன் நிழல்
என் வாசலைச் சுவராக்குகிறது
கொடுப்பவர்கள் வறண்ட பின்னும்

நீ கேட்பவன்
வறண்டவர்கள்
கொடுப்பதாகப் பாவனை செய்கையிலும்
நீ வாங்குவதாகப் பாவனை செய்பவன்.

வாத்ஸ்யாயனர் முதல்
ஹாவ்லக் எல்லிஸ்வரை
வியந்த விழிகளில்
உன்னை எழுதிக் கொண்டு
வேடிக்கை பார்க்கும்
தெருப் பிள்ளைகள் எவ்வளவோ!
காலத்தின் முதுகுகளில்
பளுமிகுந்த இரவுகளில்
குரல் சாட்டையை
வீசிக் கெண்டே வரும்
யதார்த்த வாதிகள்
பரிவோடு சொல்கிறார்கள்.
'உனக்குத் தர்ம மிடாவிடில்
உலகம் தழைப்பதேது?'

சிலர் மட்டுமே
தங்களுக்காகச் சமைத்ததில்
உனக்குப் பங்கு தருகிறார்கள்
பலர் -
உனக்காகவே சமைக்கிறார்கள்

தங்கள் ஆன்மாக்களின் பசியை
அலட்சியம் செய்துவிட்டு
உனக்குப் படைக்கிறார்கள்.

ஜீவ ஒளிமிக்க கனவுகள் பாய்ச்சி
அருமையாக வளர்த்த
தங்கள் தோட்டத்துத் தெய்வீகப் பூக்களை
விரசக் கணுக்கள் முண்டும்
உன் மார்பில் சூட்டத் தான்
எவ்வளவு பேர்?

ஆனால்... ஆனால்... எனக்கோ?
ராப்பிச்சைக் காரனே,
உன்மேல் ஏற்பட்ட அலுப்பு!
ஆம்... உன்னைச் சகிக்க முடியவில்லை

இனிமேல்,
என் வாசலின் கோலங்களை
உன் சுவடுகளால் கிழிக்காதே
போபோ போய்விடு போய்விடு

- மௌனத்தின் நாவுகள்

மீமெய்ம்மையியம் (Surrealism)

இந்த நூற்றாண்டின் ஐரோப்பியக் கவிதைப் புரட்சியில் மீமெய்ம்மையியக்கத்துக்கு அதிகப் பங்குண்டு. டாக்டர் ஃபிராய்டின் ஆழ்மனக் கொள்கை (Psycho analysis) இவ்வியக்கத்துக்கு வித்து என்று சொல்லலாம்.

இக்கொள்கை கவிதையை மட்டுமல்லாமல், ஓவியக்கலையையும் வெகுவாகப் பாதித்தது. இக்கொள்கை காரண காரியங்களுக்கும் தர்க்கத்துக்கும் கட்டுப்படாதது. இது பழமையைத் தகர்க்கக் கூடியது; தலைகீழானது.

இருண்மையே மீமெய்ம்மைக் கவிதையின் சிறப்புப் பண்பு.

இந்த உத்தியைப் பயன்படுத்திச் கவிஞர் சிலர் தமிழில் கவிதை எழுதி வருகின்றனர்.

இவ்வுத்தியைப் பயன்படுத்தித் தமிழில் முதன் முதலாகக் காப்பியம் வடித்தது நான்தான்.

அகலிகையின் பிற்கால வாழ்க்கைக்கு, இளமையில் அவளைப் பாதித்த ஆழ்மனக் கோளாறுகளே காரணம் என்ற கருத்தை மையமாக வைத்து **வெள்ளை யானை** என்ற பெயரில் அக்காப்பியத்தைச் செய்துள்ளேன். அதைப் பற்றிப் புதுக் கவிதைத் திறனாய்வாளரான முனைவர் பாலா குறிப்பிடும்போது,

"இந்தக் காவியத்தில் ஓர் அலங்காரமாகவோ, புதுமை நோக்கும் போக்காகவோ இயங்காமல் காவியக் கருத்தின் இயைபு கெடாத உயர் உத்தியாக 'சர்ரியலிசம்' கையாளப்பட்டுள்ளது.

"ஞானக் கூத்தன், அப்துல் ரகுமான், தருமு சிவராமு போன்ற தமிழ்க் கவிஞர்கள் சர்ரியலிசத்தைப் படிமமாகவும், உத்தியாகவும், அபத்த அடிக்கருத்தாகவும் (Absurd themes) கவிதைகளில் கையாண்டு இருந்தாலுங்கூட, ஒரு காவியத்தின் இயைபு கெடாத வகையில் சர்ரியலிசத்தைப் பயன்படுத்தியுள்ள முதற்கவிஞர் முருகுசுந்தரம்தான்."

கனவுகள் (dreams), பிரமைகள் (hallucinations), உரு மாற்றங்கள் (transformations), குறியீடுகள் (Symbols), அபூர்வப் படிமங்கள் (marvel images), வியப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சர்ரியலிச எழுத்தாக **வெள்ளை யானை** அமைந்துவிட்டது.

"தமிழ்க் கவிதை வரலாற்றில், இந்தக் காவியம் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகிவிட்டது" என்று கூறியுள்ளார்.

மீமெய்ம்மைக் கவிதைகளுள் இருண்மை எவ்வாறு ஆதிக்கம் செலுத்துகிறது என்பதற்கு ஞானக்கூத்தனின் விநோதக் கற்பனைக் கவிதையொன்றைக் காணலாம்.

.... அப்பாவும் பிள்ளைகளும்
உட்கார்ந்திருந்தார்கள்
உறுப்புகளைப் புறம் போக்கிப்
படுத்துக் கொண்டாள்
வள்ளிக் கிழங்கின்
பதமாக
வெந்து போன
அவள் உடம்பைப்
பிட்டுத் தின்னத்
தொடங்கிற்று

ஒவ்வொன்றாக
அவையெல்லாம்

ஒரு பெண்ணின் உடலை அவள் கணவனும் குழந்தைகளும் தின்பதாக ஒரு காட்சி இதில் வருகிறது. இதன் பொருள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்காதது. படிப்பவரின் சிந்தனையைப் பொருத்து அதன் பொருள் விரியும்.

நனவோடை உத்தி

இதை ஆங்கிலத்தில் Stream of consciousness என்பர். இதை முதன் முதலில் கையாண்டு உலிசிஸ் என்ற நூலை எழுதியவன் ஜேம்ஸ் ஜாய்ஸ்.

நனவோடை உத்தியைத் தமிழ் உரைநடையில் பயன்படுத்தி வெற்றிகண்டவர் லா. ச. ராமாமிர்தம். அவர் இதைப்பற்றி விளக்கும்போது, "இந்த உத்தி நமக்குப் புதிதன்று. நம்முடைய பண்புக்கு ஆச்சாரத்துக்கு ஒத்ததெல்லாம் நனவோடை உத்திதான்... நமது பண்பாடு தானே தியானம், பக்தி, ஆழ்நிலை தியானம் எல்லாம்" என்று குறிப்பிடுகிறார்.

உள்ளத்தை ஒரு முகப்படுத்தி ஆழமாகச் சிந்திக்கும்போது தன் மன ஓட்டத்தைப் பதிவு செய்தலே நனவோடை உத்தி. அப்போது தோன்றும் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலும் இருக்கலாம். படைப்பாளரின் உள்ளப்பக்குவம் எத்தகையதோ, அப்பக்குவத்தை உணர்ந்தவரே அதைப் படித்துப் புரிந்து கொள்ள முடியும். அப்போது கவிதையில் இருண்மை தோன்றுவது இயல்புதானே?

லா. ச. ரா.வை ஆதர்ச குருவாக ஏற்றுக்கொண்டவர் அபிபுல்லா. அபிபுல்லாவின் 'அபத்தம்' என்ற கவிதை நனவோடை உத்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

ஆவேசம் திரிந்து
அபத்தமாக உருக்கொண்டது

ஒலிஒளிக் காட்சி முடிந்து
நினைவு எதுவுமின்றித்
திரும்பும் கூட்டம்

இலை பூ பறவைக்கூடு என்ற
பேதம் மரத்து
மழுங்கி நின்றன
சாலையோர மரங்கள்
இலக்கு மறந்து
எதிர்எதிர் பாய்ந்து
தன்னைத்தான் முட்டிக்கொண்டு
கல்லாய் நின்றது
காற்று

புலன்களிடையே
இடைவெளி நெடிதானது

இடைவெளியில் புரண்டு
சாம்பல் மணக்கக்
கிடந்தது இரவு

மூளையின் அறைக்குள்
அசடு கனத்தது

வெட்ட வெளியில்
முன்னால் போகவும்
பின்னால் போகவும்
ஓரே நேரம் அடியெடுத்து வைத்தபோது
நான் பார்த்தது;

ஆகாயம் நோக்கி
கைகளைத் தலைகளை ஆட்டிப்
பேசத் தொடங்கினர்
ஆணும் பெண்ணுமாய்
அறுபது எழுபது பேர்
வெவ்வேறு நிலைகளில்

உட்கார்ந்தபடி
வெளிச்சம் இளித்தது

மேலோட்டமாகப் படிப்பவர்க்குத் தலைப்புக்கேற்ப, இப்பாடல் ஓர் அபத்தக் களஞ்சியமாகத் தோன்றலாம். இதன் பூட்டை ஆசிரியர்தான் திறக்க வேண்டும். திறந்தால் சுவையான நனவோடைக் காட்சிகள் நம் கண்முன் தோன்றலாம்.

படிமவியல்

சில கவிதைகளில் கையாளப்படும் உருவகங்களும் இருண்மையைத் தோற்றுவிப்பதுண்டு. வெவ்வேறு உருவகங்களைப் படிமங்களாக அடுக்கிக் கொண்டு செல்லும் போது, அப்படிமங்களின் தொடர்பே நமக்குக் கருத்துப் புலப்பாடாக அமையும். கவிஞர் தமிழன்பனின் பாரம் சுமப்பவர்கள் என்ற கவிதையைக் காண்போம்.

வீணையை
வீசி எறிந்துவிட்ட
வெள்ளைத் தாமரையாளுக்கு - இப்போது
இந்தக்
கிதார்களில் தான்
கிறுகிறுப்பு

கல்விக் கடவுளான வெள்ளைத் தாமரையாள் ஏன் இன்று வீணையை வீசி எறித்துவிட்டுக் கிதாரைக் கையிலெடுத்துக் கொண்டாள்?

நாம் புருவத்தை உயர்த்துகிறோம்.

வெள்ளைத் தாமரையாள் கல்வியின் உருவகம். வீணை தாய்மொழிக் கல்வியின் உருவகம்.

கிதார் ஆங்கில வழிக் கல்வியின் உருவகம். இதை எப்படிப் புரிந்து கொள்வது? அடுத்த படிமத்தைத் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது நமக்குக் கருத்து புலப்படுகிறது.

அவள்
எறிந்த வீணைச்
சடலத்தின் மேல் மொய்த்துக்கிடக்கும்
அநாதையான
தாய்மொழிப் பாடல்கள்

தனிப்பட்ட அனுபவங்கள்

சிலருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட அனுபவங்கள் அவர்களை வெகுவாகப் பாதித்து, உணர்வுகளைத் தூண்டிக் கவிதையாக வெளிப்படுவதுண்டு. அந்த அனுபவம் நமக்கு இல்லாத காரணத்தால், அந்தக் கவிதை, படிக்கும்போது நமக்குப் புரியாத புதிராக இருக்கும்.

ஜெர்மானியக் கவிஞன் ரெய்னர் மேரியாரில்க்கின் சிறந்த கவிதைகளில் 'சிறுத்தை' என்பதும் ஒன்று அக்கவிதை -

கூண்டுக் கம்பிகளிடையே
பார்த்துப் பார்த்து
அதன் கண்கள் சோர்ந்து விட்டன

அதன் கண்ணெதிரே
ஆயிரம் ஆயிரம் கம்பிகள்
அக்கம்பிகளுக்கு உள்ளேதான்
அதன் உலகம் அடக்கம்
என்ற உணர்வு

மெதுவான பாதத்தின்
வலிவான பதிப்போடு
கூண்டுக்குள்
அது வட்டமிடுகிறது

மையத்தில் -
தன் உணர்வுகளைக்
கட்டுப் படுத்திக் கொண்ட
ஒரு பேராற்றலின்
நாட்டியமாக

அது காட்சியளிக்கிறது

சில நேரங்களில்
ஓசையின்றி
அதன் விழித்திரைகள்
மேலே விரியும்
அப்போது ஒரு காட்சி
கண்வழி நுழைந்து
இறுக்கமான அமைதி பூண்ட
அதன் எலும்புகள் வழியாக
இதயத்துக்குள் சென்றுமடியும்

இளமையில் ருசியநாட்டில் சுற்றுப் பயணம் செய்து திரும்பிய ரில்க், 'புனித ருசியா' (Holy Russia) என்று அந்த நாட்டைப் பாராட்டி எழுதினான்.

சர்வாதிகார ஜெர்மனியில் தன்னுடைய கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட அவனால் இயலவில்லை. இப்பாடலில் தன் ஆற்றல்கள் எவ்வாறு சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும், தன் கனவுகள் தனக்குள்ளேயே எப்படிச் செத்து மடிகின்றன என்பதையும் குறியீடாக வைத்துப் பாடுகிறான்.

இந்தப் பாடலில் மையத்தைச் சுற்றி நடனமிடும் பேராற்றல் (The dance of forces round a centre) என்ற ஒரு கருத்தைக் குறிப்பிடுகின்றான். அப்பேராற்றல் நடம்புரியும் மையம் தனது இதயமே என்பது அவன் கருத்து. அந்த மையம் தனது இதயத்தில் நீங்காமல் இடம் பெற வேண்டுமென்றால், அது தன் அகக் காட்சிகளைப் புறக்காட்சிகளாக இடையறாமல் மாற்றி வெளிப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளான். இக்கருத்தை ரில்க்கே வெளியிடாமல் இருந்திருந்தால் படிப்பவர்க்கு எப்படிப் புரியும்?

கிரேக்க இசைஞானி ஆர்ஃபிசைப் பற்றித் தான் எழுதியுள்ள கவிதைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இக்கவிதைகள் இறுக்கமும் சுருக்கமும் மிக்கவை; இவற்றை

அறிந்து கொள்ளுதல் என்பதைவிட, உள்ளுணர்வால் உணர்ந்து கொள்ளுதலே இயலும்' என்று கூறுகிறான்.

கவிஞர் ஆர். கே. என்பவர் என் நண்பர். அவரது 'உயிர்த்திரு' என்ற கவிதைத் தொகுப்பை நான் புரட்டிக் கொண்டிருந்தபோது 'வலி' என்ற தலைப்பில் ஒரு கவிதை கண்ணில் பட்டது.

என்னுடையவள்
தேவதைபோல் எல்லாம் இல்லை
தரையில் பாவாத கால்கள் இல்லை
சிமெண்ட்தரை அறிந்த பாதங்களே
சேற்றுப்புண் கூட உண்டு.

மேகத்தைவிட மெல்லிய
தேகமெல்லாம் இல்லை
பேசுவதும் கவிதையில்லை
பெரும்பாலும்
சினிமாக் காரிகளைப் பற்றித்தான்

நேற்று முட்டாள் தனமாகக்
கொதிக்கின்ற நீரைக்
காலில் நான்
கொட்டிக் கொண்ட போது

தோல் நீங்கிய
என் கால் எலும்பில்
வெள்ளையாகத் தெரிந்தது
அவள் வலி

பாடல் எளிமையானது. ஆனால் கடைசி நான்கு வரிகளில் கவிஞர் எதைக் குறிப்பிடுகிறார் என்று புரியவில்லை. நேரில் சந்தித்தபோது அவரையே விளக்கம் கேட்டேன். அவர் சொன்னார்:

"ஒரு நாள் முகத்துக்கு ஆவி பிடித்துக் கொண்டிருந்தபோது கொதிநீர் தவறிக் கொட்டி என்கால் வெந்துவிட்டது. மேல்தோல் விரிந்து விரல்எலும்பு வெண்மையாக வெளியே தெரிந்தது. சத்தம் கேட்டு ஓடி

வந்த என்மனைவி இக்காட்சியைக் கண்டு வீறிட்டலறினாள். அவள் உணர்ச்சி வசப்பட்டு அலறிய ஓசை என்னைத் திடுக்கிடச் செய்தது.

"சராசரிப் பெண்ணான அவள், தன் கணவன் மீது கொண்டிருந்த பாசத்தை வெளிப்படுத்தும்போது அவள் சிறப்பு எனக்குப் புலப்பட்டது. என் கால் எலும்பு வெள்ளையாக வெளியே தெரியாமலிருந்தால் அவள் பாசத்தின் ஆழத்தை நான் புரிந்துகொண்டிருக்க முடியுமா? அதனால்தான்,

என் கால் எலும்பில்
வெள்ளையாகத் தெரிந்தது
அவள் வலி

என்று பாடினேன்" என்றார். இங்கு 'வெள்ளையாக' என்பதற்குப் 'பளிச்சென' என்றும் பொருள் கொள்ளலாம்.

செயற்கை ஞான தரிசனங்கள்

இதை ஆங்கிலத்தில் Derangement of sensibility என்பர்.

சில கவிஞர் மதுவும் கஞ்சாவும் அபினும் அருந்திவிட்டுத் தமது இயல்பான மனநிலையைச் சிதைத்து வேறுபட்ட ஞான தரிசனங்களுக்காக (mystical experience) முயற்சிப்பதுண்டு. அத்தகைய முயற்சிகளில் பிரெஞ்சுக் கவிஞர்களான போதலேரும், ரேம்போவும், ஆங்கிலக் கவிஞரான காலரிட்ஜும் ஈடுபட்டனர்.

போதலேர் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏமாற்றங்களையும், அவஸ்தைகளையும் மறக்க, போதைப் பொருளை உண்டு, தம் மனநிலையைச் சிதைத்துத் தாமே ஒரு சொர்க்கத்தைப் படைத்துக் கொண்டு அதில் சஞ்சரிக்கலானார்.

ரேம்போவின் படைப்புக்களில் 'குடிபோதைப் படகு' (The drunken boat) என்ற கவிதை மிக்க விளம்பரம் பெற்றது.

வாழ்க்கையில் ஏற்பட்ட குமுறல்கள், மன விகாரங்கள், வன்முறைகள் யாவும் இப்பாடலில் கொந்தளிக்கும் கடலாக உருவகம் செய்யப்பட்டுள்ளன. அக்கடலில் சிக்கித் தள்ளாடும் படகாகத் தன்னைக் கற்பனை செய்கிறான் ரேம்போ.

கஞ்சாவும் அபினும் தம்மை உண்டவர்களை மதிமயக்கி, ஒரு கனவு நிலையைத் தோற்றுவித்து, அவர்கள் விரும்புகிறபடி சிந்தனையைச் செலுத்தும் ஆற்றல் வாய்ந்தவை. அக்கட்டுப்பாடற்ற சிந்தனையின் வெளிப்பாடுகளே காலரிட்ஜின் குப்ளாய் கானும், பாரதியின் குயில் பாட்டும்.

இத்தகைய பாடல்களில் இயல்புநிலையை மீறிய கற்பனைகள் தோன்றுவதால் அவற்றுள் இருண்மை இடம் பெறுகிறது.

பாரதியின் குயில்பாட்டு மொழி அளவில் தெளிவாக இருந்தாலும், குயில், குரங்கு, மாடுகளின் தோற்ற நிகழ்ச்சியும் செயலும், பேச்சும், இருண்மைக்குக் காரணமாகின்றன. பாவலர்க்குப் பட்டப்பகலில் தோன்றும் நெட்டைக் கனவு நிலையிலிருந்தே குயில்பாட்டைப் பாடியதாகப் பாரதியே ஒப்புக் கொள்கிறார்.

முடிவுரை

இருண்மை கவிதையில் ஓர் உத்தி. ஆனால் அதுவே கவிதை அன்று. இருண்மை கவிதையில் ஆர்வத்தையும், வியப்பையும், கவர்ச்சியையும் தூண்டிவிடுகிறது.

இருண்மை படிந்த கவிதை, மிகச் சிறந்த கவிதையாகவும் இருக்கலாம்.



7

ஒதெல்லோ ஒரு மன நோயாளி

கிணற்றின் ஓரத்தில் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் பழுதைப் பாம்பாக எண்ணி மயங்குவதை மாயை என்று வேதாந்தம் கூறுகிறது. மருத்துவ நூலார் இதே போன்ற ஒரு மனநிலையை 'மனமயக்கம்' (Delution) என்று குறிப்பிடுகின்றனர். இஃது ஓர்வகை மூளைக் கோளாறு.

உண்மையல்லாத ஒன்றை உண்மையென நம்பி உள்ளத்தைக் குழப்பிக் கொண்டு, உள்ளம் செலுத்தும் தவறான வழியிலேயே செல்வது இந்நோயின் தன்மை. நல்ல மனநிலையில் உள்ளவர்கள், காரண காரியங்களோடு விளக்கப்பட்டால், தம் தவற்றை உணர்ந்து திருந்திவிடுவர். மனநோயாளியாக இருப்பவர்கள், காரண காரியங்களைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்கள். பிறர் எடுத்துக் காட்டினாலும் புரிந்து ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இம்மனமயக்க நோய் பலவகைப்படும். ஏழையாக இருக்கும் ஒருவன் தன்னைச் செல்வனாக எண்ணிக் கொண்டு நடப்பதும், காண்பவர் யாவரும் தன்னைப்பற்றியே பேசுவதாக ஐயுறவு கொள்ளுதலும், தரவுதுயில் (hypnotism), வசியம் (Telepathy) ஆகிய புறத்தூண்டுதல்களுக்குத் தான் ஆட்பட்டிருப்பதாக எண்ணி அஞ்சுவதும், தன் கடந்தகாலத் தோல்விகளையும் குற்றங்களையும் அடிக்கடி நினைவு கூர்ந்து தன்னையே நொந்து கொள்வதும், நலத்துடன் இருக்கும்போதே தன் உடலில் ஏதோ கோளாறு ஏற்பட்டிருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு கவலைப்படுவதும், கற்புள்ள தன் மனைவியைக் கற்புக் கெட்டவளாக எண்ணித் தாறுமாறாக

நடந்து கொள்வதும், இம்மனமயக்கத்தின் பாற்பட்ட கொடிய நோய்கள் ஆகும்.

எனக்குத் தெரிந்த பேராசிரியர் ஒருவர் கல்லூரிக்குச் செல்லும்போது, தம் மனைவியை வீட்டிற்குள் பூட்டி வைத்து விட்டுச் செல்வதையும், தம் குழந்தையின் உருவ ஒற்றுமையைப் பக்கத்து வீட்டுக்காரனோடு தொடர்பு படுத்திப் பேசுவதையும், மனைவி கோயிலுக்குச் சென்று திரும்பினால் 'எவனோடு சுற்றிவிட்டு வருகிறாய்?' என்று ஈவிரக்கமில்லாமல் பேசுவதையும் நான் அறிவேன்.

மக்கள் வாழ்க்கையில் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் காணப்படும் இந்நோய் எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரின் சிந்தனையில் சிக்கிக் காப்பியங்களாகவும், புதினங்களாகவும், சிறுகதைகளாகவும் உருப்பெற்றிருக்கின்றன. அவற்றுள் மகாகவி சேக்ஸ்பியர் எழுதிய 'ஒதெல்லோ' குறிப்பிடத்தக்க ஒரு நாடகக் காப்பியம்.

ஒதெல்லோ மூர் இனத்தைச் சேர்ந்தவன். சேக்ஸ்பியர் வாழ்ந்த பதினாறாம் நூற்றாண்டில் கறுப்பு நிறத்தவர் எல்லாரையும் 'மூர்' என்றே ஐரோப்பியர் குறிப்பிட்டனர். 'ஒதெல்லோ ஒரு மௌரிடானிய முரட்டுக்குதிரை (a Barbary horse from mouritonia) என்று சேக்ஸ்பியரால் ஓரிடத்தில் குறிப்பிடப்படுவதால், இவன் ஆப்பிரிக்காவின் வடமேற்குப் பகுதியில் உள்ள மௌரிடானியாவைச் சேர்ந்தவன் என்பது புலனாகிறது. அராபியர் மற்றும் வட ஆப்பிரிக்க பார்பரி கரைப்பகுதியில் வாழ்ந்த கருப்பர் கலப்பால் தோன்றிய புதிய இனமே மௌரிடானிய மூரினம். இம்மூரின மக்கள் ஸ்பெயின் நாட்டைக் கைப்பற்றிப் பலநூற்றாண்டுகள் சிறப்பாக ஆட்சி புரிந்தனர்.

மூர் இனத்தவர் பெரும்பாலும் இசுலாத்தைத் தழுவியவர்கள். ஆனால் ஒதெல்லோ ஞானக் குளியல் பெற்றுக் கிறித்தவன் ஆனவன். வெனிசு நாட்டுப் படையில் சாதாரணப் போர்வீரனாகச் சேர்ந்து, தன் வீரத்தாலும்

அஞ்சாமை மிக்க போர்ச் செயல்களாலும், உண்மை ஊழியத்தாலும் படைத்தலைவனாக உயர்ந்தவன். இவன் தன்னை ஓர் அரச குடும்பத்தில் பிறந்தவன் என்று கூறிக் கொள்கிறான். மூர் இனத்தவருள், ஒரு குழுத் தலைவனின் மகனாக இவன் பிறந்திருக்கலாம்.

சேக்ஸ்பியர் நாடகத் திறனாய்வாளர்கள், ஒதெல்லோவின் பண்புகள் பற்றிக் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர் :

“ஒதெல்லோ கறுப்பானவன்; ஆனால் ஆப்பிரிக்க நாட்டுச் சூரிய ஒளி பளபளக்கும் பெருமிதமான தோற்றம் உடையவன். கட்டுப்பாடும், கடமையுணர்வும், தன்னடக்கமும், கடுமையான உழைப்பும், ஆபத்து மிகுந்த போர் அனுபவங்களால் வயிரம் பாய்ந்த நெஞ்சுரமும், பலநாடுகள் சுற்றிய பட்டறிவும் மிக்கவன்; தன்னுடைய தகுதியை உணர்ந்தவன்; நாட்டுக்கு ஆற்றிய தன்னுடைய தொண்டை எண்ணிப் பெருமைப்படுபவன்; பகட்டுக்கு அடிபணியாதவன்; பட்டம் பதவிகளுக்கு மயங்காதவன்; எளிதில் பொறாமைப் படாதவன்; பொறாமைப் பட்டு விட்டாலோ, அதன் எல்லைக்கே செல்லும் இயல்புடையவன்!”

சேக்ஸ்பியர் படைத்த காப்பியத் தலைவர்களுள் காதலும் வீரமும் மிக்க தலைவன் (Romantic Hero) இவனே. பரந்த பாலைவனத்திலும், கடல்கடந்த நாடுகளிலும் பல போர் முனைகளைச் சந்தித்திருக்கிறான்; சிறுவனாக இருந்தபோது அடிமையாக விற்கப்பட்டு, மதமாற்றம் செய்யப்பட்டிருக்கிறான்; அலெப்போவில் யாருமற்ற அனாதையாகக் கைவிடப்பட்டிருக்கிறான்; இவன் போர் அனுபவங்களும், பயண அனுபவங்களும் விசித்திரமானவை; சுவையானவை.

ஹேம்லட்டைப்போல ஒதெல்லோ ஆழமான சிந்தனை யோட்டமோ, ஊசலாட்டமோ இல்லாதவன்.

ஆனால் ஹேம்லட்டைவிடப் பேச்சாற்றலும், கவிதையுணர்வும் மிக்கவன். டெஸ்டிமோனாவின் தந்தை பிரபான்சியோ, வெனிசு நகரத் தலைவர் முன் குற்றம் சாட்ட, அதற்கு அவன் பதிலளித்த போதும், டெஸ்டிமோனாவின் கற்பின் மீது இயாகோ களங்கம் கற்பித்ததைக் கேட்டு உணர்ச்சி வசப்பட்ட போதும், சாவதற்குச் சற்று முன்னும் ஒதெல்லோ பேசிய பேச்சுக்கள் அவன் சொல்லாற்றலைப் புலப்படுத்துகின்றன.

ஒதெல்லோவின் கவிதையுணர்வு பல இடங்களில் ஊற்றெடுத்துப் பொங்கி வருவதைக் காணலாம். பிரபான்சியோவின் ஆட்கள் ஒதெல்லோவைத் தாக்கக் கத்தியை உருவியபோது, "உங்கள் ஒளிவீசும் வாட்களை உறையில் போடுங்கள். இல்லாவிட்டால் அவை பனித்துளி படிந்து துருப்பிடித்துப் போகும்" என்று கூறி நயம்படக் கேலி செய்கிறான்.

இயாகோ டெஸ்டிமோனா மீது களங்கம் கற்பித்த போது, "என் மனைவி தவறு செய்தாளா? என்னால் நம்ப முடியவில்லை! சுவர்க்கம் தன்னையே இழிவுபடுத்திக் கொள்கிறதா?" என்று குமுறினான்.

தன் மனைவியைப் பழிவாங்கப் புறப்பட்டபோது, "கருங்கடல் அலையானது எப்படிப் பின்னோக்காமல் முன்னோக்கிச் சென்று பிரபாண்டிக்கிலும், ஹெலஸ்பாண்டிலும் விழுகிறதோ அதுபோல், இரத்தவெறியும் வேகத்தோடு முன்னேறுமே ஒழிய ஒரு போதும் பழைய காதலைத் திரும்பிப் பார்க்காது. சரியான பழிவாங்குதல் என்ற சங்கமத்தில் தான் சேரும்" என்று குறிப்பிடுகிறான்.

ஒதெல்லோவின் கவிதை உணர்ச்சியை வியக்காமல் இருக்க முடியாது. டெஸ்டிமோனாவைக் கொலை செய்வதற்கு முன் பேசிய ஒதெல்லோவின் படுக்கையறைப் பேச்சு (Bed chamber speech) ஓர் அழகான கவிதைச் சிற்பம்.

"கற்புள்ள விண்மீன்களே! இவளைக் கொல்லும் காரணத்தை உங்களிடம் கூறமாட்டேன்! நான் இவள் இரத்தத்தையும் சிந்தமாட்டேன். பனியைவிட வெண்மையானதும், பளிங்குச் சிற்பத்தைவிடப் பளபளப்பானதுமான இவள் மெல்லுடல் மீது சிறுகீறல் விழுவதைக் கூட என்னால் சகித்துக் கொள்ள முடியாது; என்றாலும் இவள் இறக்கத்தான் வேண்டும்; இல்லாவிட்டால் எத்தனை ஆடவரை ஏமாற்றுவாளோ? ஓ தீபமே! உன்னை அணைத்தால் மீண்டும் என்னால் ஏற்ற முடியும். ஆனால் இயற்கையின் பேரழகுப் பெட்டகமான இவ்வஞ்சகியின் உயிர்விளக்கை அணைத்துவிட்டால், மீண்டும் எந்த நெருப்பால் அதை ஏற்ற முடியும்? இந்த ரோஜாவை நான் பறித்துவிட்டால், மீண்டும் அதைச் செடியில் வாழ வைக்க முடியுமா? வாடி உதிர வேண்டியதுதானே!...

"ஒரே ஒரு முத்தம்! கடைசி முத்தம்! இவ்வளவு அழகான எதுவும், இவ்வளவு கொலை பாதகமானதாக இருந்ததில்லை. நான் அழவேண்டும்; ஆனால் இந்தக் கண்ணீர்த் துளிகள் கொடுமையானவை. இத்துயரம் தெய்வீகமானது. அன்பு எங்கு ஆட்சி செய்கிறதோ அங்கு அடியும் விழுகிறது." -

என்று கண்ணீர் விட்டுப் புலம்புகிறான் ஒதெல்லோ.

காதலும் வீரமும், கண்ணியமும் கவிதையுணர்வும் மிக்க காவியத் தலைவன் ஒதெல்லோ, எந்த இடத்தில் காலிடறி விழுகிறான் என்பது சிந்தனைக் குரியது. ஒதெல்லோ டெஸ்டிமோனாவின்பால் கொண்டிருந்த காதல் சாதாரணமானது அன்று,[1] "ரோமியாவின் பிஞ்சுக் காதலை விட ஒதெல்லோவின் காதல் ஆழமானது" என்று திறனாய்வாளர் பிராட்லே ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார்.

"நான் அரச குடும்பத்தைச் சார்ந்தவன்; நான் தரத்தால் எந்த வகையிலும் தாழ்ந்தவன் இல்லை; நான்

டெஸ்டிமோனாவுக்கு எல்லா வகையிலும் ஏற்றவன்தான். நான் டெஸ்டிமோனாவைக் காதலித்திராவிட்டால், கடற்செல்வம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் என் சுதந்தரத்தை அடகு வைத்துவிட்டு இல்லறச் சிறையில் என்னைச் சிக்கவைத்துக் கொண்டிருக்க மாட்டேன்'' என்று ஒதெல்லோவே தன் காதலின் ஆழத்தை ஓரிடத்தில் இயாகோவிடம் வெளிப்படுத்தியிருக்கிறான்.

டெஸ்டிமோனாவின்பால் ஆழமான காதலும் அளவற்ற அன்பும் கொண்டிருந்த ஒதெல்லோவின் உள்ளத்தில் ஐயமும், அவளைக் கொல்லத் துணியும் அளவுக்கு வெறுப்பும் ஏற்படக் காரணம் என்ன என்பது ஆராய்ச்சிக்குரியது. ஒத்தெல்லோவின் பாத்திரப் பண்புகளை ஆராயப் புகுந்த பிராட்லே நுட்பமான சில கருத்துக்களை ஓரிடத்தில் வெளியிடுகிறார் :

[2]''ஒதெல்லோ பிறந்த இனம் அவன் பாத்திரப்படைப்பிலும், நாடகத்திலும் முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பதை மறுக்க முடியாது. ஒதெல்லோ கிறித்தவ மதத்தைத் தழுவிய கௌரவமான காட்டுமிராண்டி. அவன் தன்னை ஏவல் கொண்ட வெனிசிய நாகரிகத்தின் சில கூறுகளை ஏற்றுக் கொண்டவன்; என்றாலும் இவற்றுக்கு அடியில் ஓடும் மூரினக் குருதிக்கே உரிய விலங்குத் தன்மையும், பெண்களின் கற்பைப் பற்றிக் கீழைநாட்டு மக்கள் பொதுவாகக் கொண்டிருந்த ஐயப்பாடும் அவன் அடிமனத்தில் பதிந்திருந்தன!''

ஒதெல்லோவின் இந்தப் பலவீனத்தை இயாகோ சரியாகப் பயன்படுத்திக் கொண்டான். இயாகோ சகுனியைவிட மோசமான தீக்குணன் (villon). சேக்ஸ்பியர் படைத்த ஒப்பற்ற பாத்திரங்கள் ஹேம்லட், கிளியோப்பாத்ரா, இயாகோ, ஃபால்ஸ்டாஃப் ஆகிய நான்குமே. இயாகோ வஞ்சகமே வடிவெடுத்த உள்ளமும், கேட்டாரைப் பிணிக்கும் பேச்சாற்றலும் சமயோசித புத்தியும் வாய்க்கப் பெற்றவன். ஆங்கிலக் கவிஞன்

காலரிட்ஜ் தன் திறனாய்வுக் கட்டுரையில் இயாகோவைப் பற்றிக் குறிப்பிடும்போது குறிக்கேள் இல்லாத வெறுப்புணர்ச்சி, (motiveless malignity) அவன் பண்பு என்று குறிப்பிடுகிறான்.

ஒருவர் மற்றொருவரை வெறுப்பதற்குப் பொறாமையோ, பகையுணர்ச்சியோ காரணமாக இருக்கும். ஆனால் இயாகோவுக்குக் காரணம் வேண்டியதில்லை. இவன் நல்லதை நல்லது என்பதற்காகவே வெறுப்பவன்; தீயதைத் தீயது என்பதற்காகவே விரும்புபவன். இவன் கயமையைக் கலையாக மதிப்பவன். குறிக்கோள் ஏதும் இல்லாவிட்டாலும், பிறர் படும் துன்பத்தில் மகிழ்ச்சி காண்பவன். இந்த மகிழ்ச்சிக்கு ஒதெல்லோ, டெஸ்டிமோனா, கேஷியோ மூவரும் தேவையான மூலப் பொருளாகக் கிடைத்தனர்.

ரோமானிய நாகரிகத்தில் திளைத்த வெனிசு அரசின் தளபதி என்னும் மதிப்பிற்குரிய பதவியில் இருந்தாலும், ஒதெல்லோவுக்குச் சில தாழ்வுணர்ச்சிகள் உண்டு. தான் நாகரிகமற்ற காட்டுமிராண்டி இனத்தில் தோன்றியவன்; கருப்பன்; அழகற்றவன்; வயதானவன் என்ற உணர்வுகளே அவை. அவன் உணர்ச்சி வசப்படும்போது, அத்தாழ்வுணர்ச்சிகள் அவனை யறியாமல் வெளிப்படுகின்றன.

டெஸ்டிமோனாவின் கற்பைப்பற்றிக் களங்கம் கூறி, ஒதெல்லோவின் உள்ளத்தை இயாகோ குழப்பிவிட்டுச் சென்ற பிறகு, "நான் கருப்பானவன்; அவளது நாட்டு ஆடவர்களைப் போல் இதமாகப் பேசத் தெரியாதவன்; வயதானவன்" என்று சொல்லி வெளிப்படையாகவே புலம்புகிறான்.

மற்றோரிடத்தில், "கற்புத் தெய்வம் டயானாவின் முகம்போல ஒளி படைத்திருந்த டெஸ்டிமோனாவின் பெயர், இப்போது என் கருத்தமுகம் போல

இருண்டுவிட்டது'' என்று கூறி வருத்தப்படுகிறான். இவை அவன் அடிமனத்தில் ஒட்டிக் கொண்டிருந்த தாழ்வுணர்ச்சியின் வெளிப்பாடுகள்.

பிரபான்சியோ தன் மகளை ஒதெல்லோவிடம் ஒப்படைக்கும்போது, "ஒதெல்லோ! என் மகள் மீது கொண்டிருக்கும் காதலில் குருட்டுத்தனமாக இருந்துவிடாதே! இவளைக் கூர்ந்து கவனித்துக் கொள். இவள் பெற்று வளர்த்த தந்தையையே ஏமாற்றியிருக்கிறாள். சமயம் நேர்ந்தால் உன்னையும் ஏமாற்றத் தயங்க மாட்டாள்'' என்று எச்சரிக்கிறான்.

இந்த எச்சரிக்கை ஒதெல்லோவின் உள்ளத்தில் ஒரு மூலையில் பதிவாகிவிட்டது.

இதுவே அவன் மனமயக்க நோயின் வித்து. அவன் தாழ்வுணர்ச்சிகள், அந்த வித்துக்கு நீர்பாய்ச்சி முளைக்கச் செய்தன. இயாகோ அதை எருவூட்டி வளர்த்தான்.

"டெஸ்டிமோனா தனது இனத்தையும், நாட்டையும், தனது தரத்திற்கு ஏற்ற ஆடவரையும் புறக்கணித்து ஒரு கருத்த மூரினத் தலைவனை மணந்து கொண்டது இயற்கைக்கு மாறானது; முரண்பாடு உடையது. இதைப் பற்றிச் சிந்திக்கும்போது ஓர் உண்மை புலப்படுகிறது. காலப்போக்கில் அவளுக்கு உங்கள் மீது சலிப்பு ஏற்பட்டு, வெனிசு நாட்டு அழகிய இளைஞர்களோடு உங்களை ஒப்பிட்டுப் பார்த்துத் தன் அவசர முடிவுக்கு வருந்தியிருக்கலாம் அல்லவா? அத்தகைய வருத்தமே அவள் கவனத்தைக் காஸியோவின் பக்கம் திருப்பியிருக்கலாம் என்று அஞ்சுகிறேன்.

"வெனிசில் உள்ள பெண்கள் தங்கள் பாவத்தைக் கடவுள் அறியச் செய்வார்கள்; ஆனால் கணவன் அறியாமல் மறைப்பார்கள். அவர்கள் மனச்சாட்சி என்பது துரோகம் வெளிப்படாமல் மறைப்பதே ஒழியத் துரோகம் செய்யாமல் இருப்பது அன்று!''

என்று இயாகோ பேச்சு வாக்கில் வெனிசு நகரப் பெண்டிர் கற்பின் நொய்மையைச் சுட்டிக் காட்டி ஒதெல்லோவின் மனநோயை மரமாக வளர்க்கிறான்.

ஒதெல்லோ தன் மனைவி மீது தீராத ஐயங்கொண்ட மனநோயாளியாக மாறி, அவளைக் கொல்லும் எல்லைக்கே சென்று விடுகிறான்.

ஒதெல்லோ மனநோயாளியாக இல்லாமல் இருந்திருந்தால், அவன் சிந்தனையில் தெளிவு இருந்திருக்கும்; காரண காரியங்களுக்குக் கட்டுப்பட்டிருப்பான். அவன் மனநோயாளியாக இருந்த காரணத்தாலேயே, உண்மைகள் உணர்த்தப்பட்டபோது அவன் புரிந்துகொள்ள மறுத்தான். இதைத் திறனாய்வாளர் பிராட்லே கீழ்க்கண்ட இரண்டு இடங்களில் சுட்டிக் காட்டுகிறார்:

"நான் உனக்கு அன்புப் பரிசாகக் கொடுத்த கைக்குட்டையைக் கேஷியோவுக்கு ஏன் கொடுத்தாய்?" என்று ஒதெல்லோ டெஸ்டிமோனாவைக் கேட்கிறான்.

"நான் கேஷியோவுக்கு அதைக் கொடுக்கவில்லை. நான் கொடுத்ததாகக் கேஷியோ சொன்னாரா?" என்று கேட்கிறாள் டெஸ்டிமோனா.

"ஆம்! நீ கைக்குட்டையை அவனிடம் கொடுத்ததையும் சொன்னான்; நீ விபசாரி என்பதையும் சொன்னான்" என்று சினத்தோடு கூறுகிறான் ஒதெல்லோ.

"கேஷியோ அவ்வாறு கூறியிருக்க மாட்டார்; அவர் நேர்மையானவர்" என்று குறிப்பிடுகிறாள் டெஸ்டிமோனா.

ஒதெல்லோ தெளிவான மனநிலை உள்ளவனாக இருந்திருந்தால், உடனே கேஷியோவை அழைத்து உண்மையை விசாரித்து அறிய முனைந்திருக்க வேண்டும். அவன் 'மனமயக்கம்' அவ்வாறு செய்யவிடாமல் அவனைத் தடுத்துவிட்டது.

டெஸ்டிமோனா படுக்கையில் சாகும் நிலையில் கிடக்கிறாள். ஒதெல்லோ அருகில் நின்று கொண்டிருக்கிறான். அப்போது உள்ளே வந்த பணிப்பெண் எமிலியா 'இக்கொடுமையைச் செய்தது யார்?' என்று கேட்டுக் கதறுகிறாள்.

"ஒருவருமில்லை. நானேதான்; வருகிறேன்; என் வணக்கத்தை என் கணவருக்குச் சொல்!" என்று கூறிவிட்டு டெஸ்டிமோனா உயிர் துறக்கிறாள்.

"இல்லை! நான்தான் அவளைக் கொன்றேன். துரோகி! சாகும்போது கூடப் பொய் பேசுகிறாள்; எரியும் நரகத்துக்குத்தான் போவாள்!" என்று இரக்கமில்லாமல் பேசுகிறான் ஒதெல்லோ.

ஒதெல்லோவின் மனநோய் அவன் உள்ளத்தை இருட்டாக்கிவிட்டது. தன் மனைவி ஒழுக்கம் கெட்டவளாக இருந்திருந்தால், சாகும் கடைசி நேரத்தில், கணவன் குற்றத்தையும் மறைத்ததோடு அன்பு வார்த்தைகளால் வணக்கம் கூறி விடை பெறுவாளா என்று அவன் உள்ளம் சிந்திக்க மறுத்துவிட்டது



குறிப்பு விளக்கம்

1. *Shakespearean Tragedy - othello*
2. *Shakespearean Tragedy - othello*
3. *Shakespearean Tragedy - othello*
   - by Bradley

8

இராதையும் நப்பின்னையும்

கடவுளைக் காதலனாக எண்ணி வழிபடுவது 'நாயக நாயகி பாவம்' என்று வடநூலாரால் கூறப்படுகிறது. இவ்விலக்கிய மரபு பழமையான சங்கத் தமிழ் இலக்கியங்களில் இல்லை. திருவாசகத்திலும், இடைக்காலச் சிறுபிரந்தங்களிலும், அருட்பாத் தனிக்கீர்த்தனைகளிலும், இசைப்பாடல்களிலும் இவ்வழக்கு காணப்படுகிறது. இந்த நூற்றாண்டில் பாரதியின் கண்ணன் பாட்டு, நாயக நாயகி பாவத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

வட இந்தியாவில் பரவலாக வணங்கப்படும் கிருஷ்ணன், தெய்வாம்சம் பொருந்திய மானுடக் காதலனாக எல்லாக் கன்னியராலும் கருதப்பட்டு வழிபடப் படுகிறான்.

உத்திரப் பிரதேசத்தில் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள மதுரா (வடமதுரை) கிருஷ்ணனின் பிறப்பிடம். அரச குடும்பத்தில் பிறந்த கிருஷ்ணன், அரசியற் காரணங்களால் யமுனையின் மறுகரையில் இருந்த, ஆயர்சேரி (கோகுலம்)யில் வளர்க்கப்பட்டான். ஆயர்குலத் தலைவனான நந்தகோபன் வீட்டில் வளர்ந்த கிருஷ்ணன், கறுத்த நிறத்தவனாக இருந்தாலும் அழகன். கிருஷ்ணன் என்றாலே 'கறுப்பன்' என்று பொருள். இஃதோர் காரணப் பெயர். கருநாகத்தைக் 'கிருஷ்ண சர்ப்பம்' என்று குறிப்பிடுவதுண்டு.

ஆயர்குலத் தலைவன் மகனான கிருஷ்ணன், கோகுலத்தின் செல்லப்பிள்ளை. தன் பாலிய

லீலைகளாலும், கேட்பவர் உள்ளத்தை மெய்மறக்கச் செய்யும் தன் புல்லாங்குழல் இசையாலும், ஆடுமாடுகளை மட்டுமன்றிக் கோகுலத்துப் பெண்களையும் பிணித்துவிட்டான். அவன் இசையில் மயங்கிய இடைக்குலத் தாய்மார்கள் அவனைத் தன் சொந்தப் பிள்ளையாகவும், கன்னிப் பெண்கள் தம் சொந்தக் காதலனாகவும் கருதி அவன் பின்னால் திரிந்தனர்.

ஆயர்குலப் பெண்களைக் 'கோபியர்' என்று கூறுவது மரபு. கோபியருள் இராதை என்பவள் சிறந்த அழகும், விரும்பத்தக்க நற்பண்புகளும் வாய்க்கப் பெற்றவள். இராதைக்கும், கிருஷ்ணனுக்கும் இடையில் நிலவிய காதல் உறவு, பாகவதம், பிரம்ம வைணவார்த்த புராணம், கீதகோவிந்தம், வித்யாபதியின் காதற்கவிதை ஆகிய இலக்கியங்களிலும், மதுராவைச் சுற்றி வழங்கும் கிராமியக் கதைகளிலும், மக்கள் திருமணம் முதலிய முக்கிய நிகழ்ச்சிகளில் பாடும் இசைப் பாடல்களிலும் பரவலாகப் பேசப்படுகின்றன.

கிருஷ்ணனும் இராதையும் வழக்கமாகச் சந்திக்கும் இடம், கோகுலத்துக்கு அருகில் உள்ள பிருந்தாவனம் என்னும் சோலை. பாகவதத்தைப் பொருத்தவரையில் கிருஷ்ணன் - இராதை உறவு கோகுலத்தோடு முற்றுப் பெற்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. கிருஷ்ணன் தன் கோகுல வாழ்க்கையை முடித்துக் கொண்டு, மதுரா புறப்பட்டபோது இராதை தன் கண்ணீரைக் காட்டி வழிமறிக்கிறாள்.

"நீங்கள் எப்போதும் என்னிடமே இருக்கவேண்டும்; நான் இல்லாமல் எப்போதும் தனியாக பிருந்தாவனம் செல்லக்கூடாது" என்று இராதை நிபந்தனை விதிக்கிறாள். உடனே பிரம்மாதி தேவர்கள் இராதைமுன் தோன்றி "இராதை நீ எங்கள் தாய்! கிருஷ்ணன் இல்லாமல் உலகம் இயங்காது. உலகின் நன்மை கருதிக் கிருஷ்ணனை விட்டுவிடு!" என்று வேண்டிக் கொண்டபின் இராதை

இணங்கிக் கிருஷ்ணனைச் செல்ல விடுத்தாள் என்பது பாகவதம்.

"இராதாதேவி திருமகளின் ஆனந்த வடிவம்; பிரகிருதி அம்சம். இவள் கோகுலத்தில் இராசமண்டலத்தில் கார்த்திகை மாதப் பூரணையில் கிருஷ்ணமூர்த்தியால் பூசிக்கப்பட்டுப் பின் கோபிகைகள் முதலியவர்களால் பூசிக்கப்பட்டனள்" என்று தேவி பாகவதம் கூறுகிறது.

இராதை கிருஷ்ணனைவிட வயதில் மூத்தவள் என்று சில ஆய்வாளர் கூறுகின்றனர். ஜெயதேவர் எழுதியுள்ள ஓர் அஷ்டபதியும் இதை உறுதி செய்கிறது.

> [1]வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது;
> காட்டு நிலம் தமாவ மரங்களின் நிழலில்
> கருமை நிறம் கொண்டுள்ளது; இரவு
> நேரமாகிவிட்டது; இவன் (கிருஷ்ணன்)
> பயமடைந்துள்ளான். ஓ! இராதை!
> அதனால் இவனை நீயே வீட்டில் கொண்டு
> போய்ச் சேர்ப்பாய்!

என்று நந்தகோபன் இராதையிடம் சொன்னதாக ஜெயதேவர் அதில் கூறியுள்ளார். இக்கூற்றை ஆராய்கையில், அச்சப்படும் சிறுவனாகக் கிருஷ்ணனும், வளர்ந்த பெண்ணாக இராதையும் தோன்றுகின்றனர்.

இராதை, கிருஷ்ணனை மணந்து கொண்டு குழந்தைகளையும் பெற்றதாகச் சில கதைகள் குறிப்பிடுகின்றன. பதினான்காம் நூற்றாண்டில் மிதிலையில் வாழ்ந்த கவிஞன் வித்தியாபதி, தான் எழுதிய மைதிலி மொழிக் காதற் கவிதையொன்றில், கிருஷ்ணன் இராதையின் காதலைப் பற்றிப் பாடும்போது,

> [2]இதோ பார்!
> என் கண்ணல்ல!
> கோபந் தவிர்!

உன் தோள்களால்
என்னைக் கட்டு
உன் தொடைகளால்
என்னைக் காயப்படுத்து.

பால் மணக்கும்
உன் மார்புகளால்
என் மூச்சடக்கு

என்று பாடுகிறார். இப்பாடல் இராதையின் தாய்மையைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறது.

பிருந்தாவனத்தில் இராதாகிருஷ்ணன் கோவில் அமைந்துள்ளது. கோகுலாஷ்டமி இங்குப் பதினைந்து நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வடக்கில் வணக்கம் சொல்லும்போது, பொதுவாக 'ராம் ராம்' என்று சொல்லுவார்கள். ஆனால் பிருந்தாவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மற்றவர்க்கு வணக்கம் செல்லும்போது 'ராதே கிருஷ்ண' என்று கூறும் வழக்கம் இன்றும் நிலவுகிறது.

வங்காள நாட்டில் பர்த்வான் மாவட்டத்தில் கெண்டோலி என்னும் இடத்தில் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஜெயதேவர் என்னும் கவிஞர்.

பாகவதம் பத்தாவது காண்டத்தில் உள்ள கிருஷ்ணன் இராதை பற்றிய செய்திகளோடு, நாட்டிலும் ஏட்டிலும் வழங்கிவந்த பிறமொழிச் செய்திகளையும் திரட்டி, அவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு சமஸ்கிருத மொழியில் இசைப்பாடல்கள் பாடினார் ஜெயதேவர். அப்பாடல்களுக்குக் 'கீதகோவிந்தம்' (கோவிந்தன் பாட்டு) என்று பெயர் சூட்டினார்.

இப்பாடல்கள் நாட்டியத்துக்கும் ஏற்றவை. ஒவ்வொரு பாடலிலும் எட்டு விதமான நாட்டியப் பதங்கள் இருப்பதால், இப்பாடல்கள் அஷ்டபதி என்று அழைக்கப்படுகின்றன.

ஜெயதேவரின் மனைவி பத்மாவதி சிறந்த ஆடலரசி. பூரி ஜகந்நாதர் கோவிலில் ஜெயதேவர் அஷ்டபதி பாட, பத்மாவதி அதற்கேற்பப் பதம்பிடித்து ஆடியதாக ஜெயதேவரே ஓர் அஷ்டபதியில் குறிப்பிடுகின்றார்.

வங்காளத்தில் பர்த்வான் பகுதியை ஆண்ட இலட்சுமசேனர் அரசவையில் 'பஞ்சரத்னம்' என்று போற்றப்பட்ட ஐந்து சிறந்த கவிஞர்களுள் இவரும் ஒருவராக விளங்கினார். இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கெண்டோலி சென்று அவர் பிறப்பிடத்தைத் தரிசித்து வருகின்றனர்

கீத கோவிந்தம் கருத்துக்காக அன்றி, அதில் காணப்படும் காதலோடு கலந்த இனிய இசைக்காகப் பெரிதும் பாராட்டப்படுகிறது. புத்தரின் வாழ்க்கையை 'ஆசிய ஜோதி' (Light of Asia) என்ற பெயரில் காப்பியமாக எழுதிய ஆங்கிலக் கவிஞர் எட்வின் ஆர்னால்டு, ஜெயதேவரின் கீதகோவிந்தத்தை 'The Indian song of songs' என்ற பெயரில் மொழி பெயர்த்திருக்கிறார். ஓர் ஆங்கில அறிஞர் இந்நூலின் முன்னுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

> The Gita Govinda is a great poem
> a gripping lyric drama and a
> heart entrancing opera - all rolled
> into rapturous music. Like the
> song of songs in the old Testament,
> it is a mystical allegory.

"கிருஷ்ணன், மனிதன் தெய்வம் இரண்டுமானவன். அவனுடைய தெய்வீகத்தன்மை சில நேரங்களில் உறங்கிவிடுகிறது.

உலக இன்பமாகிய போதையில் தன்னை மறந்துவிடுகிறான். இராதை தன் தெய்வீக அழகால், நுட்ப அறிவால், பண்பு நலத்தால் அவனை மீட்டுப் பேரின்பக்

காதலுக்கு இட்டுச் செல்கிறாள்'' என்பது கீத கோவிந்தத்தின் சாரம்.

கீத கோவிந்தத்தின் ஓர் அஷ்டபதி, இசைப் பாடலாகக் கீழே மொழி பெயர்த்துக் கொடுக்கப் பட்டுள்ளது. கிருஷ்ணனும் இராதையும் பிணக்கு நீங்கிப் பிருந்தாவனத்தில் சந்தித்தபோது, கிருஷ்ணன் அவள் கோபத்தை நீக்கப் பாடுகிறான் :

இன்னுமென்னடி கோபம் - என்னை
ஏறிட்டுப் பார்ப்பதன்றோ சல்லாபம்
கன்னங்கரிய விழியால் - பின்னிக்
கட்டிவிடு என்னைச் சுட்டது போதும்
முன்னங்கை விலங்காலே - சுற்றி
மோகத் தளையிட்டு மூச்சை நிறுத்து
உன்னிரு கைச்சிறைக்குள்ளே - நான்
ஒன்றி ஒடுங்கி உயிர்விடுவேனடி (இன்னும்)

மணக்கும் மல்லிகை மொட்டு - உன்றன்
மார்பில்விண் மீன்களாய்ஒளி விட்டு
பிணக்கியுன் நெஞ்சத் துடிப்பைக் - கேட்கும்
பேற்றினைத் தட்டிப் பறிக்குதென் செய்வேன்?
கணக்கமின்றியுன் இடையைக் - கவ்விச்
சுற்றி வளைத்துக் கிடக்கும்இம் மேகலை
எனக்குப் போட்டியடி ராதே - நான்
என்றைக்குன் மேனிக்கு மேகலை யாவேன்?
(இன்னும்)

அஞ்சு கணைகளைக் காமன் - உன்
அழகினில் தீட்டி எடுத்தெடுத் தென்றன்
நெஞ்சில் எறிவதைக் கண்டும் - உன்
நேசக் கரங்களை நீட்டுதற் கொப்பாய்
பஞ்சின் மெல்லடி யாளே - உன்
பாதத் தலத்தில் இருந்தெழுந் துன்றன்
கொஞ்சும் கரிய விழியை - இன்று
கூர்ந்து நோக்கும் துணிச்சலைப் பெற்றேன்
(இன்னும்)

வடநாட்டு இலக்கியங்களில் இராதை பேசப்படும் அளவுக்கு நப்பின்னை பேசப்படுவதில்லை. பாகவதம் பத்தாவது காண்டத்தில் நப்பின்னையின் திருமணமும் கூறப்பட்டுள்ளது.

> *நப்பின்னை கிருஷ்ணன் தேவியருள் ஒருத்தி.*
> *நீளா தேவியின் அவதாரம். நீளாதேவி*
> *விஷ்ணு மூர்த்தியின் சக்தி.*

என்று பாகவதம் குறிப்பிடுகிறது. பாகவதத்தில் நப்பின்னையின் திருமணம் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

மிதிலை நகரில் கும்பகன் என்ற ஆயர் தலைவன் வாழ்ந்து வந்தான். அவன் மகள் நப்பின்னை. அவன் ஆநிரையில் ஏழு கொடிய முரட்டுக் காளைகள் இருந்தன. காலநேமி என்ற அரக்கன் மக்களே காளைகளாக உருவெடுத்துக் கும்பகன் ஆநிரைக்குள் புகுந்து ஊர் மக்களுக்கும் பசுக்களுக்கும் பெருந் துன்பம் விளைவித்துக் கொண்டிருந்தனர்.

அந்நகர் மன்னன் அந்த ஏழு காளைகளையும் கொல்லும்படி ஆணையிட்டான்.

ஆயர் தலைவனான கும்பகனும் அக்காளைகளைக் கொல்பவனுக்கு தன் ஒரே செல்வமகனான நப்பின்னையைத் திருமணம் செய்து கொடுப்பதாகப் பறையறைவித்தான்.

கிருஷ்ணனும் பலராமனும் அக்காளைகளைக் கொன்றனர். நப்பின்னை கிருஷ்ணனுக்கு மாலை சூட்டினாள்.

நெல்லிநகர் அருளாள தாசரென்னும் வரதராச ஐயங்கார் இயற்றிய பாகவதத்திலும் நப்பின்னை திருமணம் கூறப்பட்டுள்ளது.

காளையை அடக்கி ஆயர் குலப் பெண்ணை மணக்கும் வழக்காறு, தமிழர்களிடையே தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது.

[3]கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையிலும்
புல்லாளே ஆய மகள்

என்ற முல்லைக்கலி வரிகள், காளையை அடக்கும் காளையர் வீரத்தை வியந்து பாராட்டுகின்றன. எனவே நப்பின்னை கதை தமிழ்நாட்டிலிருந்து வடநாட்டுக்கு ஏற்றுமதி ஆகி இருக்கலாம்.

'கண்ணன்' என்னும் பெயர் வட இந்தியாவிலும் வழக்கிலிருந்தாலும், தமிழ் இலக்கியம் கிருஷ்ணனைக் 'கண்ணன்' என்றே எல்லா இடங்களிலும் குறிப்பிடுகின்றது. 'கண்ணன்' என்ற சொல் நம்நாட்டில் காதலனைக் குறிப்பிடும் குறிப்புச் சொல்லாகவே மாறிவிட்டது.

காரி, நெற்றிச் செகில், மல்லல் மழவிடை, நுண்பொறி வெள்ளை, பொற்பொறி வெள்ளை, வென்றி மழவிடை, தூநிற வெள்ளை ஆகிய ஏழுவிதமான முரட்டுக்காளைகளைக் கண்ணன் அடக்கிக் கொன்ற வீரவிளையாட்டு சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் சிறப்பாகப் பாடப்படுகிறது.

[4]காரி கதனஞ்சான்
பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள்
... ...
... ...
தூநிற வெள்ளை
அடர்த்தாற் குரியளிப்
பூவைப் புதுமலராள் ;

பின்னை அல்லது பிஞ்ஞை என்பது அவள் பெயர். அடைமொழியோடு கூடி (ந+பின்னை) நப்பின்னை என்று அவள் அழைக்கப்படுகிறாள். பின்னையொடு பலராமனும் கண்ணனும் குரவைக் கூத்தாடியதைச் சிலம்பு அழகாகப் பாடுகிறது.

[5]மாயவன் என்றாள் குரவை விறல்வெள்ளை
ஆயவன் என்றாள் இளிதன்னை - ஆய்மகள்
பின்னையாம் என்றாளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையாம் என்றாள் முறை

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள், தன் பாவைப்பாட்டில் பல இடங்களில் நப்பின்னை பற்றிக் குறிப்பிடுகிறாள். நப்பின்னையை நந்த கோபாலன் மருமகள் என்றே பாடுகிறாள்.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய்!
(திருப்பாவை 18)

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்!
(திருப்பாவை 19)

செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மை நீ ராட்டேலோ ரெம்பாவாய்
(திருப்பாவை 20)

குறிப்பு விளக்கம்

1. கீதகோவிந்தம் முதல் சருக்கம் சுலோகம் 1
2. வித்யாபதியின் காதற்கவிதைகள் தமிழில் டாக்டர் பாலாவின் மொழி பெயர்ப்பு - பக்கம் 41
3. முல்லைக்கலி - பாடல் 3
4. சிலம்பு - ஆய்ச்சியர் குரவை
5. சிலம்பு - ஆய்ச்சியர் குரவை

9

இராபர்ட் பிரௌனிங் சிந்தனைகள்

ஆங்கிலப் பேரரசி விக்டோரியா மகாராணி கதிரவன் மறையாத ஆங்கிலப் பேரரசை ஆட்சி புரிந்த காலம். மகாகவி டென்னிசன் அரசவைக் கவிஞராக அமர்ந்திருந்து இலக்கிய ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த காலம்.

அப்போது பாராளுமன்றத்தை ஆட்டிப் படைத்த பிரபுக்கள் கோட்டையில் விரிசல் கண்டு தொழிலாளர் இயக்கம் துளிர்விட்டுக் கொண்டிருந்தது.

பொதுவுடைமைத் தத்துவத்தின் தந்தையான காரல் மார்க்சு ஊர்பேர் தெரியாத முப்பது வயது இளைஞராக இலண்டன் நூலகங்களில் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

டாக்டர் டார்வினின் பரிணாமக் கொள்கைகளும், ஃப்ராய்டின் அடிமனக் கோட்பாடுகளும் சமயவாதத்துக்குச் சவாலாக அணிவகுத்து நின்றன.

அப்போது தேம்சு நதிக்கரையில் கேம்பர்வெல் என்ற இடத்தில் கி. பி. 1812ஆம் ஆண்டு இராபர்ட் பிரௌனிங் (Robert Browning) பிறந்தான்.

பிரௌனிங்கின் தந்தை, தன் மகனை ஓர் இலக்கிய மேதையாக ஆக்க வேண்டும் என்று இளமை முதல் கனவு கண்டார். தன் மகன் கற்பதற்காக ஆறாயிரம் நூல்கள் அடங்கிய நூலகம் ஒன்றைத் தம் வீட்டிலேயே நிறுவியிருந்தார். பிரௌனிங் இலண்டன் பல்கலைக் கழகத்தில் சில திங்கள்களே மாணவனாக இருந்தான்.

ஆனால் கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல், தத்துவம் யாவற்றையும் வீட்டிலேயே இருந்து கற்க எல்லா ஏற்பாடுகளையும் அவனுடைய தந்தை செய்து கொடுத்தார்.

பழமை வாதத்தை உடைத்தெறிந்து புரட்சிக்குப் புதுக்குரல் கொடுத்த ஷெல்லியின் கவிதைகளில் பிரெளனிங்கிற்கு இளமை தொட்டே அளவுகடந்த ஈடுபாடு உண்டு. தமது முதல் கவிதை நூலில்,

சூரியச்சுடரே!
என் வாழ்வின் ஒளியே நீதான்
நீ தோற்றுவித்த வசந்தம்
இளைஞர் உலகத்தை அழகு படுத்தியது
உன் விடுதலை வேட்கையை
நான் என் -
சபதமாக ஏற்றுக் கொள்கிறேன்
மக்களே கடவுளர்!
மாநிலமே சொர்க்கம்!

என்று ஷெல்லியின் கொள்கைக்குக் கட்டியம் கூறுகிறான் பிரெளனிங்.

ஆங்கிலத்தில் அளவிறந்த கவிதைகளை எழுதியவர்களுள் பிரெளனிங்கும் ஒருவன். அவன் படைப்புக்களில்,

ஆண்களும் பெண்களும் (Men and Woman)

மணிகளும் மாதுளைகளும் (Bells and pomegranates)

நாடகத் தனிமொழிகள் (Dramatis Personae)

கணையாழியும் புத்தகமும் (The ring and the book)

என்பவை அழியாப் புகழ் பெற்றவை.

பல்வேறுபட்ட செறிவான சிந்தனைகளும், கிளர்ச்சி யூட்டும் நாடகக் காட்சிளும், ஆழமான உணர்வுகளும், குமுழியிட்டுப் பொங்கி வழியும் ஊற்றுப் பேரழகும் கொண்டவை அவன் கவிதைகள்.

ஆனால் அவ்வளவு எளிதாக யாரும் அவன் கவிதைக்குள் நுழைந்துவிட முடியாது. அவன் கவிதையில் படிந்துள்ள இருண்மையைப் பலரும் குறை கூறியிருக்கின்றனர். அவன் படைப்பைச் சுருக்கெழுத்துக் கவிதை என்று திருமதி பேகாட் கூறுகிறார்.

'திக்குத் தெரியாத காட்டில் வளைந்து வளைந்து செல்லும் ஒற்றையடிப்பாதை' என்றும் 'சீனப்புதிர்' என்றும், 'கருத்தை மறைக்கும் மூடுபனி' என்றும் பிரௌனிங் கவிதையைப் பற்றி ஃப்ரெடெரிக் டென்னிசன் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.

ஆனால் அவன் சிந்தனை வேகத்தை விரைந்து செல்லும் புகைவண்டித் தொடருக்கும், கம்பிச் செய்திக்கும் ஒப்பிட்டுப் பலர் பாராட்டியிருக்கின்றனர்.

இராபர்ட் பிரௌனிங் ஒரு நம்பிக்கை வாதி (Optimist) 'வாழ்வே மாயம்; உலகே மாயம்' என்ற பெட்டைப் புலம்பல் அவனுக்குப் பிடிக்காத ஒன்று. அவன் எழுதியுள்ள 'குழந்தை பிப்பாவின் பாடல்' (Pippas song) இக்கொள்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இது இளவேனிற்காலம்
இது இளங்காலைப் பொழுது
மலைச் சாரலெங்கும்
பனித்துளி முத்துக்கள்
குயில்கள் சிறகடித்துப் பறக்கின்றன
முட்களில் நத்தைகள் நெளிகின்றன
ஆண்டவன் சொர்க்கத்தில் வீற்றிருக்கிறான்
இந்த உலகம்
இனிமையில் ஆழ்ந்திருக்கிறது

என்று நம்பிக்கை உணர்வோடு வாழ்க்கையை எதிர் கொள்கிறான்.

இயற்கையைச் சுவைக்கத் தெரியாதவன் கவிஞனாக இருக்க முடியாது. கிழக்கு வானைக் கிழித்து வெளிவரும் செங்கதிர்ச் சுடரைப் பாராட்டாத கவிஞன் உண்டா?

எழுந்தது செங்கதிர்தான்
கடல்மிசை! அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல்
வெளியெலாம் ஒளியின் வீச்சு

என்று பாவேந்தர் பாரதிதாசன் கடல்மேல் எழுந்த கதிரவனைக் கண்டதும் துள்ளிக்குதித்துப் பாடுகிறார். அதே துள்ளலைப் பிரௌனிங்கின், காலைப் பிரிவு (Parting at Morning) என்ற பாடலில் காணலாம்.

கரையின் முனையைக்
கடலலை சூழ்ந்தது
மலை முகட்டில் -
மாணிக்கப்பரிதி எட்டிப் பார்த்தான்
தனக்காகக் கடல்மீது ஒரு
தங்கப் பாலத்தைப் போட்டான்
உலகமக்களே ஓடிவருக
கண் கொள்ளா இக்
காட்சியைக் காண!

என்று மெய்மறந்து பாடுகிறான். ‘இரவின் சந்திப்பு’ (Meeting at night) என்ற பாடலில்,

வெள்ளைப் பனிக்கடல் ஓரத்தில்
கருமையான கரை
அடிவானத்தில்
அழகிய மஞ்சள் நிலா
குதூகலித்துக்
கொந்தளிக்கும் அலைகள்
சுழித்து ஓடிக்
கரையை நனைக்கின்றன
முன்னோக்கி நகரும் படகின்
முனையில் நின்று
கண்களால் இக்காட்சியைக்
கண்டு களிக்கிறேன்

என்று நிலாக்கால இரவைக் கவிதையில் வடிக்கிறான் பிரௌனிங்.

இத்தாலியில் உள்ள ரோமும் வெனிசும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கலைக் கருவூலங்கள். அந்த நகரங்களின் அழகைக் கண்டு களிக்க உலகமே திரண்டு செல்கிறது. முதன் முதலில் பிரௌனிங் இத்தாலி சென்றபோது அங்குள்ள கலைச் செல்வங்களைக் கண்டு மகிழ்ந்தாலும், அவனது தாய் நாடான இங்கிலாந்தின் நினைவு தான் அவன் நெஞ்சில் நிறைந்திருக்கிறது. 'வெளிநாட்டில் வீட்டு நினைவுகள்' (Home Thoughts from Abroad) என்று ஒரு பாடலை எழுதுகிறான்.

ஓ! இது ஏப்ரல் திங்கள்!
நான் இப்போது
இங்கிலாந்தில் இருக்க வேண்டும்.

காலையின் கண் விழித்ததும்
பட்டுத் தளிர் போர்த்திருக்கும்
எல்ம் மரத்தின்
தாழ்ந்த கிளைகளிலமர்ந்து
சிட்டுக்கள் கீச்சிடும் குரலை
இளமரக் காடுகள்
எங்கும் கேட்கலாம்

மேமாதம் தொடங்கியதும்
வெண் கழுத்துப் பறவைகள்
வேலியில் கூடுகட்டும்
பூரித்துப் பூக்கும் பியர்மரங்கள்
குனிந்து நின்று
பனித்துளிகளை மலர்களோடு
பழனத்தில் தூவும்

லார்க் என்னும்
இசைப் பறவை
ஒவ்வொரு பாட்டையும்
இரண்டு முறை பாடும்,
முதலில் பாடியது
மறந்துவிடக் கூடாது என்பதற்காக.

எனது நாட்டில் பூக்கும்
பொன் வண்ணக்
கிண்ணப் பூக்களின் அழகின் முன்னால்
இவ்வூரின்
பகட்டான மெலோன் பூக்கள்
எம் மாத்திரம்?

என்று மெய்மறந்து பாடுகிறான்.

ஆங்கிலக் கவிஞர்களுள் காதலைப்பற்றி மிக உயர்வாகப் பாடியவன் இராபர்ட் பிரெளனிங். காதலை வெறும் உணர்ச்சியின் அடிப்படையில் அணுகாமல், உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் அணுகினான்; தன் வாழ்க்கையிலும் அதைக் கடைப்பிடித்தான்.

அவன் படைத்த பாத்திரங்கள் கூட, காதலை ஆடம்பரமாகவோ, ஆரவாரத்துடனோ வெளிப்படுத்தாமல் அமைதியோடும், சிந்தனைத் தெளிவோடும் மென்மையான குரலில் வெளிப்படுத்துகின்றன. வாழ்க்கையை வளப்படுத்தும் நம்பிக்கை உணர்வுடன் காதலை அணுக வேண்டும் என்பது அவன் கொள்கை.

அவனுக்கும் எலிசபெத் பேரட் (Elizebeth Barret) டுக்கும் இடையில் நிலவிய புனிதமான காதல், ஆங்கில இலக்கிய வரலாற்றில் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முரட்டுத்தனமும் பிடிவாத குணமும் மிக்க ஒரு பணக்காரத் தந்தையின் மூத்தமகள் எலிசபெத். குதிரைச் சவாரியின்போது ஏற்பட்ட விபத்தில் முதுகெலும்பில் அடிபட்டு நிரந்தர ஊனமுற்று, சக்கரநாற்காலியில் தன் வாழ்நாளைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

கவிதை அவர்களை ஒன்று சேர்த்தது.

பிரெளனிங்கின் அறிவு பூர்வமான காதல், அவளுக்கு மருந்தாக மாறியது. காதலின் ஆற்றல் அவள் காலுக்கு

வலிமையூட்டியது. ஊனமுற்றவள் உயிர்த்தெழுந்து நடந்தாள். தந்தைக்குத் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினாள்.

பிரௌனிங்கும் அவளும் இத்தாலிக்குச் சென்று ஃப்ளாரன்சில் நிரந்தரமாகத் தங்கினர். தன்னைவிட ஆறாண்டுகள் மூத்த எலிசபெத்தோடு, பதினைந்தாண்டுகள் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தான் பிரௌனிங்.

அரும்பாக இருந்த பிரௌனிங்கின் கவிதையாற்றல், எலிசபெத்தின் தொடர்பால் மலர்ந்து உலகெங்கும் மணம் வீசத் தொடங்கியது. எலிசபெத்தும் சிறந்த கவிஞர். அவள் எழுதிய ‘போர்ச்சுகீசிய கீதங்கள்’ என்ற கவிதை நூல் ஆங்கில இலக்கிய உலகில் பரபரப்பான வரவேற்பைப் பெற்றது. அரசவைக் கவிஞர் வாய்ப்பும் அவளைத் தேடி வந்தது. அவள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பிரௌனிங் மீது தான் கொண்ட காதலைப் பற்றி உள்ள நெகிழ்ச்சியோடு எலிசபெத் தன் தங்கைக்குக் கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதியிருக்கிறாள்:

“எங்கள் திருமணத்தால் அவரும் நானும் சில பாரம்பரிய உறவுகளை இழந்துவிட்டோம் என்பது உண்மை. ஆனால் நாங்கள் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருக்கும் காதலையோ நம்பிக்கையையோ இழந்துவிடவில்லை. அவை நாள் தோறும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. அவர் எனக்கு உண்மையானவர்; நான் அவருக்கு உண்மையானவள். எங்கள் திருமணம் ஒரு சடங்கன்று; அழியாத உண்மை. நாங்கள் உள்ள ஒருமைப்பாட்டோடு ஒவ்வொரு மணித்துளியும், ஒவ்வொரு நாளும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; எங்களுக்காக நீ கடவுளுக்கு நன்றி சொல்” என்று எழுதுகிறாள்.

எலிசபெத் மீது கொண்ட காதலை பிரௌனிங் ஓர் அழகிய கவிதையாக்கி யிருக்கிறான். ஷெல்லி எழுதிய

'காதல் தத்துவம்' (Love's Philosophy) என்ற கவிதைக்கு ஒப்பாக இதைக் கூறலாம்.

ஓர்ஆண்டின் உயிர்ப்பையும் மலர்ச்சியையும்
ஒரு தேனீயின் கூட்டில் காணலாம்
ஒரு சுரங்கத்தின் அதிசயத்தையும் செல்வத்தையும்
பட்டைதீட்டப்பட்ட வைரத்தில் காணலாம்

கடலின் பேரொளியை ஒருமுத்தின்
இதயத்தில் காணலாம்
இவை எல்லாவற்றையும்விட
உண்மையும் நம்பிக்கையும் ஒளிமயமானவை
உலகில் உயர்ந்த இவற்றை, எனக்காக,
என் காதலியின் முத்தத்தில் பெறுகிறேன்

என்று எலிசபெத்தின் காதலைப் பாராட்டிப் பேசுகிறான் பிரௌனிங். இதற்கொப்பான சங்கப்பாடல் ஒன்றைக் குறுந்தொகையில் காணலாம்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே!

பிரௌனிங், காதலின் சிறப்பைப் பாராட்டுவதோடு அமையாமல், அதன் நுட்பமான பரிமாணங்களையும் தன் படைப்பில் வெளிப்படுத்துகிறான். ஆந்திரே சார்தோ என்ற ஓவியன், அக்கலையை அறிவியல் பூர்வமாகக் கற்றுத் தேர்ந்தவன். அவன் மனைவி பேரழகி. ஆனால் அவனது நம்பிக்கைக்குரியவளாக அவள் அமையவில்லை.

ஒருநாள் ஓவியம் தீட்டும்போது, ஓவியத்திற்குரிய மாதிரி (Model)யாக அவன் எதிரில் அவள் அமர்ந்திருக்கிறாள். அப்போது அவன் அவளிடம் கீழ்க்கண்டவாறு பேசுகிறான்.

'அன்பே! இந்த ஓவியத்தைப் பார். இது புகழ்பெற்ற ஓர் ஓவியன் தீட்டியது. குழந்தை இயேசுவை மடியில்

சுமந்த மெடோனாவின் ஓவியம். இந்த ஓவியத்தின் கை சரியாக வரையப்படவில்லை. அக்குறையை நான் சரி செய்து விட்டேன். ஆனால் முகத்தில் காணப்படும் சாந்தமும் அமைதியும் தெய்வீக ஒளியும் இந்த ஓவியத்தின் சிறப்புக்கள். இந்தச் சிறப்புக்களை என்னுடைய ஓவியங்களில் கொண்டு வரமுடியவில்லை.

புகழ்பெற்ற ஓவியர்களான ரஃபேல், மைக்கேல் ஆஞ்சலோ ஆகியோரின் ஓவியங்களில் காணப்படும் (தெய்வீக) ஒளிக்குக் காரணம் என்ன தெரியுமா? அவர்களின் மனைவியர் தமது கணவர்களுக்கு உண்மையாக நடந்து கொண்டனர். அப்பெண்களின் கற்பும் நம்பிக்கையுமே அந்த ஓவியர்களின் வெற்றிக்குக் காரணங்கள். அத்தகைய வெற்றியை என்னால் அடைய முடியவில்லை. காரணம், எனது நம்பிக்கைக்கு உரியவளாக நீ நடந்து கொள்ளவில்லை. போ! உன் புதுக்காதலன் வெளியே இருந்து சீழ்க்கை அடித்துக் குரல் கொடுக்கிறான்.'

என்று பரிதாபமாகப் பேசுகிறான். உண்மையான காதலின் ஆற்றல் எவ்வளவு மகத்தானது என்பதை 'ஆந்திரே டெல் சார்தோ' (Andhre Del Sartho) என்ற பிரௌனிங்கின் கவிதை உணர்ச்சி பூர்வமாக உணர்த்துகிறது.

ஆங்கிலக் கவிஞர்களுள் கீட்சு இருபத்தைந்து வயதிலும், ஷெல்லி முப்பது வயதிலும், பைரன் முப்பத்தாறு வயதிலும் உயிர் நீத்தனர். பிரௌனிங் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து தமது எழுபத்தேழாம் வயதில் உயிர்நீத்தான்;. தன் மனைவி இறந்த பிறகும், இருபத்தெட்டு ஆண்டுகள் உயிர் வாழ்ந்து இலக்கியத் துறையில் பல சாதனைகள் புரிந்தான்.

பிரௌனிங் தன் முதுமையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் வாழ்ந்தவன்; வாழ்நாள் முழுதும் மக்கள் உரிமைக் கொள்கையாளனாகவே விளங்கியவன். நாட்டில் நிலவிய இழிதகைமையையும், கொடுமையையும்

எப்போதும் எதிர்த்துச் சாடியவன், சுறுசுறுப்பானவன்; கலகலப்பானவன். இலண்டனில் நடைபெற்ற சமுதாய, பண்பாட்டு நிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள், பொருட்காட்சிகள், ஆடம்பர விருந்துகள் எல்லாவற்றிலும் பிரெளனிங்கைக் கட்டாயம் எதிர்பார்க்கலாம்.

கவிஞர் டென்னிசனின் மகன், பிரெளனிங்கைப்பற்றி ஓரிடத்தில் குறிப்பிடும்போது, "கவிஞர் பிரெளனிங் மொறமொறப்பான தமது வெள்ளைக் கழுத்துப் பட்டையோடு, கலகலப்பான ஒரு விருந்து நிகழ்ச்சியில் உயிர்விட்டாலும் வியப்பில்லை" என்று வேடிக்கையாகக் கூறியுள்ளான்.

மனைவியின் இறப்புக்குப்பிறகு, பிரெளனிங் எழுதி வெளியிட்ட 'கணையாழியும் புத்தகமும்' என்ற பெருங்காப்பியம் அவன் படைப்புக்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று. அது ரோமாபுரியில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு பிரபுவின் குடும்பத்தில் நடைபெற்ற உண்மை நிகழ்ச்சிகளை மையமாக வைத்து எழுதப்பட்டது.

இக்காப்பியத்தில் வரும் பாத்திரங்கள் பலதிறப்பட்டவை. இதில் வரும் கயவர்கள், வஞ்சகர்கள், கொலைகாரர்கள், சமயவாதிகள், அபலைப் பெண்கள் ஆகியோரை மிக நுட்பமாகப் பேச வைத்திருக்கிறான் பிரெளனிங்.

ஆங்கில இலக்கியத்தில் இயாகோவுக்கு ஒப்பான ஒரு தீக்குணப் பாத்திரத்தைக் (villon character) காணமுடியாது. பிரெளனிங் இக்காப்பியத்தில் இயாகோவுக்கு ஒப்பாக 'ஃப்ரான்செஸினி' என்ற ஒரு கயவனைப் படைத்துக் காட்டியிருப்பதாகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

சேக்ஸ்பியரின் படைப்பான 'காலிபன்' பாதி விலங்குத்தன்மையும், பாதி மனிதத் தன்மையும் கொண்ட காட்டுமிராண்டி. தான் எழுதிய 'நாடகத் தனி மொழி'யில் அவனைத் தத்துவ ஞானியாகப் பேசவைத்துக்

காட்டியிருக்கிறான் பிரௌனிங். அவனுடைய ஆழ்ந்து அகன்ற அறிவும், நுண்மாண் நுழைபுலமும் படிப்போரை வியப்பில் ஆழ்த்தாமல் இரா.

முதுமை என்றவுடன் எல்லாருக்கும் ஓர் அச்சம் ஏற்படுவது வழக்கம். முதுமை வந்ததும் வாழ்க்கையில் நம்பிக்கை தளர்ந்து விடுகிறது. சாவைப் பற்றிய சிந்தனை எப்போதும் ஆட்கொள்ளுகிறது. ஆனால் பிரௌனிங், முதுமையை மகிழ்ச்சியோடு வரவேற்கிறான். 'என்னோடு முதுமைபெற வாருங்கள்' (Grow old Along with me) என்ற ஒருபாடல், அவன் முதுமையை எவ்வாறு வரவேற்கிறான் என்பதை விளக்கிறது.

என்னோடு முதுமைபெற வாருங்கள்!
வாழ்க்கையின் -
உன்னதப் பகுதி இனிமேல்தான்.
செம்மையான முதுமைக்குப்
பயிற்சிக் கூடமே இளமை.
நம் காலம்
கடவுள் கையில்;
நிறைவான வாழ்க்கை.
திட்டமிட்டு அவனால் நமக்கு
வழங்கப்பட்டுள்ளது.
இளமை
பாதிக்காட்சி
கடவுளை நம்பி
எல்லாவற்றையும் எதிர்கொள்
அச்சந்தவிர்

என்று நம்பிக்கையோடு பாடுகிறான். சாவு ஒரு முதுமைப் போராட்டமாகவே அவனுக்குப் படுகிறது. தனக்குத்தானே அறிவுரை (Prospice) என்ற பாடல் அப்போராட்டத்தை விளக்குகிறது.

என் தொண்டையில். உறைபனி!
என் முகத்தில்
பார்வையை மறைக்கும் மூடுபனி

பனிகொட்டத் தொடங்கிவிட்டது
சூறைக்காற்றும் சுழன்றடிக்கிறது
புயலோடு கூடிய
இரவின் ஆதிக்கம்
எனக்குத் தெரிகிறது

சாவு என்னும்
கொடிய எதிரியின் முகாம்
என் காட்சிக்குத் தெரிகிறது
தடைகளைத் தகர்த்து
என் பந்தயத்தை முடித்து
என் இலக்கையும் தொட்டுவிட்டேன்

ஆனால் -
பரிசைப் பெறுவதற்குமுன்
மீண்டும் ஒரு போர்
நான் போருக்கு அஞ்சுபவன் அல்ல
புகழ்பெற்ற என்நாட்டுப்
போர்மறவர்போல் போரிட்டு
இதில் நான் வெற்றிகொள்வேன்

என்று சாவை எதிர்த்து ஆர்ப்பரிக்கிறான் பிரெளனிங். அவன் சாவை வென்றானா? ஆம், வென்றான்.

அவன் பெற்ற வெற்றிகளின் நினைவுச் சின்னங்கள்தாம் அவன் தனக்குப் பின் விட்டுச் சென்ற படைப்புக்கள். அவன் வாழ்ந்த காலத்திலும் இலக்கியவாதிகள் அவன்மீது சரமாரியாகக் கண்டனக் கணைகள் வீசினர். அவற்றை அவன் புன்னகையோடு ஏற்றுக் கொண்டான்.

“நான் மிக ஆழமானவன்; என்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்” என்று அவர்களைப் பார்த்துச் சொன்னான்.

இறந்த பிறகும்கூட இலக்கிய வாதிகளின் எதிர்ப்பு ஓயவில்லை.

ஒரு நாள் மழையில் நனைந்து வீடு திரும்பிய பிரௌனிங், கடுமையான சளித்தொல்லையால் படுத்த படுக்கையானான். அதைத் தொடர்ந்து வந்த மாரடைப்பு அவனை வீழ்த்திவிட்டது.

1889ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் பன்னிரண்டாம் நாள், அவன் கடைசி நூலான அசலேண்டோ (Asolando) வின் வெளியீட்டு விழா இலண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எல்லா இலக்கிய ஏடுகளும் சிறப்பாக அந்நூலைப் பாராட்டி எழுதியிருந்தன. இக்கம்பிச் செய்தி, வெனிசுநகரில் தன்மகன் இல்லத்தில் படுத்த படுக்கையாகக் கிடந்த பிரௌனிங்கிற்கு அறிவிக்கப்பட்டது.

'அப்படியா! மிக்க மகிழ்ச்சி!' என்று சிரித்துக் கொண்டே உயிர்விட்டான் பிரௌனிங்.



10

அதனால்தான் அவர் கவிக்கோ!

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் உவமைக் கவிஞர் சுரதாவின் கவிதை ஏட்டை ஒரு நாள் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். தித்தன் மகன் கிள்ளியைப் பற்றி எழுதப்பட்ட ஓர் அகவற்பா என் கண்ணில் பட்டது. புறநானூற்றில் காதலைப் பற்றி யாரும் எழுதியதில்லை. ஆனால் நக்கண்ணை என்ற பெண்பாற்புலவர் கிள்ளியின் மீது, தான் கொண்ட காதலை வெளிப்படுத்திப் பாடியுள்ள மூன்று பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. இக் கைக்கிளைப் பாடல்கள் புறத்தில் அகம்.

இச்செய்தியைக் குறிப்பிட்டிருந்த அக்கவிஞர்,

வீரவாள் வசிக்கும் வைர உறையில்
ஈர மலர்களை நிரப்புதல் போல

என்ற அழகிய உவமையைக் கையாண்டிருந்தார். இந்த உவமை படித்த மாத்திரத்தில் என் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டது. இந்த உவமை புதுமையானதாகவும், அதே சமயத்தில் படித்தவுடன் உள்ளத்தில் பதிவதாகவும் இருந்த காரணத்தால், அதை எழுதிய கவிஞர் யாரென்று பார்த்தேன். அப்துல் ரகுமான் என்றிருந்தது, அன்றிலிருந்து இன்றுவரை அவர் என் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்டார்.

கவிதையில் மட்டும் கண்டு சுவைத்த அப்துல் ரகுமானோடு ஒரு கவியரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு விரைவில் கிட்டியது. திருச்சி வானொலி நிலையத்தார் **விடுதலைப் போர் வீரர்கள்** என்ற தலைப்பில்

ஒரு கவியரங்கம் நடத்தினர். கவியரங்கத் தலைமை ஏற்க அப்போது உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு கலைஞர் கருணாநிதி வந்திருந்தார். கவிஞர்கள் அப்துல் ரகுமான், ரகுநாதன், தி. கு. நடராசன், புலவர் இளஞ்செழியன் ஆகியோர் அக்கவியரங்கில் என்னோடு பாடியவர்கள்.

அதன் பிறகு அண்ணா கவியரங்கம் நாடெங்கிலும் கலைஞர் தலைமையில் பரவலாக நடைபெற்றது. தமிழ்க் கவியரங்க வரலாற்றில் பொற்காலம் என்று அதைக் குறிப்பிடலாம். பல்லாயிரக் கணக்கான மக்கள் கவியரங்கம் கேட்க ஆவலோடு கூடினர். மாவட்டந்தோறும், அண்ணா பிறந்தநாள் விழாக் கவியரங்கம் முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்பட்டது.

இரண்டாம் உலகத் தமிழ்மாநாட்டில், அண்ணா கவியரங்கம் இடம் பெற்றது. நானும் கவிஞர் சுரதாவும் பந்தலின் ஓரத்தில் நின்று கவியரங்கைச் சுவைத்துக் கொண்டிருந்தோம்.

அப்துல் ரகுமான் பாடத் தொடங்கியதும் கூட்டத்தில் உணர்ச்சி வெள்ளம் பொங்கிப் பெருக்கெடுத்தது. வரிக்கு வரி கற்பனையும் சிலேடையும் போட்டி போட்டுக் கொண்டு வந்து விழுந்தன.

அழுகின்ற போதும்
மேகம்போல் அழுபவன்நீ
விழுகின்ற போதும்
விதையைப் போல் விழுபவன் நீ

என்று அப்போது அவர் பாடிய வரிகள் கேட்டவர்களுடைய இரத்தத்தில் கலந்து இன்றும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

அன்று அவர் பாடிய 'இந்திராணிச் சிலேடை (இந்திரர்கள் பலராம்; அவர் எத்தனைபேர் என்றாலும் 'இந்தி' ராணி மட்டும் எல்லார்க்கும் பொது மகளாம்)

அரசியல் வட்டாரத்தில் பெரிய பரபரப்பையே ஏற்படுத்திவிட்டது.

அண்ணாவைப்பற்றி ரகுமான் பாடியுள்ள இந்தப் பாடல் வரிகளைக் கலைஞர் பல மேடைகளில் மேற்கோளாக எடுத்துக் கூறி ரகுமானைப் பெருமைப படுத்தியிருக்கிறார்.

சேலத்தில் ஒருமுறை நேரு கலையரங்கில் கலைஞர் தலைமையில் 'கணக்கு' என்ற தலைப்பில் ஒரு கவியரங்கம் நடத்தினோம்.

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்பன தலைப்புகள்.

நான், கவிஞர் கண்ணதாசன், அப்துல்ரகுமான், தமிழன்பன் ஆகியோர் கவியரங்கேறினோம். அக்கவியரங்கிற்குக் கட்டணம் வசூலித்தோம். ரூ. 10,000/- வசூலாகியது. சேலத்தில் கலைஞர் தலைமையில் புதுமையாகக் கவிதைப்பட்டி மண்டபமும் நடத்தினோம்.

சென்னையில், கவியரங்கங்கள் கலைவாணர் அரங்கில்தான் நடைபெறுவது வழக்கம். சென்னையில் ஒரு முறை ஐநா. தினம் கொண்டாடப்பட்டது. அதையொட்டி நேரு கவியரங்கம் நடத்தப்பட்டது. கலைஞருக்கும் கண்ணதாசனுக்கும் அப்போது உறவு சீர் கெட்டிருந்தது. என்றாலும் கண்ணதாசனும் எங்களோடு கவியரங்கில் கலந்துகொண்டார்.

கண்ணதாசன் தமது கவிதையில் கலைஞரின் தலையுச்சியிலிருந்த வழுக்கையைப் பார்த்து, இது பூவா? தலையா? என்று நயம்படக் கேலி செய்து பாடினார். உடனே கலைஞர் அது பூவாக இருந்தாலும் சரி, தலையாக இருந்தாலும் சரி, நண்பர் கண்ணதாசன் அதைப் பறித்துக் கொண்டு போகாமல் இருந்தால் போதும் என்று கவிதையில் மறுமொழி பகர்ந்தார். கலையரங்கமே கைதட்டலால் அதிர்ந்தது.

அன்று அப்துல் ரகுமான் அற்புதமாகப் பாடினார். அடுத்த நாள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு இக்கவியரங்கைப் பாராட்டி The muses of Tamilnadu என்ற பெயரில் ஒரு தலையங்கமே எழுதியிருந்தது குறிப்பிடத் தக்கது.

அப்துல் ரகுமான் பாடுகிறார் என்றால், கவியரங்கில் உடன் பாடும் கவிஞர்களுக்கு உதறல்தான். எல்லாக் கவிஞர்களும் உழைத்துக்கவிதை எழுதிக்கொண்டு வருவார்கள். அந்த அச்சமும் உழைப்புமே கவியரங்க வெற்றிக்குக் காரணமாக இருந்தன.

கவியரங்குகளில் சிலேடையை அதிகமாகக் கையாளும் வழக்கத்தைத் தொடங்கி வைத்தவர் அப்துல் ரகுமான்.

அவர் கையாளும் சிலேடைகள் பிரித்துப் பொருள் கொள்ளும்போது பிசிறில்லாமல் பொருத்தமாக அமைந்திருக்கும். 'வைகை அணைக்கட்டு' என்ற அவரது பிரிமொழிச் சிலேடை மிகப் பிரபலம். 'வை கை அணை கட்டு' என்று அவர் பிரிக்கும்போது, கைதட்டல் ஓய வெகுநேரம் ஆகும். இச்சிலேடைப் பயித்தியம் பின்னாளில் ஒரு தொற்று நோயாக மாறிக் கவியரங்கங்களைக் கோமாளிக் கூத்தாக்கிவிட்டது.

கவிஞர் அப்துல் ரகுமானின் கற்பனையும், சொல்லாட்சியும் மற்ற கவிஞர்களின் படைப்பிலிருந்து வேறுபட்டே இருக்கும். அதற்குக் காரணம் அவருக்கிருந்த உருதுப் புலமை. பாரசீக உருதுக் கவிதைகளின் தாக்கம் அவர் கவிதைகளில் மிகுந்து காணப்படும். சக்கையே இல்லாத பலாச்சுளைக் கவிதை அவர் பாணி. சர்க்கரைப் பொங்கலில் முந்திரிப்பருப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடப்பதுபோல், மற்ற கவிஞர்களின் படைப்பில் நயம் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தட்டுப்படுவண்டு. ஆனால் அப்துல்ரகுமான் கவிதை,

உண்பவர் வாயில் மொருமொரு வென்று உதிரும் வறுத்த முந்திரிப்பருப்பு.

அப்துல் ரகுமானுக்குக் கவிதையைப் போலப் பிற கலைகளிலும் கவர்ச்சியும் ஈடுபாடும் அதிகமுண்டு. மதுரை உலகத்தமிழ் மாநாட்டில் அவர் கலந்து கொள்ள மறுத்துவிட்டாலும், பத்மா சுப்பிரமணியத்தின் நாட்டிய நிகழ்ச்சிகளைத் தேடிச் சென்று தொடர்ந்து நானும் அவரும் பார்த்தது இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக உள்ளது.

கருத்துச் செறிவுள்ள இலக்கிய உரையாடல் ரகுமானுக்கு வாய்த்த அரும் பேறு. தூங்காமல் விடிய விடியக் கவிதைபற்றி நண்பர்களிடம் பேசுவார்.

இவர் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் வாணியம்பாடி இசுலாமிய கல்லூரி ஒரு கலைக்கூடமாகத் திகழ்ந்தது. கவிதை வெறி கொண்ட ஒரு மாணவர் பட்டாளத்தையே அங்கு அவர் உருவாக்கியிருந்தார். ஆண்டுதோறும் கல்லூரியில் இலக்கிய விழா இரண்டு நாள் அமர்க்களமாக நடக்கும். அப்துல் ரகுமானின் நண்பர்கள் கூட்டம் அப்போது அலை மோதும்.

வடஆர்க்காடு மாவட்டக் கல்லூரிப் பேராசிரியர்களும், தமிழாசிரியர்களும், மாணவர்களும் திரளாகக் கூடுவர். கவியரங்கம் பட்டிமன்றமென்று விழா தூள்பறக்கும். இரவு விருந்துக்குப் பின் 'கவிராத்திரி' என்று ஒரு சுவையான நிகழ்ச்சி நள்ளிரவு வரை நடைபெறும்.

மாணவ மணிகள் ஒருவரிக் கவிதை. இரண்டு வரிக்கவிதை என்று நூதனமான தலைப்புகளில் கற்பனைகளை அள்ளி அள்ளி வீசுவர். அவர்கள் கற்பனை அங்கு அமர்ந்திருக்கும் பெரிய கவிஞர்களையும் மலைக்க வைக்கும்.

அப்துல் காதர், நாஞ்சில் ஆரிது, இக்பால் போன்ற நண்பர்கள் வயிற்றுக்கும் செவிக்கும் ஓயாது விருந்தளித்த

வண்ணம் இருப்பர். இரண்டு நாட்களும் இலக்கியச் சாரல் தான். குற்றாலச் சாரலில் டி.கே.சி. வீட்டில் கூடிய வட்டத் தொட்டிபோல் நாங்கள் தங்கியிருக்கும் விருந்தினர் மாளிகையில் புலவர்கள் கூடிப் பேசுவர்.

கலைஞர் தலைமையில் இசுலாமியக் கல்லூரி வளாகத்தில் ஒருமுறை கவியரங்கம் நடைபெற்றது. அதை மிகச் சிறப்பாகக் கல்லூரி நிர்வாகம் நடத்தியதோடு அரபிய பாணியில் ஆர்ப்பாட்டமாக ஒரு விருந்தும் நடத்தியது. அந்நிகழ்ச்சி நினைவில் என்றும் நிற்பதாக இருந்தது.

'முஷாயிரா' என்பது வடக்கில் மிகவும் விளம்பரம் பெற்ற உருதுக் கவியரங்கம். சேலத்து இசுலாமிய இலக்கிய வாதிகள் தமிழிலும் உருதுவிலும் முஷாயிரா நடத்தினர். நானும் அப்துல் ரகுமானும் தமிழ் முஷாயிராவில் பங்கேற்றோம்.

உருது முஷாயிராவில் கலந்து கொள்ள பஞ்சாப், ஆந்திரம், மகாராஷ்டிரம் முதலிய மாவட்டங்களில் இருந்தும் கவிஞர்கள் வந்திருந்தனர். மேடையில் திண்டில் சாய்ந்த வண்ணம் கவிஞர்கள்! எதிரில் திராட்சை, ஆப்பிள் அடங்கிய பழத்தட்டுகள்!

கவிஞர்கள் பாடும்போது எதிரில் அமர்ந்திருந்த ரசிகப் பெருமக்கள், "வாஹ் வாஹ்" என்று சத்தமிட்டுச் சுவைத்தனர். சிலர் ரூபாய் நோட்டுகளை மேடை நோக்கி வீசினர். ஒரு ரசிகர் ஓடிப்போய்ப் பாடி முடித்த கவிஞரைக் கட்டிப்பிடித்து மேலே தூக்கினார். உருது முஷாயிராவைப் பார்த்த போது, தமிழ்க்கவியரங்கம் முன்னோக்கிச் செல்ல வேண்டிய தொலைவு எனக்குப் புலப்பட்டது.

அப்துல் ரகுமான் இறையன்பும், சமயப் பற்றும் மிக்கவர். தவறாமல் ரம்ஜான் நோன்பு நோற்பவர். அவர் நோன்பிருக்கும் நேரத்தில் ஓரிருமுறை அவர் இல்லத்துக்கு நான் சென்றிருக்கிறேன். நோன்புக்கஞ்சி எனக்கும் கொடுப்பார். 'என்ன இது?' என்று நான் கேட்டால் 'சாப்பிடுங்கள்; இது 'liquid briyani' என்று சொல்லிச்

சிரிப்பார். ஆனால் ஒரு வார்த்தை கூடச் சமயத்தைப் பற்றி என்னிடம் பேசியதில்லை.

சமயம் என்பது 'தனிமனித நம்பிக்கை' என்பதில் அவர் உறுதியானவர்.

அப்துல் ரகுமானுக்கு அன்பர்கள் அதிகம்; நண்பர்கள் குறைவு. மீரா, இ.சு. பாலசுந்தரம், அபி என்று அணுக்கத் தோழர்கள் சிலரே. நண்பர்களிடம் ஓர் எல்லை வைத்துப் பழகும் பண்பு அவருடையது. எப்போதும் குறைவாகப் பேசுவார்; குற்றம் கண்ட போதும் மென்மையாக நாக்ரிகமாக அறிவுரை கூறுவார்.

திருச்சியில் அண்ணா கவியரங்கம் நடைபெற்றது. அங்கு அவர் பாடிய பாட்டு வரிகளை அப்படியே தம்முடையதாக்கிக் கொண்டு தஞ்சைக் கவியரங்கில், ஒரு நண்பர் அவர் எதிரிலேயே பாடினார். அந்த நண்பர் இப்போது ஒரு திரைப்படக் கவிஞர். மேடையில் அமர்ந்திருந்த எங்களுக்கெல்லாம் கோபம்; வருத்தம். ஆனால் அப்துல் ரகுமான் புன்சிரிப்போடு மேடையில் அமர்ந்திருந்தார்.

'கலைஞர்' என்ற சொல் மற்றவருக்கு அரசியல் தலைவர்; அமைச்சர்; நண்பர்; பத்திரிகையாளர்; கவிஞர்; திரைப்பட வசனகர்த்தா. ஆனால் அப்துல் ரகுமானுக்கு அச்சொல் 'சுவாசம்'. அண்ணன் தம்பியின் ஆழமான பாசமும், காதலன் காதலியின் மென்மையான சிலிர்ப்பும், குரு சிஷ்ய பக்தியும் கலந்த ஒரு புதுக்கலவை அவர்கள் இடையில் உள்ள தொடர்பு. அதியமான் ஔவை, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தை தொடர்பு எவ்வாறு பண்டைய இலக்கியங்களில் பேசப்படுகிறதோ, அதுபோல் இவர்கள் நட்பும் எதிர்கால இலக்கிய வரலாற்றில் பேசப்படும்.

அப்துல் ரகுமானின் முதல் மரியாதை கவிதைக்கே. குடும்பம், பணம் எல்லாம் இரண்டாம் பட்சம். அவர்

கவிதைக்காக எதையும் இழக்கத் தயங்காதவர். குடும்பப் பொறுப்புகளைக் கூடக் கவிதைப் பணிக்கேற்பக் கச்சிதப்படுத்திக் கொண்டவர். சட்டப் பேரவைத் தேர்தலில் நிற்கும்படி கலைஞர் அழைத்தபோதுகூடக் கவிதைப் பணி கெடக்கூடாது என்பதற்காக அதை மறுத்துவிட்டவர். அவர் தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருந்தால் அமைச்சராகவும் ஆகியிருப்பார்.

தம் கவிதைப் பணிக்கு இடையூறாகப் பேராசிரியர் பதவி இருந்த காரணத்தால் அதையும் தூக்கி எறிந்தார். அவர் பெற்ற பட்டங்களும், விருதுகளும், பரிசுகளும் தாமே விரும்பி அவரைத் தேடி வந்தவை. அவர் எதையும் தேடிப் போவதில்லை, வெண்சுருட்டைத் தவிர!

'தாம் ஒரு கவிஞர்' என்ற பெருமிதம் அப்துல் ரகுமானுக்கு அதிகம். அதனால் தான் அவரை யாரும் விலைக்கு வாங்க முடியவில்லை. சில அரசியல் கட்சித் தலைவர்கள் அவரை விலைபேசிப் பார்த்தனர். அவர் மசியவில்லை. 'அம்மி கொத்தும் வேலை' என்று பணம் கொழிக்கும் திரைப்படத் துறையை ஒதுக்கிய அவருடைய 'சிற்பத்தனம்' பெருமிதத்தின் விளைவே.

கவிதா தேவிக்கு இந்த நூற்றாண்டில் பல கவிஞர்கள் தங்கக் கிரீடங்களைச் சூட்டியிருக்கின்றனர். ரகுமான் அவள் நெற்றியில் கோஹினூர் வைரத்தைப் பதித்திருக்கிறார். அதனால்தான் அவர் கவிக்கோ!



11

கவிஞர் கம்பதாசன் ஓர் எரிநட்சத்திரம்

1962ஆம் ஆண்டு சனவரித் திங்கள். பொங்கல் நாள். பாவேந்தர் பாரதிதாசனைக் காண அவர் குடியிருந்த சென்னை. இராமன் தெரு இல்லம் சென்றேன். வீட்டு முற்றத்தில் அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் அழுக்குச் சட்டை, கலைந்த சிகை, மெலிந்த உடலோடு சுருண்டு படுத்திருந்தார். வீட்டில் பாவேந்தரின் துணைவியார் பழனியம்மாள் இருந்தார். 'யார் இந்தப் பெரியவர்?' என்று கேட்டேன்.

"தெரியலியா? கம்பதாசந்தா! குடிச்சுப்பிட்டா இங்கதா வந்து படுத்துக்குவா.... இது இவனுக்குப் பாதுகாப்பான இடம் இல்லியா?" என்று பதிலிறுத்தார். நான் திகைத்துப் போனேன். தமிழ்நாட்டில் மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருந்த நேரம் அது.

ஐந்தடி எட்டங்குல நெடிய உருவம்; பொன்மேனி; கதர்ச்சட்டை; தோளில் பட்டுச் சால்வை; பெண்மை கலந்த கம்பீர ஆண்மை. இது கம்பதாசனின் பொற்காலத் தோற்றம். மங்கையர்க்கரசி படத்தில் கவிஞர் வித்தியாபதி வேடத்தில் தோன்றிய கம்பதாசனைப் பலரும் பார்த்திருக்கலாம். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்களுள் சுரதாவும் கம்பதாசனும் மிக்க அழகானவர்கள்.

புதுவை வில்லியனூரைச் சேர்ந்த இவருக்குப் பெற்றோர் சூட்டிய நாமகரணம் அப்பாவு. நாடகத்தில் நடித்த காலத்தில் இவர் சூட்டிக் கொண்ட பெயர் சி.எஸ். ர்ராஜப்பா. திரை உலகில் நுழைந்த பிறகு கம்பதாசன். புகழ்பெற்ற சாகித்ய கர்த்தாவும், பக்திப் பாடகருமான மதுரை மாரியப்ப சுவாமிகள் கம்பதாசனுடைய மாமன்.

சென்னை குயப்பேட்டை நகராட்சிப் பள்ளியில் எட்டாம் வகுப்புவரை படித்த கம்பதாசன், இளமையில் நாடக நடிகராக வாழ்க்கையைத் தொடங்கிச் சிறிது காலம் மண்ணுருக் கலைஞராகவும் (Moulder) ஜெமினி போன்ற படப்பிடிப்பு நிலையங்களில் பணி செய்திருக்கிறர். இது இவர் குலத்தொழில். இவருக்கு ஓவியம், நாட்டியம் போன்ற கலைகளில் பயிற்சி உண்டு. இனிமையாகப் பாடுவார்.

கம்பதாசன் முதன்முதலில் நடித்தபடம் திரௌபதி வஸ்திராபரணம்; முதன்முதலில் பாடல் எழுதிய படம் 'சீனிவாச கல்யாணம்.'

பாவேந்தர் பாரதிதாசன், உருதுக் கவிஞர் இக்பால், வங்கக் கவிஞர் ஹரீந்திரநாத், ச. து. சு. யோகி, சிறுகதைச் சிற்பி கு. ப. ரா, நாரண துரைக்கண்ணன் - இவர் பழகிய இலக்கிய வட்டம்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன், லோகியா, அசோக் மேத்தா ஆகியோர் இவர் பழகிய அரசியல் வட்டம். இவர்கள் கம்பதாசனைக் 'கவி! கவி!' என்று அழைத்து ஆர்வத்தோடு அன்பைச் சொரிந்தனர். கம்பதாசன் தம்மை ஒரு சோஷலிஸ்ட் என்று கூறிக்கொண்டார். ஜே. பி. யின் கூட்டங்களில் தாம் எழுதிய பாடல்களை இவரே பாடுவார். இரங்கூனில் நடைபெற்ற சோஷலிஸ்ட் மாநாட்டிலும் இவர் கலந்துகொண்டார்.

1946இல் சென்னையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் காந்தியடிகள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். அம்மாநாட்டின் பிரார்த்தனைப் பாடலைத் தாமே எழுதி இனிய குரலில் பாடிக் காந்தியடிகளின் பாராட்டைப் பெற்றார் கம்பதாசன்.

திரைப்படப் பாடல்களுக்கு முதன் முதலில் பெருந்தொகை வாங்கிய முதல் கவிஞர் கம்பதாசன் தான். கண்ணதாசன் திரைப்படத்துறையில் நுழைந்தபோது, "நான் கம்பதாசனைப் போல் புகழ்பெற வேண்டும்; அது

தான் என் இலட்சியம்" என்று கூறியது குறிப்பிடத்தக்கது. அன்றைய வெற்றிப் படங்களான மகாமாயா, ஞான சௌந்தரி, மங்கையர்க்கரசி, லைலா மஜ்னு, அமரகீதம், மர்ம வீரன் உட்பட ஐம்பது படங்களுக்கு மேல் பாடல் எழுதியுள்ளார்.

பழம்பெரும் இசையமைப்பாளரான நௌஷாத் இசையமைத்த ஆன், வானரதம் அக்பர், (மொகலே ஆஸம்), சங்கர் ஜெய்கிஷன் இசையமைத்த 'அவன்', ஓ.பி. நய்யார் இசையமைத்த பாட்டாளியின் சபதம் (நயா தௌர்) ஆகிய திரைப்படங்களுக்குத் தமிழில் பாட்டெழுதியவர் கம்பதாசன். நௌஷாத்தின் நட்பு இவருக்கு நீண்ட நாள் இருந்தது.

'ஆன்'படம் வெளியான போது கம்பதாசன் புகழேணியின் உச்சியில் இருந்தார். ஒரு நாள் தம் இயக்கத் தோழரான சங்கரன் இருப்பிடத்துக்கு வந்து, பத்தாயிரம் ரூபாய் அடங்கிய நோட்டுக் கட்டை மேசை மீது போட்டார். வழக்கம் போல் வீண் செலவு செய்யாமல் வங்கியில் போட்டு வைக்கும்படி சங்கரன் கவிஞருக்கு அறிவுரை கூறினார்.

"பணத்தைப் பாதுகாக்கச் சொல்கிறாயே! நீயொரு சோஷலிஸ்டா?" என்று அவரைக் கடிந்து விட்டுப் பணத்தோடு கவிஞர் சென்றார். சில நாட்களுக்குப் பிறகு யாரோ ஒரு டாக்சிக்காரன் கம்பதாசனைக் கைத்தாங்கலாக அழைத்து வந்து சங்கரனிடம் விட்டுச் சென்றான்.

அவர் பையைத் துழாவிப் பார்த்தார் சங்கரன். அதில் மூன்றே ரூபாய்கள் இருந்தன. டாக்சிக் கட்டணத்தைப் பல மடங்கு கூட்டிக் கொடுக்கும் வழக்கமும் கவிஞருக்கு உண்டு.

பேராசிரியர் அன்பழகன் தாம் பாவேந்தரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரை யொன்றில், கம்பதாசனின் ஆடம்பர வாழ்க்கை பற்றிக் கீழ்க்கண்டவாறு ஒரு குறிப்பை வழங்குகிறார் :

"அந்நாட்களில் கலையுலகில் செல்வாக்குப் பெற்றிருந்த கவிஞர் கம்பதாசனோடு என் இல்லத்துக்குப் பாவேந்தர் வருவார். சிறிது நேரம் உரையாடி விட்டு விடை பெறுவார்.

"ஒரு முறை கம்பதாசன் அவர்கள், பாவேந்தரிடம் கொண்டிருந்த பேரன்பு (பக்தி என்று கூடக் கூறலாம்) காரணமாக ஒரு பெரிய உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று உயர்ந்த மதுவகைகளையெல்லாம் அவரைப் பருகுமாறு செய்தார்.

"கவிஞருடன் நானும், தேசிய வார ஏட்டின் ஆசிரியர் ஒருவரும் சென்றிருந்தோம். கம்பதாசன், பாவேந்தர் போதும் என்றாலும் வற்புறுத்தி நிரம்பப் பருகுமாறு செய்துவிட்டார். அப்போது கம்பதாசன் நூறு ரூபாய் நோட்டுகளாகச் செலவிடும் வாய்ப்புப் பெற்றிருந்த காலம்! என் வருமானமெல்லாம் கவிஞருக்கே! என் குருநாதருக்கே!' என்று முழங்கியபடி ஆர்வத்தோடு செலவிட்டார். விடுதியிலிருந்து ஒரு பெரிய காரில் வீடு வந்து சேர்ந்தோம்."

"1946 ஆம் ஆண்டு பாவேந்தக்கு அண்ணா ரூ 25,000 நிதி வழங்கினார். அந்நிதிக்குக் கம்பதாசன் அளித்த தொகை ரூ. 501. அந்நாளில் அது மிகப் பெரிய தொகை" என்று சுரதா கூறியுள்ளார்.

கம்பதாசன், பாவேந்தரிடம் மோதிக் கொண்ட நிகழ்ச்சிகளும் உண்டு. 'காளமேகம்' படத்திற்குப் பாவேந்தர் எழுதிய பாடலொன்றுக்குத் திருத்தம் கூறினாராம் கம்பதாசன். உடனே பாவேந்தருக்குச் சினம் வந்துவிட்டது! "நீ எனக்கு ஆசானுமல்ல; என்னுடைய மாணவனும் அல்ல! உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ!" என்று கடிந்து கொண்டாராம். இதை முல்லை முத்தையா தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கம்பதாசனின் குடும்ப வாழ்க்கை ஒரு சோகக்கதை. ஆராய்ச்சி மணி என்ற படத்துக்கு நடனமாட வந்த 'சித்ரா'

என்ற கேரளப் பெண் இவர் முதல் மனைவி. அப்பெண் வள்ளத்தோள் மகாகவியின் பேத்தி என்பது குறிப்பிடத் தக்கது. சித்ரா சில காலமே இவருடன் வாழ்ந்தாள். அவளது பிரிவு கவிஞர் உள்ளத்தில் ஆறாத புண்ணாகவே இருந்தது. சித்ராவின் பிரிவுத் துயரத்தைக் காதலும் கண்ணீரும் என்ற கவிதையில்,

வீங்குவெயில் தனில்பழனம்
உழுவோன் நெற்றி
வேர்வையென என்கண்ணீர்
விரையுதேடி

கண் சமைத்த வெண்புருக்கை
அனைய என்றன்
கண்ணீரில் கொடுங்காலப்
பசி மாறாதோ?

என்று உருக்கமாகப் பாடி வெளிப்படுத்துகிறார்.

சித்ராவின் பிரிவிற்குப் பின் சுசன் என்ற கிறித்தவப் பள்ளியாசிரியையோடு சில காலம் குடும்பம் நடத்தினார். சித்ரா மூலம் இவருக்கு ஓர் ஆண்மகவும், சுசன் மூலம் இரண்டு பெண் மகவும் பிறந்தன.

கம்பதாசன் குறுகிய காலத்தில் நிறைய எழுதியிருக்கிறார். இவர் படைப்புக்கள் கம்பதாசன் கவிதைகள், கம்பதாசன் கதைகள், கம்பதாசன் நாடகங்கள் என்று புலியூர்க் கேசிகனால் மூன்று தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. வேளை வந்தது, புத்தர் புனர்ஜென்மம், கனவு, காணிக்கை, இரத்த ஓவியம் என்று நயம் மிக்க ஐந்து சிறு காப்பியங்கள் கம்பதாசனால் எழுதப்பட்டுள்ளன. காப்பியத்திற்குரிய கருப் பொருள்களைத் தேர்வு செய்வதில் இவர் வல்லவர்.

மகதத்தின் நாட்டியப் பேரொளி வாசவதத்தை, உபகுப்தன் என்ற புத்த பிட்சுவின் மீது கொள்ளும் ஒரு தலைக் காதல் பற்றியது 'வேளைவந்தது' என்ற காப்பியம்.

'புத்தர் புனர்ஜென்மம்' கௌதமனையும் காந்தியடிகளையும் தொடர்புபடுத்திப் பாடப்பட்ட கற்பனைக் காப்பியம். 'காணிக்கை' ஆதிசங்கரரின் பிறப்பு ரகசியம் பற்றியது. ஆதிசங்கரர் ஒரு கொல்லருக்கும் பார்ப்பன நங்கைக்கும் பிறந்தவர் என்பதை இக்காப்பியம் வெளிப்படுத்துகிறது.

'கற்கனி' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதை அகலிகை பற்றியது, சுவையானது. அகலிகை கூற்றாக அதில் சொல்லப்பட்ட கவிஞரின் கருத்துக்களும் புரட்சிகரமானவை.

முதிய கிழவரும் சிறுமிதனை - மணம்
முடித்தது முதலில் குற்றமன்றோ?
புதிய பருவ மனைவிதனைக் - கூடிப்
புணராதிருந்தது குற்றமன்றோ?

வந்த விருந்தினன் வேந்தெனினும் - மது
வார்த்துக் கொடுத்தால் மதிமயங்கி
எந்தக் குலத்துள பெண்தனையும் - கண்
இருளவே தொட்டிட எண்ணானோ?

முந்தைய ஆரியர் விருந்தினர்க்கு - மன
மொப்பி மனைவி தனையீந்து
விந்தை புரிந்திட்ட செய்தியெலாம் - பழ
வேத முணர்ந்தோர் அறியாரோ?

கௌதமக் கிழவன் தன்னைக் கைப் பிடித்தது பொருந்தாமணம் என்றும், வந்த விருந்தினர்க்குச், சோமபானத்தை மான்கறியோடு வழங்கி, மனைவியையும் விருந்தாகப் படைப்பது ஆரியரின் விருந்தோம்பும் பண்புதான் என்றும் சில துணிச்சலான செய்திகளைக் கவிஞர் வெளியிடுகிறார். ஆனால் இப்பாடலில் கௌதமன் அகலிகையைக் கல்லோடு பிணைத்துச் சுனையில் தள்ளிக் கொல்ல முயற்சித்திருப்பது புதிய செய்தி.

சிலப்பதிகாரத்தைப் பாரதிதாசன் விருத்தப்பாவில் மறுபடைப்புச் செய்திருக்கிறார். பாரதிதாசனுக்கு முன்பே கம்பதாசன் சிலம்பைப் புதுத்தமிழில் புனைந்திருக்கிறார்.

அது இன்னும் அச் சேறாமல் கையெழுத்துப் படியாகவே உள்ளது.

சமதருமக் கருத்துக்களை மையமாக வைத்துக் கவிஞர் நிறைய பாடல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கண்ணீர்ப் பொங்கல், செம்படவன், மேதினம், நீங்கள் சிலபேர்- என்பவை குறிப்பிடத்தக்கவை.

கம்பதாசனுக்கு ஷெல்லியின் மீதும் பைரனின் மீதும் பற்றுண்டு. 'அவன்' பாடல் பதிவுக்கு மும்பை. சென்றபோது, புத்தகக் கடையைத் தேடிச்சென்று கலீல் கிப்ரான் நூல்களை வாங்கியதாக உடன் சென்ற ஆந்திர மகாகவி ஆருத்ரா குறிப்பிட்டுள்ளார்.

'கவிதா' என்ற பெயரில் கவிதை இதழ் ஒன்றும் நடத்தியிருக்கிறார் கம்பதாசன். அதன் அலுவலகம் 'புரசைவாக்கம் குளம்' அருகில் இருந்தது.

தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் கலைச்சிகாமணி (இன்றைய கலைமாமணி) என்ற பட்டம் வழங்கி இவரைச் சிறப்பித்தது.

A cup of wine, a book of verse என்று தொடங்கும் உமர்கயாமின் பாடலில் மதுவும் மங்கையும் குறியீடுகள். ஆனால் பல கவிஞர்கள் அவ்விரண்டையும் கவிஞனுக்குரிய அங்கீகாரமாகவே நினைத்துவிட்டார்கள். அவ்வாறு நினைத்துக் கெட்டழிந்த தமிழ்க் கவிஞர்களுள் கம்பதாசனும் கண்ணதாசனும் தலையாயவர்கள்.

திவ்யமது! திராட்சைமது
ஊற்றடி பெண்ணே!
செக்கரென ரத்தஒளி
சேர்த்திடக் கண்ணே!

என்று கம்பதாசனும்

ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு
ஒரு கோலமயில் என் துணையிருப்பு

என்று கண்ணதாசனும்பாடி மதுவையும் மங்கையையும் ஆராதித்தனர்.

நகைச்சுவை நடிகர் வி.கே. ராமசாமி கம்பதாசனிடம் நெருங்கிப் பழகியவர். கவிஞரைப் பற்றி நினைவு கூர்ந்த அவர், “கம்பதாசன் எப்போதும் ஜின் னே விரும்பி அருந்துவார். அவரைப் போன்ற மது பக்தரை என் வாழ்நாளில் இதுவரை சந்திக்கவே இல்லை. அவரிடம் கவிதை எழுதக் கற்றுக் கொள்ள முயன்றேன். ஆனால் குடிப் பழக்கத்தைத்தான் என்னால் கற்றுக் கொள்ள முடிந்தது” என்று குறிப்பிட்டுள்ளார்.

குடியினாலும், கட்டுப்பாடற்ற வாழ்க்கையினாலும் குறுகிய காலத்தில் கம்பதாசன் வாழ்க்கைக் கனவுகள் கலையத் தொடங்கின. குடும்ப வாழ்க்கை சிதறியது. ஒரு முறை குடித்துவிட்டு வீதியில் தகராறு செய்தார் என்பதற்காகக் கைது செய்து சைதாப்பேட்டைக் காவல் நிலையத்தில் அடைத்துவிட்டனர். இதை அறிந்த பாரதிதாசன் சைதாப் பேட்டை சென்று பிணை கொடுத்து அவரை மீட்டு வந்தார்.

இளமைக் காலத்தில் கலைச் செருக்கோடும், மிடுக்கோடும் தலைநிமிர்ந்து வாழ்ந்த கம்பதாசன் முதுமையில் உதவிகோரித் தண்டூன்றித் தம் நண்பர்களைத் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. என்புருக்கி நோய் அவரை அரித்துத் தின்றது. குடி அவர் குடலையும் கல்லீரலையும் செயலற்றதாக்கி விட்டது. இராயப்பேட்டை மருத்துவமனையில், அவரைக் கேட்பாரற்றுத் தரையில் கிடத்தியிருந்தனர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் பரிந்துரையின் பேரில் அவருக்கு சி பிரிவில் இடமும் மருத்துவ வசதியும் வழங்கப்பட்டன. 23. 5. 1973 பிற்பகல் ஒரு மணியளவில் அவர் ஆவி பிரிந்தது.

“கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது, நலிந்த கலைஞர் ஐவருக்கு மாதம் ரூ 100. வழங்க ஏற்பாடு செய்தார். ‘உதவித்தொகை பெற்ற ஐவருள்

நானும், கம்பதாசனும், திரைக்கதை எழுத்தாளர் இளங்கோவனும் அடக்கம்” என்று சுரதா குறிப்பிட்டுள்ளார்.

பாரதியின் பிண ஊர்வலத்தில் ஆறுபேர் கலந்து கொண்டனர். கம்பதாசன் இறந்தபோது அவர் பிணத்தை ஒரு குதிரை வண்டியில் ஏற்றிக் கொண்டு அவருடைய உறவினர்கள் மூவர் மட்டுமே சென்றனர்; நண்பர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. பாரதி புதைக்கப்பட்ட கிருஷ்ணாம் பேட்டைச் சுடுகாட்டில் தான் இவரும் புதைக்கப்பட்டார்.

கம்பதாசன் ஒரு பிறவிக் கவிஞர்; கலைஞர். முறையான இலக்கண இலக்கிய அடிப்படை அவருக்கு இல்லை என்பது அவர் கவிதையில் பல இடங்களில் தென்பட்டாலும், உணர்ச்சி மிக்க கவிதை ஆவேசமும், கருத்துப் புதுமையும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

> “கவிஞர் என்றே அழைக்கத் தகுதி போதாத பல சாதாரண மனிதர்களைச் சாதிப்பற்று காரணமாகவும், அரசியல் சார்பு காரணமாகவும் போற்றிப் புகழ்ந்து, அவர்களுக்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்கப் பலர் இருந்தார்கள்; இப்போதும் பலர் இருக்கிறார்கள். ஆனால் இலக்கியத்தில் சாதனைகள் புரிந்த பெருங்கவி கம்பதாசனுக்குத்தான் யாருமே இல்லாது போய்விட்டார்கள். இது எவ்வளவு பெரிய கொடுமை!”

என்று குறைபட்டுக் கொள்கிறார் கம்பதாசனின் இலக்கியச் சுவைஞரான சோமசுந்தரம் என்பவர்.

கவிஞர் கம்பதாசன், திரைவானிலும், இலக்கிய வானிலும் திடீரென்று தோன்றிக் குறுகிய காலத்தில் தன்னைத்தானே எரித்துக் கொண்டு அணைந்து போன எரிநட்சத்திரம்.

12

கவிஞர் திருலோக சீதாராம்

கவிஞர் திருலோக சீதாராமை நான் முதன் முதலாக 1960இல் சேலத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவரிடம் நான் கேட்ட முதல் கேள்வி 'உங்கள் பெயர் திரிலோக சீதாராமா? திருலோக சீதாராமா?' என்பது.

'என் பெயர் திருவையாறு லோகநாத சீதாராமன்' என்று சிரித்துக்கொண்டே பதில் கூறினார்.

சேலத்தில் தமிழ் எழுத்தாளர் மன்றத்தைத் தொடங்குவதற்கு நானும் சேலம் கவிஞர் சேர, குமாரசாமியும் ஏற்பாடு செய்திருந்தோம்.

கவிஞர் சேர குமாரசாமி 'அமரன் அம்பிகாபதி' என்ற காப்பியத்தை எழுதியவர்.

அந்த விழாவில் கலந்து கொள்ள பழம்பெரும் எழுத்தாளரான நாரண துரைக் கண்ணன், திருச்சிக் கவிஞர்கள் அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார், திருலோக சீதாராம், சிறுகதை எழுத்தாளர் ஸ்ரீரங்கம் ஏ.எஸ். இராகவன் ஆகியோர் வந்திருந்தனர். விழா சிறப்பாக நடைபெற்றது.

அடுத்த நாள் எல்லாரும் ஒரு மகிழ்வுந்தில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனகல் காவிரி நீர் வீழ்ச்சிக்குச் சுற்றுலா சென்றிருந்தோம். இரண்டு நாளும் ஓயாத இலக்கிய மழை.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு திருச்சிக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் சிவாஜி அச்சகத்துக்குச் சென்று திருலோக சீதாராமிடம் பேசி மகிழ்வது என் வழக்கம். திருலோகம் ஒரு சுவைப் பேச்சர்.

திருச்சியில் அப்போது சிறப்பான ஓர் இலக்கிய வட்டம் இருந்தது. ஞானபீடப் பரிசு பெற்ற நாவலாசிரியர் அகிலன் அங்கு இரயில்வே அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

அந்த இலக்கிய வட்டத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் புலவர் கீரன், திருலோக சீதாராம், கவிஞர் கலைவாணன், ஏ. எஸ். இராகவன், திருச்சி பாரதன் ஆகியோர். இவ்வட்டத்தின் தலைமைப்பீடம் கவிஞர் அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியாரின் அச்சகம். அவர்தான் இவ்வட்டத்தின் புரவலர். மடிப்புக் கலையாத கதராடையும், நெற்றியில் பளிச்சென்ற திருநீற்றுப் பூச்சும், கனத்த சரீரமும், கனிந்த சாரீரமும், வெள்ளி வெற்றிலைப்பெட்டியும் ரெட்டியாரின் ‘டிரேட்மார்க்’. அவருக்குப் பச்சை மலையில் எஸ்டேட் உண்டு. அங்கு ஒரு பள்ளியும் நடத்தி வந்தார்.

எந்த இலக்கியவாதி அவரச்சகத்தைத் தேடிச் சென்றாலும், கட்டாயம் நல்ல ஒரு காப்பி கிடைக்கும்.

திருச்சி இலக்கியவட்டம் தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும், பெங்களூர், பம்பாய், தில்லி, கல்கத்தா தமிழ்ச் சங்கங்களுக்கும் சென்று இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்துவதுண்டு. மக்கள் எதிரில் நடத்தும் திருச்சி வானொலிக் கவியரங்கில், தவறாமல் முன் வரிசையில் அமர்ந்து தலையாட்டி ‘சபாஷ்’ போடத் தவறாது இந்த இலக்கிய வட்டம்.

‘திருலோகம்’ என்று எல்லாராலும் அன்போடு அழைக்கப்படும் சீதாராம் திருச்சி இலக்கிய வட்டத்தின் செல்லப்பிள்ளை. ஆன்மீகமும் இலக்கியமும் கலந்த கனிந்த பழத்தோற்றம்.

இவர் ஒரு பார்ப்பனராக இருந்தாலும் ‘பார்ப்பன புந்தா’ இல்லாமல் எல்லாரிடத்திலும் சரளமாகப் பேசிப் பழகுவார்.

இவருடைய தனிச்சிறப்பு மனப்பாடம். அதே ஊரில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பல நூல்களைக் 'கடவுள் துணையிலிருந்து முற்றிற்று' வரையில் மனப்பாடமாகச் சொல்லும் ஆற்றல் மிக்கவர். இவரும் தமது காப்பியமான 'கந்தர்வ கானத்தை' மேடையில் மனப்பாடமாக உணர்ச்சி பொங்கப்பாடுவார்.

ஆனால் இவர் சேலம் வந்திருந்தபோது, நாங்கள் பலமுறை விரும்பிக் கேட்டும் கந்தர்வகானத்தைப் பாட மறுத்து விட்டார். ஏன்? என்று வினவினோம். அதற்கு அவர் கூறிய காரணம் உள்ளத்தைப் பிழிவதாக இருந்தது.

> "அதை ஒருவரிடம் ஆயிரம் ரூபாய்க்கு அடகு வைத்துவிட்டேன். அக்கடன் தீரும் வரை மேடையில் பாடுவதில்லை - என்று அவருக்கு வாக்கு அளித்திருக்கிறேன்; அதை மீறமாட்டேன்"

என்றார் திருலோகம்.

கந்தர்வ கானமும், உதயம் என்ற சிறிய கவிதைத் தொகுப்பும் இவரது படைப்புகள். 'சித்தார்த்தன்' என்ற ஜெர்மன் புதினத்தைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். 'இலக்கியப்படகு' என்பது இவரது கட்டுரை நூல். பாரதி, பாரதிதாசன் பாடல்களை வெண்கலக் குரலில் ஏற்ற இறக்கத்தோடு இவர் பாடும்போது மேடை அவர் வசப்பட்டு மெய்மறந்திருக்கும். பாரதியைப் பற்றி ஆங்கிலத்திலும் பேசுவார்.

1946 ஆம் ஆண்டு பாரதிதாசன் நிதியளிப்பு தொடர்பான சர்வகட்சிக் கூட்டமொன்று திருச்சி பிஷப் ஹீபர் மைதானத்தில் நடைபெற்றது. அதில் திருலோக சீதாராமும் கலந்து கொண்டு பாரதிதாசனின் கவிதை நயங்களை விமர்சித்துப் பேசினார். அதைக் கேட்டு வியந்த அறிஞர் அண்ணா 'அக்கிரகாரத்து அதிசயப் பிறவிகளுள் இவரும் ஒருவர்!' என்று பாராட்டியதோடு, பாவேந்தரைப்

பற்றி, ஒரு பாடல் எழுதித் தருமாறு கேட்டு வாங்கித் திராவிட நாடு சிறப்பு மலரில் வெளியிட்டார்.

இவர் 1938இல் விழுப்புரத்தில் வாழ்ந்தபோது ‘பால பாரதம்’ என்ற திங்களிதழை நடத்திக் கொண்டிருந்தார். அப்போது தான் இவர் பாரதிதாசனை முதன் முதலில் சந்தித்தார். பின்னர் திருச்சியில் குடியேறிய பிறகு ‘சிவாஜி’யைத் தொடங்கி வார இதழாகவும், திங்கள் இதழாகவும் பல ஆண்டுகள் நடத்திக் கொண்டிருந்தார். கவிஞர் சுரதாவின் பாடல்களை முதன் முதலாகத் தொடர்ந்து சிவாஜியில் வெளியிட்டு, அவரைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத்தியவர் திருலோகம்தான். இதைச் சுரதாவே நன்றியுணர்வோடு பலமுறை என்னிடம் குறிப்பிட்டிருக்கிறார்.

> பாரதிதாசனின் நம்பிக்கைக்கும், நட்புக்கும், அன்புக்கும் உரிய பார்ப்பன நண்பர்கள் இருவர். ஒருவர், திருவள்ளுவர் படத்துக்காக ஜனாதிபதி பரிசு பெற்ற ஓவியர் வேணுகோபால சர்மா; மற்றொருவர் திருலோக சீதாராம்.

ஓர் அமாவாசை நாள். காலையில் அனுஷ்டானங்களுக்குத் தயாராக இடுப்பில் பஞ்ச கச்சமும், கையில் தர்ப்பையுமாக நின்று கொண்டிருந்தார் திருலோகம். வாசலில் ஐந்தாறு கறுப்புச் சட்டைக் காரர்கள் வந்து திருலோக சீதாராம் வீடு இதுதானா? என்று விசாரித்தனர். அப்போது திருச்சியில் தி.க.வினர் குடுமி அறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நேரம். இந்தக் கூட்டத்தார் எதற்காக நம்மைத் தேடி வந்திருக்கிறார்கள் என்று திகைத்துப் போய் நின்றார் திருலோகம்.

“திருலோக சீதாராமைச் சந்திக்கும்படி பாரதிதாசன் சொல்லியனுப்பினார். தாங்கள் தானா?” என்று கேட்டார்கள் வந்தவர்கள்.

'வாத்தியார் அனுப்பியிருக்கிறாரா? வந்துவிட்டேன்' என்று சொல்லி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு புறப்பட்டார் திருலோகம்.

அந்தச் சமயத்தில் பாரதியாரின் மனைவி செல்லம்மாள் அவ்வூரில் ஓர் உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். பாரதிதாசனும் திருலோகமும் அவரைத் தேடிச் சென்றனர். வயது தளர்ந்த நிலையில் நின்று கொண்டிருந்த செல்லம்மாளைப் பார்த்ததும், பாரதிதாசன் அவரது காலில் விழுந்து வணங்கினார். இந்நிகழ்ச்சியைப் பற்றித் திருலோகம் என்னிடம் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

பார்த்து நீண்ட நாள் ஆகிவிட்ட காரணத்தால் பாரதிதாசனைச் செல்லம்மாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. யாரப்பா நீ என்று கேட்டார் செல்லம்மாள்.

'என்னைப் புரியவில்லையா அம்மா! நான் தான் வாத்தியார் சுப்புரத்தனம்' என்றார் பாரதிதாசன்.

சுப்புரத்தனமா? முரட்டுப் பயலாச்சே! இப்ப எப்படி இருக்கே?' என்று உரிமையோடு விசாரித்தார். சிறிது நேரம் பழைய நாட்களைப் பற்றிப் பேசிவிட்டு இருவரும் திரும்பினோம்."

1944ஆம் ஆண்டு திருச்சி வானொலியில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. இது வானொலியில் நடைபெற்ற இரண்டாவது கவியரங்கம்; பாரதிதாசன் தலைமை. கவிஞர் ச. து. சு. யோகி. பிச்சமூர்த்தி, திருலோக சீதாராம் ஆகியோரும் இக்கவியரங்கில் பங்கேற்றனர்.

✪ திருச்சி வானொலிதான் கவியரங்கம் நடத்திய முதல் வானொலி நிலையம்.

1946ஆம் ஆண்டும் பாரதிதாசன் தலைமையில் திருச்சி வானொலியில் பாரதி பற்றி ஒரு கவியரங்கம் நடைபெற்றது. அப்போது அவர் பாடிய தலைமைக் கவிதைதான் 'புது நெறி காட்டிய புலவன்' என்ற தலைப்பில் அவருடைய இரண்டாம் தொகுதியில் வெளியாகியுள்ளது.

இக்கவியரங்கில் நாவலர் சோமசுந்தரபாரதி, கி.வா.ஜ. ஆகியோரும் கலந்து கொண்டனர்.

1951ஆம் ஆண்டு திருச்சியில் பாரதிதாசனுக்கு மணிவிழா நடத்த ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்காக கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் ஒரு விழாக்குழு அமைக்கப்பட்டு நிதி திரட்டப்பட்டது. அக்குழுவில் திருலோகமும் ஒருவர். நடுவில் ஏற்பட்ட சில குழப்பங்களின் காரணமாக விழாக்குழு உடைந்தது. கி. ஆ. பெ. வும் குழுத்தலைவர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார். திருலோகமும் செயற்குழு உறுப்பினர் பொறுப்பை இராஜினாமா செய்துவிட்டார்.

பாரதிதாசனிடம் நிலைமையை எடுத்துச் சொல்லி அவரைச் சமாதானப்படுத்தத் திருச்சியிலிருந்து ஒரு குழு புதுவைக்குப் புறப்பட்டது. அக்குழுவில் திருலோகம், அன்பில் தருமலிங்கம், பராங்குசம் ஆகியோரும் வேறு சிலரும் இடம் பெற்றிருந்தனர்.

அங்கு நடந்ததைத் திருலோகம் தமது சிவாஜி இதழில் கீழ்க்கண்டவாறு ஒரு கட்டுரையில் விவரித்திருக்கிறார்.

“வீட்டு முற்றத்தில் சாய்வு நாற்காலியில், சிங்கம் படுத்துக் கிடப்பது போல் பாரதிதாசன் சாய்ந்திருந்தார். நண்பர்கள் என்னை முதலில் உள்ளே போகச் சொன்னார்கள். வாயிற்படியில் நுழைந்து இடைகழியில் சென்று அவர் நேரில் நின்றுவிட்டேன். கிட்டே போகத் துணிவில்லை. கவிஞர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

‘ரிஷைன் பண்ணிட்டியல்ல?’ என்று கேட்டார்.

‘ஆமாம்! ரிஷைன் பண்ணிட்டன்” என்றேன்.

‘அப்ப... வெச்சிடு போ’ - என்றார் கவிஞர்.

கையில் வைத்திருந்த விழாக்குழு சம்பந்தப்பட்ட தாள்களையெல்லாம் அப்படியே வைத்துவிட்டு வாசற்பக்கம் செல்லத் தொடங்கினேன்.

'நில்!' என்ற சொல் கேட்டு மீண்டும் திரும்பினேன்.

'ஆமாம்! உனக்கு என்னை முதலில் தெரியுமா? கி. ஆ. பெ. விசுவநாதத்தையா?'

'உங்களைத்தான் முதலில் தெரியும்!

'பின்ன ஏன் விசுவநாதன் விலகினதும் நீயும் விலகின? ஒரு வேளை அவர் உனக்கு நெல் அனுப்பமாட்டார்னு பயமா?'

பேசாமல் மௌனமாகச் சிறிது நேரம் நின்றேன். பிறகு மெதுவாக 'நான் பேசலாமா?' என்று கேட்டேன்.

'பேசு!' என்றார் பாரதிதாசன்.

'யாரை முதலில் தெரியும் என்றல்லவா கேட்டீர்கள்? உங்களையும் எனக்கு முதலில் தெரியாது; உங்கள் கவிதைகளைத்தான் எனக்கு முதலில் தெரியும். அதைத் தெரிந்து கொண்ட காரணத்தால் தான் உங்களைத் தெரிந்து கொண்டேன். ஆகையால் யாரும் நெல் அனுப்பி எனக்குப் படியளக்க வேண்டியதில்லை. உங்கள் கவிதைகள் என்னிடம் உள்ளன. அவற்றை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. உங்களைக் காட்டிலும் உங்கள் கவிதைகளே எனக்கு அதிகம் மதிப்புடையவை'' என்று வேகமாகப் பேசினேன்.

சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்த பாரதிதாசன் துள்ளி எழுந்தார். வழக்கம்போல் முழங்கால் வரையிலும் வேட்டியைச் சுருக்கிப் பிடித்துக் கொண்டார். சுற்றியிருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்.

'அவன்டா தமிழன்! நீ வேண்டியதில்லை! உன் கவிதை எனக்குப் போதும்னு சொல்றானே! அவன் மறத்தமிழன். அவன் அஞ்சா நெஞ்சுடையவன்' என்றார்; என்னை அருகில் இழுத்து அமர்த்திக் கொண்டார்.

பிறகு என்னுடன் உணவருந்தினார். உண்டபின் தாழ்வாரத்தில் பாயை விரித்துப் படுத்தேன். நல்ல தூக்கம்.

'கழுதை! என்ன இப்படி ஒரேயடியாத் தூங்கறே?' என்ற சத்தம் கேட்டு விழித்துப் பார்த்தேன். எதிரில் காப்பிக் குவளையோடு பாவேந்தர் நின்று கொண்டிருந்தார்.

சிவாஜி மலருக்குக் கவிதை வேண்டுமென்று அவரிடம் கேட்டுவிட்டு, நான் அரவிந்தர் ஆசிரமம் சென்று திரும்பினேன். 'பாட்டு வேணும்னு கேட்டியே' இந்தா என்று தாளை நீட்டினார் பாரதிதாசன்.

எழுத்தெல்லாம் புதியநடை
எண்ணமெலாம் தன்னுடைமை
எனவே நாட்டின்

பழுத்தபொதுத் தொண்டு செய்வான்
திருலோக சீதாராம்
பரப்பும் ஏடு

வழுத்துமோர் சிவாஜியெனல்
வண்டமிழ்நா டறியுமந்த
மைந்த னுக்குத்

தழைத்ததுவாம் பதினேழாண்
டென்றுரைத்தால் மகிழாத
தமிழ ருண்டோ?

இவனுயர்ந்தான் அவன் தாழ்ந்தான்
என்னும்இன வேற்றுமையோர்
அணுவும் இல்லான்

எவன்பொதுவுக் கிடர் சூழ்ந்தான்
அவன் தாழ்ந்தான் அஃதில்லான்
உயர்ந்தான் என்று

நுவல்வதிலே திருலோகன்
அஞ்சாநெஞ் சன்தக்க
நூற்கள் ஆய்ந்தோன்

அவனெழுதும் சிவாஜியெனும்
    வாரத்தாள் வாழியப்பல்
    லாண்டு நன்றே

பல்லேடும் கூடியொரு
    பழந்தமிழன் சீர்த்தியினை
    மறைக்கு மாயின்
வில்லோடும் அம்போடும்
    வரும்பகையைத் தனிநின்று
    வீழ்த்து வான் போல்

சொல்லோடும் பொருள்சிறக்கத்
    தூய் தமிழின் சீர்சிறக்க
    எழுது கின்ற

நல்லேடாம் சிவாஜிக்கு
    நல்லாசான் திருலோகன்
    நாளும் வாழ்க!

கவிதையைப் படித்து முடித்த நான் ‘மலருக்குக் கவிதை கேட்டால், என்னைப் பற்றி எழுதியிருக்கிறீர்களே!’ என்றேன்.

‘முட்டாளு! உனக்கு என்ன பஞ்சம் தெரியுமா? பணப் பஞ்சமில்லே, புகழ்ப் பஞ்சம்! உன் பெருமை உனக்குத் தெரியாது. நான்தான் அதை நாலுபேர் அறியச் சொல்லணும். சும்மா போடு! என் கையெழுத்தில்ல போட்டிருக்கேன்!’ என்றார். அவர் குழந்தை மனத்தையும், அன்பின் பெருமையையும் கண்டு மெய் சிலிர்த்தேன், இப்பாடல் சிவாஜியின் பதினேழாவது ஆண்டு மலரில் வெளியிடப்பட்டது.”

கடைசியாக நான் திருலோக சீதாராமைச் சந்தித்தது 1972 ஆம் ஆண்டு. அருட்செல்வர் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் ஆண்டுதோறும் அக்டோபர் திங்களில் சென்னை இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் காந்தி - வள்ளலார் விழா சிறப்பாக நடத்துவது வழக்கம்.

விழாப் பொறுப்பாளராக, அப்போது டாக்டர் அவ்வை நடராசன் இருந்தார். நான், அப்துல்ரகுமான், மீரா, சிற்பி, சக்திக்கனல், சிதம்பரநாதன என்று கவிஞர் பட்டாளமே ஆண்டுதோறும் அங்குக் கூடுவதுண்டு.

திருமண மண்டபத்துக்கு எதிரில் உள்ள 'நியூ உட்லண்டஸ்' தங்கும் விடுதியில் எங்கட்கு அறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும். மூன்று நாள்கள் தங்கியிருந்து அருட்செல்வர் செலவில் ஆனந்தமாக விழாவைக் கண்டு கழித்துவிட்டுத் திரும்புவோம்.

கவியரங்கத் தலைமைக்குத் திருலோக சீதாராம் அழைக்கப்பட்டிருந்தார். உடல் தளர்ந்த நிலையில் மகன் துணையோடு வந்திருந்தார். இரவில் வயிற்றுப்போக்கு. மருத்துவரை அனுப்பி அவரைக் கவனிக்கும்படி விழாக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர். அடுத்த நாள் முற்பகலில் கவியரங்கத் தலைமையேற்று நிறைவு செய்தார் திருலோகம்.

இக்கவியரங்கில் அப்போது பச்சையப்பன் கல்லூரி மாணவராக இருந்த வைரமுத்துவும் கலந்து கொண்டார். எதிர்காலத்தில் வைரமுத்து சிறந்த கவிஞராக மாறுவார் என்பதற்கு அவர் பாட்டு வரிகளில் மின்னிச் சிதறிய சில உருவகங்கள், சொற்றொடராக்கங்கள் கட்டியம் கூறின.

கவியரங்கம் முடிந்ததும் திருலோக சீதாராமைப் பார்த்து, 'எப்படி இருக்கிறீர் கவிஞரே?' என்று கேட்டேன்.

"சருகு அரிப்பதிலேயே என் வாழ்நாள் கழிந்துவிட்டது. இன்னும் குளிர்காய முடியவில்லை!" என்று வருத்தத்தோடு சொன்னார். சென்னையிலிருந்து ஊர் திரும்பிய சில திங்களுக்குள் அவர் இறந்து விட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது.

சில ஆண்டுகட்குப் பின் வானொலி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நான் திருச்சி சென்றிருந்தபோது, அங்கிருந்த நண்பர்களிடம் திருலோகத்தைப் பற்றிச் சில

செய்திகள் திரட்ட விசாரித்தேன். அவர் குடும்பம் திருச்சியை விட்டுச் சென்றுவிட்டது என்றும், அக்குடும்பத்தினர் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாது என்றும் கூறிவிட்டனர்.

கவிதையைப் பற்றிய அவரது கருத்துக்கள் சில

"பாட்டினைப் போல் ஆச்சரியம்
பாரின்மிசை இல்லையடா!

என்கிறார் பாரதி. இது தான் கவிதை என்று வார்த்தைகளால் வகுத்துரைக்க ஒண்ணாத பேரனுபவம் கவிதை. இனிமை, உணர்ச்சி, இசை, தெளிவு இத்தனையும் கலந்த ஒரு கலவை கவிதை என்பது என் கருத்து.

மலையும் மடுவும், வானும் கடலும், மானும் புலியும் என்று இப்படித் தோன்றும் படைப்பு; இன்பம் துன்பம், வெற்றி தோல்வி, பிறப்பு இறப்பு இப்படியாக இயல்கின்ற வாழ்க்கை - ஒன்றையொன்று பின்னிக் கிடக்கின்ற முரண்தொடை போன்று தோன்றுகின்றன. சாதாரண மனிதர் கண்களுக்குப் பொருள் விளங்காத புதிர் இது.

கவி உள்ளத்தில் இந்த வேறுபாடுகளைக் கடந்து நிற்கின்ற ஒருமை, முரண்பாடுகளை வென்ற அழகு புலனாகிறது. அந்த அமைதியை, அழகை, அர்த்தத்தை, அதை உணர்ந்து கொண்டதனால் விளைந்த இன்பத்தை வாய்விட்டுக் கூறவேண்டுமென்ற எழுச்சியில் கவிஞன் பாடுகிறான்.

இலக்கியப் படைப்புக்குக் காலப்போக்கும் சூழ்நிலையும் கூடக் காரணமாகின்றன. சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரம், காதல் போன்ற எல்லாத் துறைகளிலும் மாறுதல் ஏற்பட்டு விட்டது. கால மாறுதல்களை ஒட்டிப் புதுப்புது மனோபாவங்களை இலக்கியம் பிரதிபலிக்கும் போது அது கவிதையிலும் தெளிவாகத் தெரியத் தானே செய்யும்."

'மூலப்பிரதி' என்று தலைப்பிட்ட தம் பாடலை, அவர் பல கவியரங்குகளில் பாடக் கேட்டிருக்கிறேன் அவருக்கு மிகவும் பிடித்த பாடல் அது '

முன்பொரு பாடல் எழுதினேன் - அந்த
மூலப் பிரதி கைவச மில்லை

(முன்பொரு)

எழுதிய பாடல் ஒன்றினை வீட்டின்
எரவா ணத்தில் செருகி யிருந்தேன்;
பழுது வந்தது; பார்த் திருந்தவர்
பாடலை எடுத்துப் பதுக்கிக் கொண்டார்.

(முன்பொரு)

இன்ப மென்றொரு தலைப்பிட் டந்த
இனிய பாடலை எழுதிய நினைவு;
துன்பம் வந்து சூழும் போது
துணைசெயக் கூடும் தொலைந்துபோ யிற்று

(முன்பொரு)

வாய்மை என்றொரு வாசகம் வைத்து
வண்ணப் பாடலை எழுதிய துண்டு;
பொய்மை இருளில் பொன்விளக் காகும்,
பொக்கென மறைந்து போயிற் றென்செய?

(முன்பொரு)

வெற்றி என்ற விளக்கம் தந்தொரு
வீரியச் சொல்லை விளம்பிய துண்மை;
முற்றும் தோற்று விட்டபோ தெனக்கு
மூளும் நற்றுணை, முழுதும் காணோம்!

(முன்பொரு)

இருந்த இடத்தில் இருந்த படிஅவ்
வின்னிசை கேட்டே இருந்தேன் இங்கு
வரும்போ தெனக்கு வழித்துணை யாக
வந்தது, இடையில் வழிப்பறி போக!

(முன்பொரு)

ஏட்டுப் பிரதியை எடுத்தவர் தந்தால்,
இனிய பாடலைக் கற்றவர் சொன்னால்,
காட்டில் இருளைக் கடந்திடல் ஆகும்
கருணை செய்தவர் ஆவீர், ஐயா!

முன்பொரு பாடல் எழுதினேன் - அந்த
மூலப் பிரதி கைவசம் இல்லை

ஒரு முறை திருலோகம் ஒரு வார இதழுக்குப் பேட்டியளித்தபோது, பாரதிக்குப் பிறகு சிறந்த கவிஞர் யார்? - என்று இவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

'யார்!' என்று கூறிப் பெருமிதத்தோடு தம்மைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார் என்று எழுதியது அந்த ஏடு. 'நான்தான்' என்று பொருள் தரும்படி இருந்தது அந்தச் சிரிப்பு.

பாரதிக்குப் பின் சிறந்த கவிஞனாகத் தாம் மதிக்கப்பட வேண்டும் என்ற ஆசை அவருக்கிருந்தாலும், அவருடைய படைப்புகள் எதுவும் மக்களைச் சென்றடையவில்லை. அவர் கவிதைப் படைப்பு மிகச் சொற்பம். அவர் பேச்சில் எட்டிய உயரத்தை, எழுத்தில் எட்ட வேண்டும் என்று அவர் முயற்சி செய்யவில்லை.

13

புரட்சித் துறவிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டு மூன்று பெரும் ஞான குருக்களைப் பாரதத்தில் தோற்றுவித்தது. வடக்கில் இராமகிருஷ்ணர்; தெற்கில் வடலூர் இராமலிங்க அடிகளும், நாராயண குருவும்.

தமிழகத்தில் தோன்றிய வள்ளலாரும், கேரளத்தில் தோன்றிய நாராயண குருவும் எதிர்கொண்ட ஆன்மீகச் சிக்கல்களும் சமூகச் சிக்கல்களும் ஒரே மாதிரியானவை. சாதியின் பேராலும், மதத்தின் பேராலும் ஒடுக்கப்பட்ட மக்களினமும், அவர்களை ஆட்கொண்ட அச்சமும் மடமையும் இவர்கள் போராட்டக் களங்களாயின.

வள்ளலாரைப் போலவே எளிய குடும்பத்தில் நாராயண குருவும் பிறந்தார். இருவருமே திருமண வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

தம்மை வளர்த்து ஆளாக்கிய தமையனார் குடும்பத்தின் வற்புறுத்தலுக்கு ஆட்பட்டுத் திருமணம் செய்து கொண்டார் வள்ளலார்.

நாராயண குருவோ திருமணத்துக்கு முதல்நாள் இரவு, வீட்டைவிட்டே ஓடிவிட்டார். ஆனால் கேரளநாட்டு ஈழவர் குல வழக்கப்படி மணமகளுக்கு இவருடைய தமக்கையார் தாலிகட்டி வீட்டிற்கு அழைத்து வந்தார்.

வள்ளலாரும் நாராயண குருவும் தம் மனைவியர்க்கு ஞானோபதேசம் செய்துவிட்டுத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர்.

தமது தொண்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளத் துறவு வாழ்க்கையே சிறந்தது என்று இருவரும் முடிவு செய்தனர்.

இளமைப் பருவத்தே வள்ளலார் முருக வழிபாடும், சிவ வழிபாடும் மேற்கொண்டு ஒழுகினார்; நாராயண குரு லிங்க வழிபாட்டில் ஈடுபட்டார். இறுதிக் காலத்தில் வள்ளலார் ஜோதி வழிபாட்டை அறிமுகப்படுத்தினார்.

நாராயண குருவும் கண்ணாடி விளக்கு வழிபாட்டைக் கோயில்களில் அறிமுகப்படுத்தினார். 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தையும் கோயில்களில் வழிபாட்டுப் பொருளாக்கினார்.

இருவருமே சனாதனக் கொள்கையை எதிர்த்தனர்.

சாதியிலே மதங்களிலே
சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே
கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து
அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர்
அழிதல் அழகலவே

என்று மக்களுக்கு அறிவுறுத்திய வள்ளலார், நீதியிலும் சன்மார்க்க நெறியிலும் அவர்களைச் செலுத்த உறுதிபூண்டார். நாராயண குருவின் கொள்கையும் அதுதான். இருவருமே இக்கொள்கைகளை நிறைவேற்ற சத் சங்கங்களைத் தோற்றுவித்தனர். ஆனால் அக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தி நாடெங்கும் பரப்பும் முயற்சியில் இருவரும் வேறுபட்டனர்.

துறவு பூண்ட நாராயண குரு கன்னியாகுமரி மாவட்டத்தில், உள்ள மருந்துமலையில் ஆறாண்டுகள் தனிமையில் தவம் மேற்கொண்டு, கேரளத்தில் உள்ள சிவகிரியில் தமது பணியைத் தொடங்கினார். அம்மலையில்

மாடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவனும், வனக்காவலர் ஒருவரும் இவருக்கு வாய்த்த முதல் சீடர்கள்.

சிவகிரியில் ஓர் ஆசிரமத்தை நிறுவிக் கோயிலொன்று எழுப்பி, அதில் சிவலிங்கத்தை நிறுவும் திருப்பணியை மேற்கொண்டபோது, கேரளத்து நம்பூதிரிகள் அதை எதிர்த்தனர்.

> "இது ஈழவரின் சிவலிங்கம்! உங்களுக்கும் இதற்கும் தொடர்பில்லை; உங்கள் கோயில்களில் நுழைய விடாமல் இவர்களை ஒதுக்கினீர்கள். ஆண்டவனை நாங்கள் எங்கள் கோயிலுக்கு அழைத்து வந்திருக்கிறோம். நீங்கள் இதில் குறுக்கிட வேண்டாம்!"

என்று உரத்த குரலில் சொன்னார்.

கேரளத்தில் இவர் ஆலயப் பிரவேச முயற்சியைத் தொடங்கியபோது, இவரைச் சமாதானப் படுத்துவதற்காக காந்தியடிகள் கேரளம் வந்தார்.

> "இங்கு விலங்குகளையும்விடக் கேவலமாக வாழும் தாழ்த்தப்பட்ட மக்களைத் தன்மானம்மிக்க மனிதர்களாக மாற்றும் முயற்சியில் நான் ஈடுபட்டிருக்கிறேன்"

என்று காந்தியடிகளுக்குக் குரு விளக்கினார்.

மேலும், 'இந்து சமயத்தில் விலங்குகளாக வாழ்வதை விடத் தம்மை மனிதர்களாக உயர்த்திக் கொள்வதற்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் கிறித்தவ சமயத்தில் சேருவதும் தப்பில்லை' என்றார். இவரைச் சந்தித்த பிறகே வார்தா திரும்பிய காந்தியடிகள் 'அரிஜன்' இதழைத் தொடங்கினார்.

கேளரத்தைச் சேர்ந்த டாக்டர் 'பல்ப்' (பத்ம நாபன்) என்ற பேராசிரியர் விவேகானந்தரைச் சந்தித்துத் தம்மைச் சீடராக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டியபோது,

> "நீங்கள் என்னைத் தேடி ஏன் வந்தீர்கள்? கேரளத்தில் உள்ள அருவிப்புரம் செல்லுங்கள்; உங்களுக்கு ஏற்ற குரு அங்கிருக்கிறார்!"

என்று சொல்லி, அவரை நாராயண குருவிடம் ஆற்றுப் படுத்தினார்.

டாக்டர் பத்பநாபனின் மகன்தான் இரண்டாவது குருவான நடராச குரு. இவர் பெங்களூரில் இளங்கலைப் பட்டமும், சென்னை மாநிலக் கல்லூரியில் முதுகலைப் பட்டமும், சைதாப் பேட்டைக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சியும் பெற்று, சிவகிரியில் நாராயண குரு நிறுவியிருந்த பள்ளிக்குத் தலைமையாசிரியராகித் தம் தொண்டைத் தொடங்கினார்.

நாராயண குரு இவரைப் பாரிசில் உள்ள சார்போன் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி, அங்கிருந்த ஹென்றி பெர்க்சன் (Henry Bergson) என்ற தத்துவ மேதையிடம் கல்வி பயின்றுவரத் தம் சொந்தச் செலவில் அனுப்பி வைத்தார்.

இளங்கவிஞராக இருந்த குமாரன் ஆசானையும் குரு தம் சீடராக ஏற்றுக்கொண்டு, அவரைப் பெங்களூருக்கு அனுப்பி ஒரு பெரிய சாஸ்திரியிடம் சமஸ்கிருதம் பயின்று வர ஏற்பாடு செய்தார்.

இராஜாராம் மோகன்ராய்க்குப் பின் வங்கத்தில் ஒரு பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டிருந்தது. குரு, ஆசானை வங்காளத்துக்கு அனுப்பி வங்கமொழியையும் வங்கக் கலை இலக்கியங்களையும் தெளிவாகக் கற்று அறிந்துவரப் பணித்தார்.

தாகூருடன் ஆசானுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.

மலையாளம், சமஸ்கிருதம், வங்காளம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் புலமை பெற்றிருந்த கவிஞர் குமாரன் ஆசானின் படைப்புகள் கேரளத்தில் பெரும் அறிவுப் புரட்சியையும், சமுதாயப் புரட்சியையும் தோற்றுவித்தன.

நாராயண குரு தமது இயக்கத்தைப் பரப்ப ஆன்மீகம், கல்வி, சமூகத்தொண்டு ஆகிய பணிகளுக்கென்று தனித்தனியாக அறக்கட்டளைகள் நிறுவினார். நாடெங்கும் கல்விக் கூடங்களோடு கூடிய ஆசிரமங்களைத் தோற்றுவித்தார். இருபது இளைஞர்களுக்குச் சன்னியாசம் வழங்கிச் சீடர்களாக்கி அவர்களைத் தமது இயக்கப் பணிகளில் ஈடுபடுத்தினார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் வழிபாட்டுக்காக ஊர்தோறும் கோயில்களை எழுப்பினார்.

கேரளத்தில் குக்கிராமங்களில்கூட உட்கார்ந்த நிலையில் நாராயண குருவின் சிலைகளைக் காணலாம்.

'குரு' என்னும் சொல் கேரளத்தில் நாராயண குருவைத்தான் குறிக்கும்.

தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் கவிதைபாடும் ஆற்றல் பெற்ற நாராயண குரு நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். திருக்குறளை மலையாளத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். நாராயண குரு தமது சமகாலத்தவரான வள்ளலாரைச் சந்தித்துத் திருக்குறள் பாடம் கேட்டதாக அவர் வரலாற்றில் குறிப்பொன்று காணப்படுகிறது.

நாகர் கோவிலில் ஒரு புத்தகக் கடையில் இளமைக் காலத்தில் அவர் பணி செய்தபோது, தேவார திருவாசகங்களையும் வைணவப் பிரபந்தங்களையும் விரும்பிப் படித்திருக்கிறார்.

ஓர் இயக்கம் வளர்வதற்கும், வலுப்பெறுவதற்கும் அறிவாற்றலும் செயல்திறனும் மிக்க சீடர்கள் தேவை.

இயேசுவுக்குப் பீட்டரும், நபிகள் நாயகத்துக்கு உமரும், இராமகிருஷ்ணருக்கு விவேகானந்தரும் சீடர்களாக வாய்த்தது ஒரு பெரும் பேறு.

இன்று நாராயண குருவின் இயக்கத்தால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் கேரளத்தில் சிறந்த அறிவியல் மேதைகளாகவும், இலக்கிய மேதைகளாகவும், கணித மேதைகளாகவும், கலைஞர்களாகவும் விளங்கக் காணலாம்.

மூன்றாவது குருவான நித்யசைதன்யர் ஓர் அறிவுக் களஞ்சியம். இந்த நூற்றாண்டில் முகிழ்த்த புதிய துறைகளான உளவியல் சார்ந்த மொழியியல் (Psycho Linguistic), சமூக மொழியியல் (Socio Linguistic) ஆகியவை பற்றிக்கூட அவர் நூல்கள் எழுதியுள்ளார். அவர் பல்துறை அறிஞர்.

வள்ளலார் தமது கொள்கையைப் பரப்ப நாடெங்கிலும் சன்மார்க்க சங்கங்களைத் தோற்றுவித்தார். ஆனால் அவற்றை நடைமுறைப் படுத்தும் திட்டங்களை உருவாக்கும் முன்பு மறைந்துவிட்டார் என்பதுதான் உண்மை. ஆன்மீகத் துறையில் நாராயண குருவையும் கடந்து உயர்ந்த சிகரங்களைத் தொட்டவர் வள்ளல் பெருமான்.

அருட்பெருஞ் சோதி
தனிப் பெருங் கருணை!

என்ற அவருடைய மந்திரம் ஆன்மிகத்தின் உயிர் நாடி.

நடராஜகுரு போலச் செயல்திறன் மிக்க சீடர்கள் வள்ளலாருக்கு வாய்க்கவில்லை என்பது உண்மை.

இந்நூற்றாண்டின் முற்பகுதியில் ஊர்தோறும் சன்மார்க்க சங்கங்கள் நன்கு இயங்கிக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. இன்று அவற்றின் செயல்பாடுகள் அருகிக் கொண்டிருக்கின்றன. மக்கள் கவனத்தை அரசியலும் கேளிக்கைகளும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

அருட்செல்வர் மகாலிங்கம் தொடங்கியுள்ள இராமலிங்கர் பணிமன்றம் வள்ளலாரின் கொள்கையை

விழாக்கள் மூலமும், நூல் வெளியீடுகள் மூலமும் பரப்பி, சன்மார்க்க இயக்கத்துக்குப் புத்துயிர் கொடுக்க முயற்சி மேற்கொண்டுள்ளது. இம்முயற்சி போதாது.

எந்த ஓர் இயக்கமும் பரவலான அமைப்பு ரீதியில் இயங்காவிட்டால் வளர்ச்சி பெறாது. கிறித்தவப் பாதிரிமார்களைப் போல, இராமகிருஷ்ண மடத் துறவிகளைப் போலத் தன்னார்வத் தொண்டர்கள் சன்மார்க்க இயக்கத்துக்குத் தங்களை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள வேண்டும். ஊரன் அடிகளைப் போல இன்னும் இருபது பேராவது துறவுநிலை. மேற்கொண்டு வள்ளலாரின் கொள்கையைப் பரப்ப முன் வரவேண்டும். மாவட்டந்தோறும் கல்விக் கூடங்களோடு கூடிய சன்மார்க்க சங்க வளாகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும். அவை யாவும் ஓர் அமைப்பாக இயங்க வேண்டும்.

வள்ளலாரின் சன்மார்க்க இயக்கம் தமிழர்களுக்காகத் தமிழ்ப் பண்பாட்டில் ஊறிப் பிறந்த இயக்கம். இந்த இயக்கத்தை வளர்க்கும் முயற்சியில் இன்னும் பல அருட் செல்வர்கள் பங்கேற்க வேண்டும். வள்ளலார் மூட்டிய அடுப்பு நெருப்பு அணையாமல் பார்த்துக் கொள்வதாலோ, நாள்தோறும் ஐம்பது பேருக்கு அன்னதானம் வழங்குவதாலோ அருட்பிரகாச வள்ளலாரின் நோக்கங்கள் முற்றுப் பெறா. நாராயண குருவின் அணுகுமுறை தமிழ்நாட்டுச் சன்மார்க்கிகளின் உள்ளத்தில் உருவாக வேண்டும்.



14

காஷ்மீரும் காஷ்மீர் ரோஜாவும்

நேருவை 'காஷ்மீர் ரோஜா' என்று குறிப்பிடுவதில் உருதுக் கவிஞர்களுக்குக் கொள்ளை விருப்பம். காரணம், காஷ்மீரில் வாழ்ந்த புகழ்பெற்ற 'பண்டிட்' குடும்பத்தைச் சேர்ந்தவர் நேரு. அவருக்குக் காஷ்மீர் மீதும் காஷ்மீரப் பண்பாட்டின் மீதும் அளவுகடந்த பற்றும் காதலும் உண்டு. அவருடைய முன்னோர்கள் காஷ்மீரை விட்டு உ. பி. யில் உள்ள அலகாபாத்திற்கு இடம் பெயர்ந்து அங்கேயே நிலைத்துவிட்டனர்.

'நெஹ்ரு' என்ற காஷ்மீரிச் சொல்லுக்குக் 'கால்வாய்க் கரைக்காரர்' என்று பொருள். நேருவின் முன்னோர்கள் புகழ்பெற்ற பெரும்புலவர்களாக மொகலாயப் பேரரசர்களின் அவையை அலங்கரித்தவர்கள். அப்போது, வளமான கால்வாய்க் கரையில் அவர்களுக்கு அரசு மானியமாக நிலம் ஒதுக்கப்பட்டது; கால்வாய்க் கரையில் செல்வாக்கோடு வாழ்ந்த அவரது முன்னோர்களின் பெயரோடு 'நெஹ்ரு' என்ற அடைமொழியும் ஒட்டிக் கொண்டது.

எனவே நேரு குடும்பத்துக்கும் காஷ்மீருக்கும் உள்ள உறவு புலனாகும். இந்த உறவே இன்றைய காஷ்மீர்ச் சிக்கலுக்குக் காரணம் எனக் கருதப்படுகிறது.

ஆங்கிலேயர்கள் நமக்குச் சுதந்திரம் தந்தபோது, பிளவுபடாத இந்திய எல்லைக்குள் இருந்த சுமார் 600 குறுநில மன்னர்கள் தங்கள் விருப்பம் போல் இந்திய

யூனியனோடோ, பாக்கிஸ்தானோடோ தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட நிலபரப்பை ஐக்கியப்படுத்திக் கொண்டனர். அப்போது காஷ்மீரை ஆண்ட ஹரிசிங் (டாக்டர் கரண்சிங்கின் தந்தை) 1947 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் நாள் தம் ஆட்சிக்குட்பட்டிருந்த நிலப்பரப்பை இந்திய யூனியனோடு சேர்த்துக் கொள்ள விருப்பம் தெரிவித்து அது தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அப்போது காஷ்மீர்ப் பள்ளத்தாக்கில் சில இடங்களில் கலவரம் ஏற்பட்டது. அதை ஒரு காரணமாக வைத்து அப்போது கவர்னர் ஜெனராக இருந்த மவுண்ட் பேட்டன் பிரபு, 'காஷ்மீர் மக்களின் விருப்பத்தை வாக்கெடுப்பின் மூலம் அறிந்த பிறகே காஷ்மீரை இந்திய யூனியனோடு சேர்ப்பது பற்றி முடிவு செய்யலாம்' என்று காஷ்மீர் அரசர் ஹரிசிங்கிற்கு ஒரு கடிதம் எழுதினார்.

அப்போது இந்தியப் பிரதமராக இருந்த நேரு காஷ்மீரில் உருவான புயலையோ, மவுண்ட் பேட்டன் கடிதத்தைப் பற்றியோ கண்டு கொள்ளவில்லை.

மற்ற அரசர்கள் எல்லாரும் தங்கள் விருப்பம்போல் இந்திய யூனியனோடோ, பாக்கிஸ்தானோடோ சேரலாம் என்று அனுமதி அளிக்கப்பட, காஷ்மீர் அரசுக்கு மட்டும் இப்புதிய நிபந்தனை எதற்காக என்று நேரு கேள்வி எழுப்பியிருக்க வேண்டும். அவர் அப்போது ஏனோ மௌனமாக இருந்துவிட்டார்.

காஷ்மீர் விவகாரத்தை நாமே அப்போது எளிதாகத் தீர்த்துக் கொண்டிருக்க முடியும். கிளர்ச்சி செய்த நிசாம் அரசை இந்திய யூனியனுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்த படேலின் இரும்புக்கரம் காஷ்மீரிலும் அதே நடவடிக்கையை மேற்கொண்டது. காஷ்மீரின் மூன்று மாவட்டங்களை இந்தியப்படை தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டது. இன்னும் இரண்டு மாவட்டங்களே இருந்தன. அதையும் இன்னும் ஒரு

வாரத்தில் இந்தியப்படை கைப் பற்றித் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருக்க முடியும். இந்தச் சூழ்நிலையில் நேரு, காஷ்மீர்ப் பிரச்சனையைத் தேவையில்லாமல் ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் சென்றார்.

அதுவே இன்றுவரை நமக்குத் தீராத தலைவலியாக மாறிவிட்டது.

1948 ஆகஸ்டு 13 ஆம் நாள் ஐக்கிய நாடுகள் மன்றப் பாதுகாப்புச் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

அதனபடி இரு நாடுகளும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். தான் கைப்பற்றிய காஷ்மீர்ப் பகுதியை விட்டு பாகிஸ்தான் வெளியேற வேண்டும், மக்களின் கருத்தையறியக் காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதே அத்தீர்மானத்தின் சரத்துக்கள்

பாகிஸ்தான் அத்தீர்மானத்துக்கு மதிப்பளித்துத், தான் கைப்பற்றிய பகுதியை விட்டு வெளியேறவில்லை. அதனால் காஷ்மீர் மக்களின் பொதுக்கருத்தை அறிய மக்கள் வாக்கெடுப்பை நடத்த வேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

மேலே குறிப்பிட்ட இரண்டு தவறுகளால் காஷ்மீர்ச் சிக்கலை உருவாக்கியவரே பண்டித நேருதான். காஷ்மீர்ப் பிரச்சனையைச் சர்வதேச அளவில் பாகிஸ்தான் எடுத்துச் செல்வதற்கும் நேருவே வழிகாட்டி.

காஷ்மீர்ச் சிக்கலை உருவாக்கிய நேரு, தில்லியில் இருந்து கொண்டே காஷ்மீரில் ஒரு பொம்மை அரசை நிறுவி இயக்கத் தொடங்கினார். காஷ்மீரில் நடைபெற்ற முதல் சட்டசபைத் தேர்தல் பெரிய கேலிக் கூத்தாக முடிந்தது. ஷேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியின் சார்பாக 75 உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரஜா பரிஷத் சார்பில் போட்டியிட்டவர்களின் 'வேட்புமனுக்கள்

நிராகரிக்கப்பட்டன; வேறு கட்சிகளின் சார்பில் மனுச் செய்த வேட்பாளர்கள் சிறை செய்யப்பட்டனர்; தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபையோ நேருவுக்கும் ஷேக் அப்துல்லாவுக்கும் நடுவில் சிக்கிக் கொண்டு திண்டாடியது. இறுதியில் ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்பட்டார்.

ஷேக் அப்துல்லாவின் கைது, முஸ்லிம்களுக்கும் காஷ்மீர்ப் பண்டிதர்களுக்கும் இடையில் வெறுப்பும், பகையும், கலவரமும் ஏற்படுவதற்கு வித்தாக அமைந்தது. 1957, 1962 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற காஷ்மீர் சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரசைத் தவிர மற்ற கட்சிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. இச் செயல் காஷ்மீர் நிலைமையை மேலும் சிக்கலாக்கியது.

அமைதி குலைந்த காஷ்மீரில் அமைதியை நிலைநாட்ட நேரு சில புதிய முயற்சிகளை மேற்கொண்டார். 370ஆவது சட்டப் பிரிவைக் காஷ்மீரில் கொண்டு வந்து வேறு மாநிலங்களுக்கு இல்லாத சிறப்பு நிலையை அதற்கு வழங்கினார். ஆனால் இச்சட்டம் நிறைவேற்றப்படும்போது, அதை ஆதரித்து வாக்களிக்க காஷ்மீர்ச் சட்டப் பேரவையில் ஓர் உறுப்பினர் கூட வரவில்லை.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பொதுச்சட்டங்கள், மாநிலச் சட்டப் பேரவையிலும் கொண்டு வரப்பட்டு உறுதி (Ratification) செய்யப்பட வேண்டும். சட்டப் பேரவை சரியாக இயங்காத காரணத்தால், காஷ்மீரில் பல சட்டங்கள் அமல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. 1988இல் மதத் தீவிரவாதத்தை அடக்க நாடாளுமன்றத்தில் ஒரு தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் காஷ்மீருக்கு மிகவும் தேவையான சட்டம். ஆனால் அச்சட்டத்தைக் காஷ்மீர் சட்டப் பேரவையில் நிறைவேற்ற முடியவில்லை. அதனால்

அச்சட்டம் ஜம்மு காஷ்மீருக்குப் பொருந்தாத நிலை ஏற்பட்டது.

காஷ்மீர் மாநிலத்தில் 370ஆவது சிறப்புப் பிரிவைக் கொண்டுவந்ததால், பல மோசமான பின் விளைவுகள் ஏற்பட்டன.

காஷ்மீர் முஸ்லீம்களைத் திருப்திப் படுத்துவதற்காகவும், அங்கு அமைதியை நிலைநாட்டி ஆட்சியை நடத்துவதற்காகவும் அரசாங்கப் பணத்தை வாரி இறைத்தார் நேரு. என்றாலும் காஷ்மீரில் தீவிரவாதம் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டிருந்ததே தவிரக் குறையவில்லை.

காஷ்மீரில் கால் கொண்டிருந்த இந்தத் தீவிரவாதம் பிற மாநிலங்களிலும் காட்டுத் தீப்போல் பரவியது காலப்போக்கில், குறிப்பாக வடகிழக்குப் பிராந்தியங்களான, அசாம், திரிபுரா, மணிப்பூர் மாநிலங்களைச் சொல்லலாம். தங்கள் பகுதியில் பரவியிருக்கும் தீவிரவாதத்தைக் காரணம் காட்டித் தங்கள் மாநிலங்களுக்கும் 370ஆவது சட்டப்பிரிவின்படி சிறப்புநிலை வழங்க வேண்டுமென்று அவர்கள் வாதிடுகின்றனர்.

இந்திரா காந்தியின் காலத்தில் காஷ்மீர்ப் பிரச்சனை மேலும் சிக்கலடைந்தது. 1971ஆம் ஆண்டில் பாகிஸ்தானோடு நடைபெற்ற போரில் இந்தியா பெரும் வெற்றியைப் பெற்றது. அவ்வெற்றியின்போது பாகிஸ்தான் கைப்பற்றியிருந்த காஷ்மீர்ப் பகுதியை விட்டு வெளியேறும்படி இந்தியா கட்டாயப்படுத்தியிருக்கலாம். அதை இந்திரா காந்தி செய்யத் தவறிவிட்டார்.

சிம்லா ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்போது, அதில் இடம் பெற்ற 'வேறு ஏதேனும் சமாதான வழியில்' (any other peaceful means) என்ற வாசகத்தையாவது நீக்கும்படி

வற்புறுத்தி இருக்கலாம். அதையும் இந்திரா காந்தி செய்யவில்லை. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டுக் கராச்சி விமான நிலையம் வந்ததும், காஷ்மீர் மக்கள் தங்கள் உரிமையைத் தாங்களே முடிவு செய்து கொள்ளலாம் என்று துணிச்சலாகப் புட்டோ தம் கருத்தை வெளியிட்டார்.

1984ஆம் ஆண்டு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் ஃபாரூக் அப்துல்லாவின் அரசைக் கலைத்துவிட்டு, அவ்விடத்தில் ஊழல் மிக்க குல்ஷா தலைமையில் ஒரு பொம்மை அரசை இந்திரா காந்தி உருவாக்கினார். இச்செயல், திறமையான முதல்வரிசை அரசியல்வாதிகளை அரசியல் நீரோட்டத்திலிருந்து ஒதுங்கியிருக்கும்படி செய்துவிட்டுத் தீவிரவாதத்தை மேலும் தூண்டிவிட்டது.

இந்திரா காந்தியின் வெளிநாட்டுக் கொள்கை காஷ்மீர்ப் பிரச்சனையில் மோசமான திருப்பத்தை ஏற்படுத்தியது. ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் மாஸ்கோ தலையிட்டு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டபோது இந்திரா காந்தி அதற்குக் கண்டனம் தெரிவிக்கத் தயங்கினார்.

அமெரிக்காவும், தொழில் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளும் இந்திய உறவைவிட்டு ஒதுங்கிச் செல்வதற்கு இது காரணமாயிற்று. இச்சூழ்நிலையைப் பாகிஸ்தான் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு காஷ்மீர்த் தீவிரவாதிகளுக்குத் தேவையான போர்க் கருவிகளையும் மற்ற உதவிகளையும் அமெரிக்காவிடமிருந்தும் சீனாவிடமிருந்தும் பெற்றுக் கொண்டது.

நாடு சுதந்தரம் பெற்ற நாளிலிருந்து இன்று வரை காஷ்மீருக்காக ஒரு லட்சம் கோடி உருபாவுக்கும் மேல் இந்திய அரசு செலவிட்டிருக்கிறது.

காஷ்மீரின் பாதுகாப்பை முன்னிட்டு இந்தியப் படைபலத்தைப் பெருக்கும் நோக்கில் நம் நாட்டு வருவாயில் பெரும் பகுதியை இராணுவச் செலவுக்கு ஒதுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இந்த 'வெள்ளை யானை' நம் நாட்டு நிதியில் பெரும் பகுதியைத் தின்று ஏப்பமிட்டு நம்மை உலக அரங்கில் கடனாளியாக நிறுத்தி அவமானப்படுத்துகிறது.

ஆட்சிப் பீடத்தில் அமரும் இந்திய அரசியல் வாதிகளும் சரி, பாகிஸ்தான் அரசியல்வாதிகளும் சரி, மக்கள் கவனத்தைத் திசைதிருப்பும் உணர்ச்சிமிக்க கருவியாகக் காஷ்மீர்ப் பிரச்சனையை வைத்துக் கொண்டிருக்கிறார்களேதவிர, அதை நன்முறையில் தீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் நெருங்குவதில்லை. சில நேரங்களில் இது தொடர்பாக அரசியல் தலைவர்கள் மேற்கொள்ளும் நாடகங்கள் கோமாளித்தனமாக இருக்கின்றன.

பாகிஸ்தானுக்கோ, எரிந்து கொண்டிருக்கும் இப்பிரச்சனையைத் தீர்த்துக் கொள்வதைவிட இதை எரியவிட்டுக் கொண்டிருப்பதிலேயே அதிக ஆர்வம் உள்ளது. உண்மையான தீர்வில் அவர்களுக்கு ஆர்வமிருந்தால், சமாதானப் பேச்சு நடந்து கொண்டிருக்கும் போதே எல்லையில் பீரங்கித்தாக்குதல் நடத்த மாட்டார்கள்; வெளிநாட்டுத் தீவிர வாதக் கூலிப்படையை எல்லை தாண்டி அனுப்பமாட்டார்கள்.

பாகிஸ்தானை இரண்டு துண்டுகளாக உடைத்துக் கிழக்கில் ஒரு 'பங்களாதேஷ்' உருவாகக் காரணமாக இருந்த இந்திரா காந்தியின் செயல், பாகிஸ்தானியர் உள்ளத்தில் அழிக்க முடியா ஆழமான வடுவாக மாறியுள்ளது. அதற்குப் பழிவாங்கத் துடிக்கும் பாகிஸ்தான், காஷ்மீரை ஒரு கருவியாக்கப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

இப்பிரச்சனைக்குத் தீர்வுதான் என்ன? இதற்குப் பலரும் பலவிதமான கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா போன்ற உலக வல்லரசுகள், காஷ்மீர்ப் பிரச்சனையைத் தீர்ப்பதை விடக் கிழக்காசியாவில் தங்கள் மேலாதிக்கத்தை நிலை நிறுத்த ஒரு பகடைக்காயாகவே அதைப் பயன்படுத்தி வருகின்றனர்.

காஷ்மீர் முதலமைச்சராக உள்ள ஃபாரூக் அப்துல்லா காஷ்மீர்ப் பிரச்சனையின் தீர்வுக்கு ஒரு கருத்தை வெளியிட்டார். தங்கள் கைவசம் இருக்கும் காஷ்மீர்ப் பகுதிகளை இந்தியாவும் பாகிஸ்தானும் அவரவர்களே வைத்துக் கொள்ளலாம் என்பது அவர் வெளியிட்ட கருத்து. இந்திய அரசியல் கட்சிகள் இக்கருத்தை வன்மையாக எதிர்த்தன.

2000 ஆண்டு நவம்பர் 14 ஆம் நாள் மயிலை பாரதி வித்யாபவன் நிகழ்ச்சியில் பங்கு கெண்ட மூத்த அரசியல் தலைவர் சி. சுப்பிரமணியம் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்ட கீழ்க்கண்ட செய்திகளை இந்தி அரசியல் வாதிகளின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

“நடுநிலையாகச் செயல்படக் கூடிய மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தத்தின் மூலம் காஷ்மீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம். அல்லது மண்டேலா, கார்ப்பச்சேவ், கார்ட்டர் போன்ற உலகின் தலைசிறந்த தலைவர்களைக் கொண்ட குழுவின் மூலமும் தீர்வு காணலாம்.

“அல்லது ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற நீதிபதிகள், அறிவியல் வல்லுநர்கள், பாதுகாப்புத்துறையில் உயர்நிலையில் பணியாற்றியவர்கள், சிந்தனையாளர்கள் போன்ற ஆறு அல்லது எட்டு பேரைக் கொண்ட தனித்தனிக் குழுக்களை இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் அமைக்க வேண்டும்.

"தற்போது அதிகாரிகள், அரசியல்வாதிகள் பிடியில் சிக்கித் தவிக்கும் இப்பிரச்சனையை இக்குழுக்களிடம் ஒப்படைத்து விட வேண்டும். இரு குழுக்களும் கலந்து விவாதித்து, பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை வகுக்கலாம். மூன்றாவது நபரின் மத்தியஸ்தம் என்பது நமது நாட்டின் நன்மதிப்பை எவ்வகையிலும் குறைக்காது. மாறாக, நமது நன்மதிப்பை வெகுவாக உயர்த்தும்."



15

சூதாட்டக் கலாச்சாரம்

சூது என்ற சொல்லுக்கு வஞ்சனை என்று பொருள். வஞ்சனையாகச் செய்யப்படும் எல்லாச் செயல்களுமே சூதாட்டந்தான். மகாபாரதக் காலந் தொட்டே சூதாட்டத்தின் தீமை மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சூதாட்டம் பற்றி இந்தி எழுத்தாளர் பிரேம்சந்த் ஒரு கதை எழுதியிருக்கிறார். எதிரி நாட்டான் தன் நாட்டின் மீது படையெடுத்திருப்பதை அறியாமலே தொடர்ந்து மூன்று நாட்கள் ஓர் அரசன் சூதாடினான் என்பது அக்கதையின் கருப்பொருள். இக்கதையைப் பிரபல இயக்குநரான சத்யஜித் ரே திரைப் படமாகவும் ஆக்கியிருக்கிறார்.

சூதாட்டம் தீயது என்பதை வள்ளுவர் முதலாக எல்லா அறிஞர்களும் எடுத்துக் கூறியிருக்கின்றனர். தனது இரையாக நினைத்துத் தூண்டிற் புழுவை விழுங்கும் மீனைப்போல், சுவைக்காகச் சூதாட்டத்தில் இறங்கும் மனிதன் இறுதிவரை மீள முடியாமல் அதற்கே பலியாகிறான் (குறள். 931).

சூதாட்டத்தின் தீமை உணரப்பட்டும், பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை இப்பழக்கம், அரசர் செல்வர் ஆகியோரின் கேளிக்கையாகவும், பொழுதுபோக்காகவும் இருந்து வருகிறது. ஒவ்வோர் ஊரிலும் பொழுது போக்கு மன்றங்கள் (Recreation club) என்ற பெயரில் செல்வச் சீமான்களின் சீட்டாட்டம்தான் நடைபெறுகிறது. காவல்துறை இந்தச் சீமான்களை நெருங்குவதில்லை. சூதாட்டத்தைக் குற்றமாகக் கருதித் தண்டிக்க இந்நாட்டில்

சட்டமுண்டு. அதே சமயம் அதை வேறு வழிகளில் வளர்க்க அரசாங்க ஆதரவும் உண்டு. நம் நாட்டின் சீரழிவிற்கு இதுவே காரணம்.

சூதாட்டம் பண்டை நாளில் தனிமனிதனின் பாதிப்பாக மட்டும் இருந்தது. இன்று இது சமுதாயப் பாதிப்பாக மாற்றியிருக்கிறது. அரசியல், பொருளியல், விளையாட்டு, கலை, பரிசுச்சீட்டு, லாட்டரிச்சீட்டு என்று அங்கிங்கெனாதபடி எங்கும் பரவி, இந்திய நாட்டைச் சூதாட்டம் ஆக்கிரமித்திருக்கிறது.

வாக்களிக்கும் மக்களையும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சூதாட்டக் காய்களாக நகர்த்தும் கேவலமான செயலும், சட்டமன்ற உறுப்பினர்களைக் கடத்திச் சென்று தனித்தனியே விலைபேசும் ஈனச் செயலும் இன்றைய அரசியல் நடைமுறைகளாகிவிட்டன.

ஹர்ஷத் மேத்தா என்ற தனிமனிதன் பல்லாயிரம் கோடி பணத்தை ஊழல் செய்து, நம் நாட்டுப் பொருளாதாரத்தையே திணறடிக்கும் பொருளியற் சூதாட்டம் இந்நாட்டில் தானே நடைபெறுகிறது!

கிரிக்கெட் என்பது ராஜ விளையாட்டு. கிரிக்கெட் வீரர்கள் மனிதர்கள் அல்லர். இந்நாட்டு இளைஞர்களுக்கு அவதார புருஷர்கள்; இளம் பெண்களுக்கு மதுரமான மயக்கங்கள்! இன்று சூதாட்டத்தின் மூலம் நூறுகோடி மக்களையும் இவர்கள் முட்டாள்கள் ஆக்கிவிட்டார்கள்.

'ஒன்றைப் பெற்று நூறை இழக்கும் சூதாடிகளுக்கு வாழ்க்கை கிடையாது' (குறள். 932) என்பது வள்ளுவர் வாக்கு. சூதாட்டத்தில் ஒருநாள் வென்றவன் நூறு நாள் தோற்கிறான். இன்று நாட்டைக் காட்டுத் தீயாக வளைத்துக் கொண்டிருக்கும் லாட்டரிச் சீட்டுக் கொடுமையும் அப்படியே! ஒரு முறை நூறு ரூபாய் பரிசு விழுந்தால், மாதந்தோறும் நூறு ரூபாய்க்குப் பரிசுச்சீட்டு வாங்கும்

பழக்கம் வந்து அதற்கு அவன் அடிமையாகவே மாறி விடுகிறான். இவர்கள் வீட்டில் கடைசியாக ஈயப் பாத்திரங்கள்கூட மிஞ்சுவதில்லை.

இச்சூதாட்டத்தில் பாதிக்கப்படுபவன் பணக்காரன் அல்லன்; ஏழைகளும் கூலிக்காரர்களுமே. ஆனால் இக்கொடுமை அரசாங்கங்களின் அங்கீகாரத்தோடும் அரவணைப் போடும் நடைபெறுகிறது என்பதை எண்ணும்போது இரத்தக்கண்ணீர் வடிகிறது.

குதிரைப்பந்தயத்தால் குப்புறக் கவிழ்ந்த குடும்பங்கள் கணக்கில் அடங்காதவை. ஆனால் இன்றையத் தலைவர்கள் அரசியல் காரணங்களைக் காட்டி எல்லாக் கொடுமைகளையும் நியாயப் படுத்துவதில் வல்லவர்கள்.

இன்று தொலைக்காட்சிகளில் 'இலட்சாதிபதி ஆக விருப்பமா? கோடீசுவரன் ஆக விருப்பமா?' என்ற பெயரில் புதிய சூதாட்டம் பொது அறிவுச் சோதனை என்ற முக்காட்டில் பரபரப்போடு நுழைந்திருக்கிறது.

ஃபின்லாந்து போன்ற பணக்கார நாடுகளில் 'ஹூ வாண்ட் டுபி எ மில்லியனர்' என்ற பெயரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. நம்நாட்டுச் சராசரி வருமானத்தைப்போல் பல மடங்கு உயர்ந்தது ஃபின்லாந்தின் சராசரி வருமானம். அந்தப் பணக்கார நாட்டுக்கு இக்கேளிக்கை பொருத்தமாக இருக்கலாம். இந்த ஏழைநாட்டுக்கு இது தேவைதானா?

இப்பரிசுத் திட்டங்கள் மூலம் சில பேருக்கு இலட்சமும் கோடியும் கிடைத்து விட்டால் இந்தியப் பொருளாதாரம் சீர்திருந்தி விடுமா? ஏழ்மை ஒழிக்கப்படுமா? சில கோடீசுவரர்கள் மேலும் பெரிய கோடீசுவரர்களாக ஆவதற்குத் தானே இத்திட்டம்?

இத்தகைய சூதாட்டக் கலாச்சாரம் இந்திய நாட்டு இளைஞர்களின் குருதியோட்டமாகி விட்டது. உழைக்காமல் பணக்காரன் ஆகவேண்டுமென்ற எண்ணம் அவர்கள்

உள்ளத்தில் விதைக்கப்படுகிறது. சோம்பேறிகளாகவும், உழைப்பின் உயர்வை அறியாதவர்களாகவும், சுயமுயற்சியில் நம்பிக்கை அற்றவர்களாகவும், பகற்கனவு காண்பவர்களாகவும் சமூகத்தின் ஒரு பகுதியினர் உருவாக்கப்படுகின்றனர்.

ஒரு நல்ல அரசு தான் ஒரு நல்ல குடிமகனை உருவாக்க முடியும் (A perfect government makes a perfect citizen) என்பது கிரேக்கப் பழமொழி. ஜப்பானியர்களைப் போல் உழைப்பில் நம்பிக்கையுள்ள, வாழ்க்கையோடு போராடுவதற்குச் சளைக்காத ஓர் இளைஞர் சமுதாயத்தை உருவாக்க நமது அரசாங்கங்கள் பாடுபட வேண்டும். இல்லையேல் நம் நாட்டுக்கு மீட்சி இல்லை.

நாட்டு விடுதலைக்காகச் சொத்து, சுகம் யாவற்றையும் துறந்து போராடிய தன்னலமற்ற தியாகிகள் பரம்பரை மறைந்துவிட்டது. காந்தி, நேரு, காமராசர், அண்ணா போன்று மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்த தலைவர்கள் வாழ்ந்த காலத்தில் தீய சக்திகள் கட்டுக்குள் இருந்தன. இன்று அவை கட்டவிழ்ந்து தலை விரித்தாடுகின்றன.

இன்று 'தாதாக்கள்' அரசியல் கடிவாளத்தைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். நம் நாட்டைக் கலக்கிக் கொண்டிருக்கும் கிரிக்கெட் சூதாட்ட நாயகர்கள், பயங்கரவாதத்தை உலகில் பரப்பும் தாவூத் இப்ராகிமும், அவன் தம்பி அனீஸ் இப்ராகிமும் தான் என்பது அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

சூது என்பதற்கு 'உட்புரை' என்ற ஒரு பொருளுண்டு. உடலின் உட்புறத்தில் ஆழமாகச் சீழ்பிடிப்பதை உட்புரை என்பர். சூதாட்டம் என்னும் சீழ், இந்தியச் சமுதாயத்தில் ஆழமாகப் புரையோடி இருக்கிறது. அறுவை மருத்துவம் செய்து அகற்றாவிடில் நமக்கு நல்ல எதிர்காலமில்லை.

✪

பாவேந்தர் படைப்பில் அங்கதம்

கவிஞர் முருகு சுந்தரம்